

கல்கி
KALKI
12.6.1966 35 காசு

# டியாரா லானோலின் லோஷன் ஷாம்பூ

## தலை மயிரை பாதுகாக்க விரும்புகிறவர்களுக்கு!



இதர ஷாம்பூக்களை உபயோகித்து உங்கள் தலைமயிர் வரள்வதனால் நீங்கள் மனவேதனை படுகிறீர்களா? அப்படியானால் உடனே இந்த புதிய இணையற்ற, ஜே. கே. ஹெலன் கர்டிஸாரால் தயாரிக்கப்பட்ட லானோலின் லோஷன் ஷாம்பூவை உபயோகித்து பாருங்கள். இது உங்கள் தலை மயிருக்கு சக்தியையும், அழகான தோற்றத்தையும், பளபளப்பையும் அளிக்கவல்லது. முதல் உபயோகத்திலேயே, இந்தியாவின் ஒரே தயாரிப்பான லானோலின் லோஷன் ஷாம்பூவே, நீங்கள் விரும்பத்தக்க ஷாம்பூ என்பதை தெரிந்து கொள்வீர்கள். இதர ஷாம்பூவினால் இழந்த முக்கியமான சரும எண்ணெயை திருப்பி அளிப்பது போலிருக்கும் லானோலின்! டியாரா லானோலின் லோஷன் ஷாம்பூ அதிக நுரை தரக்கூடியது. ஒவ்வொரு தலை மயிருக்கும் போஷாக்களிக்கிறது. அதி விரைவில் அழுக்கையும் சிக்கையும் போக்குகிறது. உங்கள் தலை மயிரை உடனே உங்களிஷ்டப்படி அமைக்க முடிகிறது—மேலும் நீங்கள் நினைத்ததை விட அதிக அழகுடன் விளங்குகிறது.

டியாரா லானோலின் லோஷன் ஷாம்பூ
*உங்கள் தலை மயிருக்கு புத்துயிர் அளிக்கிறது.*

**ஜே.கே.ஹெலன் கர்டிஸ்**

*பூரண விநியோகஸ்தர்கள் :*
ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமிடெட்.
மதராஸ் . பம்பாய் . டெல்லி . கல்கத்தா.



mca-JKH-5656 C. TAM

பராபவ
வைகாசி - 30
ஜூன் - 12

கல்கி


## நினைவுத் திரையில்...



நன்றும் வேண்டும், என். எஸ். கிருஷ்ணனுக்கு! நம்மையெல்லாம் எத்தனை தடவை சிரித்துச் சிரித்து வயிற்றுவலி கண்டு தவிக்கப் பண்ணியிருக்கிறார்! அப்பேர்ப்பட்டவர் இந்தக் கிருஷ்ணபிடாரன் படத்தில் 'பாகவதர்' வேஷம் போட்டுக் கொண்டு திண்டாடித் தவிப்பது விதிப் பயனே யல்லவா? படத்தில் மிருதங்கம் வாசிக்கத் தெரியாமல் என். எஸ். கிருஷ்ணன் தவிப்பதையும், அவர் கையில் அகப்பட்டுக் கொண்டு மிருதங்கம் தவிப்பதையும் பார்க்கலாம். பாகவதரும் மிருதங்கமும் தவிப்பதைப் பார்த்து டி. ஏ. மதுரமும் தவிக்கிறார்!

கல்கி, ஜனவரி 16, 1942

## பொருளடக்கம்



பாரதம்
தேசத்துக்கே நாசவேலை!
மேலும் இது சரியாகத் திருப்புவோம்!
ஆளுங்கட்சியினர்
PK




அசோகவனத்தில் சீதை
தொழில் துறை
கண்ட்ரோல்
கோட்டா
லைசென்ஸ்
பெர்மிட்

மலர் 25 ✻ இதழ் 46



# காங்கிரஸ் ஆட்சியை நீக்குக!

**ராஜாஜி**

“மக்களின் விவகாரங்களில் தலையிடாமல் அரசாங்கம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளுமாயின், நமது அன்றாட நடவடிக்கைகளில் பத்தில் ஒன்பது பங்கை நாமே சர்க்காரின் உதவியின்றி நிர்வகித்துக் கொள்ளலாம்” என்று காந்தியடிகள் தாம் மரணமடைவதற்கு இரண்டாண்டுகளுக்கு முன் எழுதினார். இதில்தான் காங்கிரஸுக்கும் சுதந்திரக் கட்சிக்குமுள்ள வேறுபாட்டின் சாரம் இருக்கிறது. சர்க்காரின் அதிகாரம் விஸ்தரிப்பதையே சுதந்திரக் கட்சி முக்கியமாக ஆட்சேபிக்கிறது என்ற உண்மையை மற்ற எதிர்க் கட்சிகள் அழுத்தமாகப் புரிந்து கொண்டால் போதும். அவையும் சுதந்திரக் கட்சியுடன் ஒத்துழைத்துக் காங்கிரஸைத் தாக்குவதில் சிரமம் இராது. ஏழைகளின் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டும் என்ற இலட்சியத்தில் அக்கட்சிகளுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் மாறுபாடேயில்லை.

காந்திஜி விரும்பியதற்கு நேர்மாறாக நமது நடவடிக்கைகளில் பத்தில் ஒன்பது பங்கை அரசாங்கமே நமக்கு அளந்து போடுகிறது. இதனால் மக்களின் சுதந்திரம் பாதிக்கப்பட்டதோடு மட்டுமின்றி, சர்க்காரின் செலவும் மிக உயர்ந்து விட்டது. இதற்காகவே பயங்கரமான முறையில் வரிகள் விதிக்கப்படுகின்றன. இன்று ஓர் அற்புதம் நிகழ்ந்து காந்தியடிகள் மீண்டும் உயிர் பெற்று வந்து, இந்தச் செலவுகளையும், வரிகளையும், கடன்களையும் அறிவாராயின் அவர் காங்கிரஸ் கூட்டத்தை உடனே ராஜிநாமா செய்யும்படி கண்டிப்பாக உத்தரவிட்டுவிடுவார்.

தொழில் துறையில் சுதந்திரப் போட்டி நிலவச் செய்தால் விவசாயம், இதர உற்பத்தித் தொழில்கள், வியாபாரம் யாவுமே செழிப்படைந்து நாடு எல்லாத் திசைகளிலும் முன்னேறும். இரண்டாம் உலக யுத்தத்தில் பெரிதும் பாழ்பட்ட பல நாடுகள் இன்று அபிவிருத்தி கண்டிருப்பதன் சரித்திரம் இதற்கு நல்ல சான்றாகும்.

சர்க்கார் துறையின் அளவு குறைந்தால், சர்க்காரின் செலவும் குறையும். எனவே வரியும் குறையும். இதனால் தொழில் துறையினர் மேலும் ஊக்கம் பெற்று உற்பத்தியை விஸ்தரிப்பார்கள்.

சர்க்கார் துறையின் அளவு குறைந்து அதன் செலவும் குறைந்தால் அரசாங்கச் சிப்பந்திகளின் எண்ணிக்கையும் குறைக்கப்படுமல்லவா? ஆனால் அதே போதில் இவ்வாறு வேலை இழந்தோரின் எண்ணிக்கைக்கு அதிகமாகவே வேலைக்கு எடுத்துக் கொள்ளக் கூடிய அளவில் தனியார் தொழில்கள் விருத்தியடையும். சர்க்கார் உத்தியோகத்தில் பெற்றதைவிட அவர்களின் ஊதியமும் அதிகமாயிருக்கும். தனியார் தொழில் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ள தற்காலத்திலேயே, சர்க்கார் வேலை நீக்கம் செய்தவர்களுக்கெல்லாம் தனியார் துறையில் இடம் கிடைப்பதைப் பார்க்கும்போது இதன் உண்மை விளங்கும்.

மிகவும் விரிவாகத் திட்டமிட்டால் தவறுகள் நேரத்தான் செய்யும். மக்களின் துயரமும் பெருகுகிறது. மக்கள் மனமொப்பி விரும்பும் திட்டங்களை மட்டுமே, சம்பந்தப்பட்ட எல்லா வர்க்கத்தினரையும் கலந்தாலோசித்த பின் அமுலாக்க வேண்டும்.

நமது கடன் சுமையும், ஆட்சியில் காணப்படும் ஊழல்களும் காங்கிரஸின் நிர்வாகத் தோல்வியைச் சந்தேகமற நிரூபிக்கின்றன. இவற்றுக்கு ஈடாக நாடு எவ்வித நன்மையோ நம்பிக்கையோ பெறவில்லை. இன்றைய சர்க்காரைக் கூண்டோடு பதவி நீக்கம் செய்வதற்கு இதுவே போதிய காரணமாகும். இனியும் பரீட்சை பார்க்க வேண்டாம்!

ஏழை மக்கள் தாங்கள் வாங்கும் பண்டங்களுக்கு மேன் மேலும் அதிக விலை தரும்படி இருப்பதொன்றே காங்கிரஸின் சோஷலிஸம் ஒரு போலிக் கொள்கை என்பதற்கு அத்தாட்சி. இந்தத் தவற்றுக்கு முடிவு கண்டே ஆகவேண்டும். காங்கிரஸ் ஆட்சியை நீக்குவதொன்றே அதற்கு வழி.

# திருவள்ளுவருக்குத் திருவுருவச் சிலை

பாரதத்தின் முதல் பிரஜை தமிழகத்தின் முதல் கவிஞரது திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கையில் அவரது முதல் குறளைத் தொடக்கத்திலேயே கூறி உரை நிகழ்த்தினார். உருவச் சிலையும் முதல் தரமாகவே அமைந்திருக்கிறது என்பது ஒருமுகமான அபிப்பிராயம்.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே யுலகு**

என்ற வள்ளுவர் வாசகத்தைக் கூறி, தமது அரிய சொற்பொழிவைத் தொடங்கிய டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள், உலகம் உள்ளதை ஒப்புக் கொள்வோமாயின் அதற்கு முதலும் மூலமுமான பகவனை ஏற்றேயாக வேண்டும் என்றார். நமது அரசியல் சட்டத்திலுள்ள மதச்சார்பற்ற (Secular) என்ற சொல் குழப்பத்தை விளைவிக்க அனுமதிக்கலாகாது. எம்மதமும் சம்மதம் என்பதையே அது குறிக்கிறது. இறையுணர்ச்சியைப் புறக்கணிக்கச் சொல்லவில்லை என்று தெளிவுபடுத்தினார். அறம், பொருள், இன்பம் என்று மூன்று பிரிவுகளாக வகுத்துக் கொண்டு குறளைப் படைத்தவர் அம்மூன்றினும் ஊடுபொருளாக வீடு பெறுதலைக் கொண்டிருக்கிறார் என விளக்கினார் ராஷ்டிரபதி.


"ரயில்கள் கவிழ்வதானாலும் சரி, லஞ்ச ஊழல் விவகாரங்களானாலும் சரி, தீமைகளை எதிர்க்கும் துணிவை மக்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். எதிர்ப்பைக் காண்பிக்காமல் மௌனம் சாதிக்கும்போது அந்தீமைகளுக்கு நம்மையுமறியாமல் உரமிட்டவர்களாவோம்" என எச்சரித்த டாக்டர் ராதாகிருஷ்ணன், "மக்களும் அரசினரும் 'குறள் வாழ்வு' நடத்தினால் துன்பமில்லை" என்றார்.

ரூ. 29,000 செலவில் வெண்கலச் சிலை வடித்த சிற்பிக்கு வெள்ளிக் கோப்பை வழங்கப்படு முன்னரே தேசிய கீதம் முழங்கிவிட்டது. எனினும் மேயரின் தயக்கத்தையும் மீறி, ராஷ்டிரபதி தாமாகவே வெள்ளிக் கோப்பையைக் கேட்டு வாங்கிச் சிற்பி திரு எஸ்.பி. பிள்ளை அவர்களிடம் கொடுத்து அனைவரது நெஞ்சிலும் நிறைவை உண்டாக்கினார்.

சென்னை மாநகராட்சி மன்றம் வான்புகழ் வள்ளுவரின் நினைவைப் போற்ற நிறுவியுள்ள உருவச்சிலை வானோங்கிக் கம்பீரமாக நிற்கிறது. அவர் வாழ்ந்த இடமான மயிலையிலே. காண்போரையெல்லாம் அது 'குறள் வாழ்வு' நடத்தத் தூண்டுவதோடன்றி அதன் திறப்பு விழாவின்போது நமது ராஷ்டிரபதி அவர்கள் நிகழ்த்திய அரிய உரையையும் நினைவூட்டிக் கொண்டிருக்கும்.








மேடையில் மேயர் திரு ரமணர் மோஹன், ராஷ்டிரபதி, கவர்னர் சந்திரா ரெட்டி முதலியோர். திரு பக்தவத்சலம் உரை நிகழ்த்துகிறார்.







அன்பு ததும்பும் விழிகளும், புன்னகை தவழும் வதனமும் கொண்ட திருமூர்த்தியின் உருவப் படம் ராஷ்டிரபதியால் திறந்து வைக்கப்படுவதை அருகிலிருந்து பார்ப்பவர் தமிழக கவர்னர் ஸ்ரீ சந்திரா ரெட்டி.

# டாக்டர் திருமூர்த்தியின் படத் திறப்பு விழா

டாக்டர்களின் எண்ணிக்கை பெருகலாம்; அவர்களின் ஆராய்ச்சித் திறன் வளரலாம்; புதிய புதிய மருந்துகள், சிகிச்சை முறைகள் கண்டுபிடிக்கப்படலாம். ஆனால் உண்மையில் பிணி தீர்க்கும் நற்பணி சிறக்க இவையெல்லாம் போதாது. நாட்டு மக்கள் நோய் நொடியிலிருந்து விடுதலை பெற மருத்துவர்களிடையே சேவா மனப் பான்மை வளர வேண்டும். இது இன்றி நோயுற்ற ஏழை எளியோருக்கு உய்வில்லை, வேறு வழியுமில்லை.

இதனை உணர்ந்து செயலாற்றியவர் டாக்டர் திருமூர்த்தி. ஆயிரக் கணக்கான ஏழை எளியோருக்கு உதவி லட்சிய வாழ்க்கை நடத்திய டாக்டர் என்பது மட்டுமின்றித் தமிழறிஞர், தமிழ் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டு உழைத்தவர் என்ற முறையிலும் சிறப்புப் பெற்றார் திருமூர்த்தி. அத்துடன் பள்ளிப் படிப்பு முதல் சர்வ கலாசாலைப் படிப்பு வரை கல்வித் துறைக்கு அவர் புரிந்துள்ள பணிகள் அளப்பரியன. இத்துறையில் பல பதவிகள் வகித்தும் பலவிதமாகவும் செயலாற்றியுள்ளார் திருமூர்த்தி.

நோய்களைப் பற்றிய அவரது சொற்பொழிவுகளை மருத்துவக் கல்லூரியில் கேட்ட மாணவர்கள் பின்னர் பாடப் புத்தகத்தைப் பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியத்தையே உணர்ந்ததில்லை!

இத்தகைய அறிஞரின் உருவப்படத்தைத் திறந்து வைத்த டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆந்திரா சர்வ கலாசாலைத் துணை வேந்தராகத் தாம் பணியாற்றியபோது அங்கு அப்பதவியை வகித்திருந்த டாக்டர் திருமூர்த்தியிடம் தாம் அவ்வப்போது எழும் சில பிரச்சினைகளை விவாதித்து நல்ல யோசனைகளைப் பெற்றதாக உள நெகிழ்வோடு குறிப்பிட்டார்.

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி துதி கீதம் பாட இனிதே தொடங்கியது இவ்விழா. மைலாப்பூர் அகாடமிக்கு அதன் ஸ்தாபகரான டாக்டர் திருமூர்த்தியின் படத்தை அவரது புதல்வர் திரு டி. டி. ஸ்ரீநிவாஸமூர்த்தி வழங்க, அதனை ராஷ்டிரபதியிடமிருந்து பெருமிதத்துடன் பெற்றுக்கொண்டார் மயிலாப்பூர் அகாடமியின் இந்நாள் தலைவர் ஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமி அய்யர்.

# ராஜாஜியின் கருத்துக்கள்

சமீப காலமாகச் சில கோஷ்டியினர் நாசவேலைகள் செய்து உயிர்களுக்கும் பொருள்களுக்கும் சேதம் விளைவித்து வருவதைக் கண்டு மிகவும் துயரம் அடைகிறேன். நியாயமான தீர்வு பெற வேண்டுமென்பதற்காகவே இவ்விதச் செயலில் ஈடுபட்டாலும் கூட இந்தக் குற்றத்தை ஒப்புக்கொள்வதற்கில்லை. இது தேச விரோதமானது; மனிதத் தன்மையற்றது.

நாசவேலைகள் அடிக்கடி நிகழுவதைப் பார்க்கும்போது, நிர்வாகத்தில் உள்ள ஏதோ ஓர் அடிப்படைக் குறை காரணமாகத்தான் இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறார்களோ என்று தோன்றுகிறது. சர்க்காரும் அரசியல் சிந்தனையாளரும் ஆழ்ந்து யோசிக்க வேண்டிய விஷயம் இது.

★

'இந்தியன் ஃபைனான்ஸ்' பத்திரிகையில் 'ஈவ்ஸ்ட்ராப்பர்' கீழ்க்கண்ட தகவலைத் தருகிறார்:

ஏதோ ஒரு ரயிலில் முதல் வகுப்பிலிருந்த மின்சார விசிறிகள் சரியாக இயங்காததைப் பிரயாணிகள் எடுத்துக் காட்டியும் 'கார்டு' நடவடிக்கை எடுக்கவில்லையாம். இதுபற்றி அவரிடம் கேட்டபோது, "நன்றாக இயங்கிக் கொண்டிருந்த எல்லா மின்விசிறிகளும் பம்பாயில் நடைபெறும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்துக்குப் போய் விட்டன. எனவே நல்ல விசிறிகள் ஏதுமில்லை. பிரயாணிகள் தயவுசெய்து மன்னிக்க வேண்டும்" என்றாராம்.

★

காங்கிரஸிலிருந்து பிரிந்துபோன அதிருப்தியாளர் கோஷ்டிகள், தாங்கள் ஸ்தாபன அமைப்பில் மன மாறுபாடு கொண்டதால் மட்டும் விலகினார்களா, அல்லது காங்கிரஸின் தோல்வியுற்ற பொருளாதாரக் கொள்கையிலிருந்து மாறுபட்டதால் விலகினார்களா என்று தெளிந்து கூற வேண்டும். காங்கிரஸிலிருந்து அவர்கள் விலகிய காரணம் என்ன என்று தெரியாவிடில் மற்ற எதிர்க் கட்சிகள் இவர்கள் எதிர் காலத்தில் எப்படி நடப்பார்களோ என்ற ஐயத்தின் பேரில் இவர்களோடு கூட்டுச் சேரத் தயங்குவார்கள். காங்கிரஸ் தனது ஆதிக்கத்தில் உள்ள பல வளங்களையும் வசதிகளையும் காட்டிப் பிரிந்து போனவர்களை யெல்லாம் ஆகர்ஷிப்பதில் மிகவும் ஆர்வம் காட்டுவதால் இத்தகைய ஐயம் மேலும் வலுப்படுகிறது.

★

தேர்தல் முறையைச் சீர்திருத்துவது பற்றி நிறையப் பேசியாயிற்று. இப்போது இது பற்றி ஆராய்ந்தவர்கள் சில யோசனைகளைக் கூறியுள்ளார்கள். செய்ய வேண்டியதெல்லாம் செய்தாயிற்று என்று காங்கிரஸ் சர்க்காரும் திருப்தியடைந்து விட்டதாகத் தோன்றுகிறது. தேர்தல்களைப் பெரும்பாலும் 'தனியார் தொழிலாக' விட்டு வைப்பதற்குக் காங்கிரஸ் ஆட்சேபிக்கவில்லை. ஏனெனில் இந்தத் தொழிலில் போடுவதற்கான மூலதனம் அதனிடம் நிறைய உள்ளது.


ஒவ்வொரு வாக்காளரின் அடையாளச் சீட்டையும், பட்டியல் எண்ணிக்கையையும் தருவது அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பது என் கருத்து. இதனால் அபேட்சகரின் செலவு கணிசமாகக் குறையும். தேர்தலுக்குத் தேவைப்படும் பெரும் செலவுதான் காங்கிரஸ் வெற்றி பெறுவதற்கு மிகவும் சாதகமாக இருக்கிறது. அபேட்சகரோ அவரை நிறுத்தி வைக்கும் கட்சியோ செய்யும் செலவுகளைக் குறைக்க இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கக் காணோம்.

★

பஸ்தார் மன்னர் மரண விஷயமாக ஸ்ரீ கிருபளானி வெளியிட்டுள்ள அறிக்கையைப் படித்தேன். சர்க்கார் தன்னால் ரட்சிக்கப் படவேண்டிய, ஆயுதமற்ற கிராமக்களின் மீது துப்பாக்கி ரவையின் சக்தியைச் செலுத்திப் பார்த்த வெட்கமற்ற பயிற்சியாகவே இது தோன்றுகிறது. மத்தியப் பிரதேச முதல் மந்திரி என்ன விளக்கம் தருவாரோ, நாம் அறியோம். என்ன விளக்கம் தந்தாலும் இது பேசுவதற்கே உகாத அவலட்சணம்.

## இந்து சமயப் பேரவை.

பற்பல சம்பிரதாயங்களைச் சேர்ந்த மடங்களின் அதிபர்களும், அறநிலையங்களில் ஈடுபட்டுள்ளவர்களும் இம்மாதம் 13ந் தேதி சென்னையில் கூடுகிறார்கள். அன்று மாலை மயிலை பி. எஸ். ஹைஸ்கூல் மைதானத்தில் திருமடங்களின் அதிபர்கள் அருளுரை வழங்குகிறார்கள். தமிழக கவர்னரும் முதன் மந்திரியும் இவ்வைபவத்தில் கலந்து கொள்கின்றனர். அனைவரும் இச்சமயப் பேரவையைப் பயனுக்கிக்கொண்டு புத்துணர்ச்சி பெற வேணும்.



**சீதாலக்ஷ்மி - வேங்கடரமணி சீருடன் வாழ்க!**

அமால்கமேஷன் குரூப் கம்பெனிகளின் முன்னாள் தலைவர் அமரர் அனந்த ராமகிருஷ்ணன் அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி சீதாலக்ஷ்மிக்கும் குஜராத் ராஜ்ய பெர்டிலைஸர் கம்பெனியின் நிர்வாக டைரக்டர் ஸ்ரீ ஆர். நாராயணசுவாமி அய்யர் அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி என். வேங்கடரமணிக்கும் சென்னை மயிலாப்பூர் கல்யாண மஹாலில், 29 – 5 – 66 அன்று வெகு விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்கு மந்திரிகளும் தொழில் அதிபர்களும் பிரமுகர்களும் விஜயம் செய்து சிறப்பித்தனர். மணமக்களுக்குக் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளிடமிருந்தும், சிருங்கிரி சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளிடமிருந்தும் நல்லாசி கிட்டியது.







மயிலாப்பூரில், பாரதி இளைஞர் சங்கத்தின் சார்பில் 'கவிஞர் நெஞ்சில் நெரு' தொகுப்பாசிரியரான திரு கே. ராமமூர்த்திக்குத் தமிழக சட்டமன்ற சபாநாயகர் திரு செல்ல பாண்டியன் பொன்னாடை போர்த்தினார்.

மே மாதம் இருபதாம் தேதியன்று புதுதில்லி மத்திய செக்ரடேரியட்டுக்கு மேலாகத் தெரிந்த சூரிய கிரகணத் தோற்றம்.

ஏப்ரல் மாதத்தில் அம்பா சமுத்திரத்தில் அகஸ்தியர் கோயில் நிர்வாகத்தினர் ஆதரவில் திருமுருக கிருபானந்த வாரியார் பெரிய புராணத் தொடர் விரிவுரை நிகழ்த்தினார்.

## — செய்திப் படங்கள் —

புதுவை மாநகரத்தில் கவிச் சக்கரவர்த்தி கம்பர் பெருமானுக்கு மாபெரும் விழா நடத்தினார்கள். கம்பராமாயணத்தை யானை மீது வைத்து முக்கிய வீதிகளில் பவனி வரச் செய்தார்கள். விழாவிலும் ஊர்வலத்திலும் புதுவை முதல் அமைச்சர் வேங்கடசுப்பா ரெட்டியார், பிரதம நீதிபதி எஸ். மகராஜன், திரு சா. கணேசன், ம. பொ. சி., முதலியவர்கள் கலந்து கொண்டார்கள்.



# சிவனருட் செல்வர்

## திருமுருக கிருபானந்த வாரியார்

அவ்வண்ணமே அவர் எழுதிய வேறு சுவடியைக் கொணர்வித்து ஒப்பு நோக்கினர்.

இரண்டும் ஒத்திருந்தன.

''ஆரூரா! நீர் இவருடைய அடிமை தான். இனி தப்புதற்கு வழியில்லை. தோற்றுவிட்டீர். இவருக்கு நீர் தொண்டு செய்யும்'' என்று மறையவர்கள் முடிவு வழங்கினார்கள்.

''விதி முறை இதுவாயின் நான் எப்படி மறுப்பேன்?'' என்று இசைந்தனர் ஆரூரர்.

சபையோர்கள் கிழவரை நோக்கி, ''ஐயரே! நீர் காட்டிய ஓலையில் உம்மை எங்கள் ஊர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நாங்கள் கிழவராகிய உம்மை இதுகாறும் கண்டதில்லை. இங்கே உமது வீடு எங்கே? காட்டும்'' என்று வினவினார்கள். வழக்கில் வென்ற வள்ளல், ''ஓகோ! என்னை ஒருவரும் அறியீரோ? ஆனால் என்னுடன் வாருங்கள்; எனது இருப்பிடத்தைக் காட்டுவேன்'' என்று அத்தனை பேரும் தொடர்ந்து வரச் சென்றார். திருவெண்ணெய்நல்லூரில் உள்ள திருவருள்துறை என்ற திருக்கோயிலுக்குள் நுழைந்தார். நுழைந்த அவரைக் காணவில்லை. அனைவரும் திகைத்தனர்.



"என்னை அடிமை கொண்ட அந்தணர் ஆலயத்துள் புகுந்து மறைந்தது என்ன அதிசயம்!" என்று எண்ணிய நம்பியாரூரர், அளவற்ற அன்புடன் தனியே தொடர்ந்து அவரை அழைத்தனர். உடனே எம்மையாளுடைய ஈசனார் அம்மையோடு தருமவிடைமேல் தோன்றிக் காட்சியளித்தார்.

"அன்பனே! முன்னமேயே நீ நமக்குத் தொண்டன்; உள்ளத்தில் எழுந்த விருப்பத்தின் காரணமாக நமது கட்டளைப்படி மண்ணில் வந்து பிறந்தனை; மாயை உன்னைத் தொடர்ந்து பற்றாதபடி நாம் தொடர்ந்து உன்னைத் தடுத்து ஆட்கொண்டோம்" என்று இறைவர் திருவாய் மலர்ந்தருளினார்.

"முன்புநீ நமக்குத் தொண்டன்
முன்னிய வேட்கை கூரப்
பின்புநம் ஏவலாலே
பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத்
தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர்
நாம்தடுத் தாண்டோம்" என்றார்.

தாய்ப் பசுவின் குரலைக் கேட்ட இளங்கன்று போல் அலறினார் நம்பியாரூரர். கண்ணருவி பெருகியது; உள்ளம் உருகியது; சொற்கள் குழறின; உடல் புளகமுற்றது; அடியற்ற மரம் போல் நிலமிசை வீழ்ந்தார். விண்ணவர் மலர் மழை பொழிந்தனர்; எங்கும் மறைகள் முழங்கின. "என் அருமை ஆண்டவரே! நீரே வந்து என்னை வலிய ஆட்கொண்டீரோ" என்று ஆரூரர் கூறினர்.

செந்தமிழுலகம் உய்யும் பொருட்டுச் சிவபெருமான், "சுந்தரா! நீ நம்முடன் வன்சொற்களைப் பேசினபடியால் வன்றொண்டன் எனப்படுவாய்" என்றார்.

"தன்மையினா லடியேனைத் தாமாட்
கொண்ட நாட் சபைமுன்
வன்மைகள் பேசிட வன்றொண்ட
னென்பதோர் வாழ்வு தந்தார்"

(சுந்தரரின் திருநாவலூர்த் தேவாரம்.)

"சுந்தர! நமக்கு அன்பிற் சிறந்த அருச்சனை பாட்டேயாகும்; ஆதலினால் தமிழ்ப் பாடல்களைப் பாடுவாய்"





என்று கட்டளையிட்டருளினர் எம் பெருமான். தேடிய அயனும் மாலும் ஐந்தெழுத்தும் பாடிய பொருளா யுள்ள பரமன் இங்ஙனம் கூற ஆரூரர், "வேதியனுகி வந்து என்னை வழக்கி ஞல் வென்று அடிமை கொண்ட ஆதியே அரனே! கோதிலா அமுதே! தேவரீரது குணப்பெருங்கடலில் சிறியேன் எம் மாத்திரம் அறிவேன்? என் சொல்லிப் பாடுவேன்?" என்றூர்.

அத்தன், "அன்பனே! என்னை முன்னை பித்தன் என்றனையன்றே? பித்தனென்றே பாடுதி" என்று அருள் புரிந்தார்.

கடல்மடை திறந்த வெள்ளம்போல் நம்பியாரூரர் நாவிலிருந்து தமிழ் வெள்ளம் அணை கடந்து வரத் தொடங்கியது.

**பித்தாபிறை சூடிபெரு மானேயருளாளா**
**எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத் துன்னை**
**வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்**
**அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே**

என்று திருப்பதிகம் பாடினூர்.

பித்தன் என்ருல் பைத்தியக்காரன் என்று அர்த்தம். சிவபெருமான் பித்தன். கருணை வழிந்து வழிந்து மேலே பொங்கித் ததும்பிப் பூரணமாய் நிற்கின்ற நிலைக்குப் பித்து என்று ஒரு பேர் உண்டு.

தாய் தவமிருந்து மகனைப் பெற்ருள். இனிது வளர்த்தாள். படிக்க வைத்தாள். பொருள் தேடி மகனுக்குக் கல்யாணம் செய்து வைத்தாள். அந்த மகன் மனைவியின் மையலில் பெற்ற அன்னையை வைதான்; அடித்தான். அன்னையின் என்பு முறிந்தும் மகன் மீதுள்ள அன்பு முறியாமல் அழுது கொண்டே தெருக்கோடியில் உள்ள அம்பிகையின் சந்நிதியில் சென்று தொழுதாள்; அழுதாள். "தேவி ! பராசக்தி ! உன் அருளால் பிறந்த வன் புதல்வன். அவன் ஆயிரம் மாற்றுத் தங்கம் போன்றவன். வந்த வள் அவனை இப்படிக் கெடுத்துவிட் டாள். அவன் என்னை அடித்தால் அடிக் கட்டும். அவன் நீண்ட ஆயுளோடு வாழட்டும். அவனைக் காப்பாற்று" என்று வேண்டிக் கொண்டாள். "அடித்து விரட்டிய மகனை வாழ்த்து கின்ருள் தாய். பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு" என்று அங்கு நின்றவர்கள் கூறினூர்கள். பெற்ற மனம் பித்து என்ருல் இங்கே என்ன பொருள்? குற்றம் செய்த மகனை மன் னித்து வாழ்த்துகின்ற பெருங்கருணைக் குப் பித்து என்று பெயர். அது போல, ஆன்மாக்களாகிய நாம் புரிகின்ற பல்லா யிரம் பிழைகளைப் பொறுத்து அருள் புரிகின்ற தாயாகிய சிவபெருமானும் பித்தன் என்று பெயர் பெற்ருர்.

மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பித்தன் என்ற சொல்லை வேறொரு கோணத்தில் கண் டார்கள் : தண்ணீருக்குள் ஒருவன் விழுந்தால் தண்ணீர் அவனை உடனே கொல்லாது. மூன்று முறை தண்ணீரில் மிதக்க வைத்துப் பின் கொல்லும். இதனுல் தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கும் என்ற பழமொழி வழங்கு கின்றது. இதனை மனத்தில் வைத்து மகாவித்துவான் திருவானைக்காவில் உள்ள அகிலாண்ட நாயகியை நோக்கி, "தேவி! கோடாது கோடி பிழைகளை நீ பொறுத்து அருள் புரிகின்ருய். கங்கையோ மூன்றே பிழைகளைப் பொறுக்கின்ருள். சிவபெருமான் உன்னை யல்லவா சென்னியில் சூட வேண்டும்? ஆனுல் அவரோ தகுதி நோக்கவில்லை. மூன்றே முறை பிழை பொறுக்கும் கங்கையைச் சென்னியில் சூடினூர். எண்ணில்லாத பிழைகளைப் பொறுக் கின்ற கருணை நாயகியாகிய உன்னைப் பாதி உடம்பில் வைத்தார். இதனுல் தான் அவரைப் பித்தன் என்று உலகம் பேசுகிறது" என்று சுவை பயக்கக் கூறுகின்ருர்.

**அளவறு பிழைகள் பொறுத்தருள்நின்னை**
**அணியுருப் பாதியில் வைத்துத்**
**தளர்பிழை மூன்றே பொறுப்பவள் தன்னைச்**
**சடைமுடி வைத்தனன் அதனுல்**
**பிளவியல் மதியஞ்சூடிய பெருமான்**
**பித்தனென் றொருபெயர் பெற்ருன்**
**களமமொய் கழனி சூழ்திரு வானைக்**
**காவகி லாண்ட நாயகியே.**

"பித்தன் என்று ஒரு முறை கூறினுலும் தேவ உலகத்தைத் தந்து அருள் புரிவான் அப்பரமன்" என்று கூறுகிறது திருவிசைப்பா.

**பித்தனென் றொருகால் பேசுவ ரேனும்**
**பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்**
**கைத்தலம் சென்னிமேல் வைத்த கங்கை**
**கொண்ட சோளேச் சரத்தானே,**

இராமலிங்க அடிகளோ,

**நினைப்பித்தா நித்தா நிமலா எனநி**
**னைப்பித்தால் ஏழை நினைப்பேன் — நினைப்பின்**
**மறப்பித்தா லியானு மறப்பேன் எனவையும்**
**பிறப்பித்தா லென்னைலென் பேசு**

என்ருர்.

# அதிகப் பால்


நான் ஒரு அதிர்ஷ்டசாலியான பசு! எனது எஜமானர் நல்லவர். அவர் எனக்கு வைட்டமின் செறிந்த OK மாட்டுத்தீவனம் கொடுக்கிறார். அதற்குத்தான் என்ன ருசி! OK என் உடம்பு நன்றாக இருக்க உதவுகிறது. அதில் வைட்டமின்கள் A மற்றும் D நிறைந்திருக்கின்றன. புரதச்சத்துகளும், உலோகப் பொருள்களும் ஏராளமாக இருக்கின்றன.

எஜமானரும் யோகக்காரர் என்றுதான் சொல்லவேண்டும். OK தீவனம் உடனடியாக உபயோகிக்கக்கூடிய விதத்தில் கிடைக்கிறது. அரைக்க வேண்டிய, கலக்க வேண்டிய தொல்லை எதுவும் இல்லை. இப்பொழுது நான் மிகவும் அதிகமாக பால் கொடுக்கிறேன். உன் எஜமானரிடம் உனக்கும் OK தீவனம் கொடுக்கச் சொல்லு. சிக்கனமானது. OK தீவனம் என்றால், அம்மா, அது எவ்வளவு ஆனந்தம்! உன் எஜமானரும் ஆனந்தமாக இருக்கச் செய்...அதிகப் பால், மிகவும் அதிகப் பால் கொடு.

**OK** வைட்டமின் செறிந்த
மாட்டுத் தீவனம்



தயாரிப்பாளர்கள்:
**தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை-1**
***உங்கள் அருகாமையிலுள்ள டீலர் அல்லது டிஸ்ட்ரிபியூட்டரிடமிருந்து வாங்குங்கள்***




'மேனியழகுக்காக
நான்
விரும்புவது
லக்ஸ்'
என்கிறார் ஜமுனா
LUX
LUX
TOILET SOAP
மேனியழகு... ஜமுனாவுக்கு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் உங்களுக்கும்... எனவே அதே கவனிப்புக்குரியது.
'மாதரின் வனப்புக்கு மாசற்ற மேனியைவிட மேலான சிறப்பு ஏது?' என்கிறார் வடிவழகி ஜமுனா, 'எனதழகைப் பேண நான் என்றும் உபயோகிப்பது லக்ஸ்: செழிப்பான மென்மை நுரையுடன் சிந்தை கவரும் நறுமண சோப். எனக்கு அதுவேவிருப்பம். உங்களுக்கும் அப்படித்தானே?' உமதெழிலும் பொலிவடைய உறுதுணை லக்ஸ்.
வெண்மையிலும், வானவில்லின் 4 வண்ணங்களிலும் வரும் சோப்.
லக்ஸ் டாய்லெட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் தூய, மெல்லினம் அழகுசாதன சோப்
லின்டாஸ்-LTS,200-140 TM
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

சுந்தரரை வலிய ஆட்கொண்ட தாமரை பாடும் வாயார், ''தொண்டனே! இன்னும் நமது புகழினை உணர்ந்து உலகுமுய்யப் பலவகையாகப் பாடு'' என்று கருணை புரிந்து திருவுரு மறைந்தருளினார். அனைவரும் அதிசயித்துப் பாராட்டிப் பரவினர்.

''ஆயிரம் பொய் சொல்லி ஒரு கலியாணம் செய்'' என்பது பழமொழி. ஆனால் ஆண்டவரோ பல பொய்கள் கூறிச் சுந்தரமூர்த்திநாயனாரின் திருமணத்தை நிறுத்தி வைத்தார். இதனை மேலாகப் பார்க்கின்றபொழுது கொடுஞ் செயலாகத் தோன்றும். ஆழமாகப் பார்த்தால் சுந்தரரைச் சுவாமி உய்வித்தார் என்பது விளங்கும். சுந்தரரின் திருமணத்தைச் சிவபெருமான் நிறுத்தியதால்தான் சுந்தரர் மேன்மை பெற்றார். சுந்தரரை மணந்து கொள்ளவிருந்த புத்தூர் சடங்கவி சிவாசாரியரது புதல்வியார் நம்பியாரூரரையே சிந்தை செய்து கொண்டிருந்த சில காலத்துக்குப் பின் சிவபதமுற்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமணக் கோலத்துடனேயே சிவனருட் செல்வ வழி சென்று விட்டார். முன்பு இருந்த சுந்தரர் வேறு. உலைக் களத்தில் வைத்த இரும்பு அனலாக மாறுவது போல, சுந்தரர் இப்பொழுது அருள் மயமாகி விட்டார்; சிவமயமாகிவிட்டார். திருவெண்ணெய்நல்லூர் ஆண்டவன் பாதாம் புயத்தைப் பணிந்து தலங்கள்தோறும் யாத்திரை செய்து எம்பெருமானைப் பாடிப் பரவ ஆசை கொண்டார். திருநாவலூர் சென்றார். அவ்வூர் திருப்பதிகத்தில் தமது சரித்திரத்தை,

**''வாயாடி மாமறை யோதியோர்**
**வேதிய னாகிவந்து**
**ஓ ராவணைத்தால்.... வெண்ணெய்**
**நல்லூரில் வந்தென்னை யாளுங்**
**கொண்ட''**

என்றும்,

**''நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்க**
**முனையரையன்**
**ஆதரித் தீசனுக் காட்செயு மூரணி**
**நாவலூர்''**

என்றும் வெளியிட்டுள்ளார். இவ்வாறே, பிற தலத்துத் தேவாரங்களுள்ளும் இறைவன் தம்மை வலிய ஆட்கொண்டதை நினைத்துப் பெருமகிழ்ச்சியுடன் கூறிப் பாராட்டியுள்ளார்.


**வெண்ணெய் நல்லூரில் அற்புதப் பழ**
**ஆவணங்காட்டி**
**அடியனு என்னை ஆளதுகொண்ட**
**நற்பதத்தை** (திருநள்ளாறு)

**அன்று வந்தெனை யகலிடத் தவர்முன்**
**ஆள தாகவென் றுவணங் காட்டி**
**நின்று வெண்ணெய்நல் லூர்மிசை**
**யொளித்த**
**நித்திலத் திரட் டொத்தினை**
(திருக்கோலக்கா)

**நம்பனை யன்று வெண்ணெய்நல்லூரில்**
**நாயினேன்**
**தன்னை யாட்கொண்ட சம்புவை**
(வட திருமுல்லைவாயில்)

**மண்ணின்மேல் மயங்கிக் கிடப்பேனை**
**வலிய வந்தென்னை யாண்டு**
**கொண்டானை**
(திருவாவடுதுறை)

திருநாவலூரில் எழுந்தருளியுள்ள பரமன்மீது பதிகம் பாடிய சுந்தரர், அண்மையில் உள்ள திருத்துறையூர்



சென்றனர். பெண்ணை நதியில் மூழ்கி, திருக்கோயிலுட் சென்று, தலை மாலை யணிந்த தலைவனை வணங்கித் தவநெறியைத் தாரும் என்று வேண்டினார்.

அவ்வாறே தவநெறியை இறைவன் தரப் பெற்றனர். அருகில் உள்ள திருத் தலங்களை வணங்கிக் கொண்டு தில்லையம்பலத்தாடும் ஆனந்தக் கூத்தரைத் தரிசிக்கும் காதலினால் புறப்பட்டனர். திருவதிகைக்கு அருகில் வந்த சுந்தரர், அத்திருவதிகை, திருநாவுக்கரசு நாயனார் உலகம் போற்றும் உழவாரப் படை கொண்டு திருத்தொண்டு செய்து அருள் பெற்ற தலம் என்பதனால் அதனை மிதிக்க

அஞ்சினார். திருவதிகைக்குள் செல்லாது அருகில் உள்ள சித்தவடம் போய்த் தங்கினார். கெடில நதியில் நீராடி, அதிகை மேவும் அண்ணலைத் திசை நோக்கித் தொழுதார். இரவு சித்த வடம் மடத்தில் பரிசனங்கள் அனைவரும் துயில் செய்ய, திருவதிகைத் தேவரைத் தியானித்த வண்ணமாகப் பள்ளி கொண்டனர் நம்பியாரூரர்.

திருவதிகை வீரட்டானத்துறையுந் தேவ தேவர் கிழ வேதியர் வடிவந் தாங்கி, மடத்துள் வந்து, சுந்தரருடைய தலையின் மீது திருவடியை வைத்துத் தூங்குபவர் போல் அமைந்தருளினார். நம்பியாரூரர் எழுந்து, "ஐயரே! உமது பாதத்தை ஏன் என் தலைமேல் வைத்தீர்?" என்று கேட்டார். "அப்பனே! தளர்ந்த பருவத்தினாலே திசை தெரியாமல் கால் உன் மீது பட்டுவிட்டது போலும்" என்றார் இறைவர். நம்பியாரூரர் வேறு புறத்தில் போய்ப் படுத்துக் கொண்டார். அரனார் அங்கும் போய் அவர் சென்னியின்மீது அடிமலரை வைத்தருளினார். வன்றொண்டர் எழுந்தார். "என்னை ஐயா! பலகாலும் இப்படி என்னை மிதிக்கின்றீரே! நீர் யார்?" என்றார். "என்னை நீ அறிந்திலையோ?" என்று மறைந்தருளினார் எம்பிரானார். உடனே சுந்தரர் திடுக்கிட்டு, "அதிகை மேவும் அமலனே! ஆலமுண்ட அண்ணலே! இந்த இரவில் இங்கு எளியேன் பொருட்டு எழுந்தருளி, வேதாகமங்களும் காணாத உமது திருவடிகளைச் சிறியேன் சென்னியில் வைத்துத் திருவடித் தீட்சை தந்தருளினீரே எனது தவமே தவம்" என்று துதித்தார்.

தம்மானை யறியாத
சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை
விடைமேற்கொள் விகிர்தன்

கைம்மாவி னுரியானைக்
கரிகாட்டி லாடல்
உடையானை விடையானைக்
கறைகொண்ட கண்டத்

தெம்மான்றன் அடிக்கொண்டென்
முடிமேல் வைத்திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற
அறிவிலா நாயேன்

எம்மானை எறிகெடில
வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும்
இகழ்வன்போ லியானே

என்று திருப்பதிகம் பாடினார்.

உலக மெலாம் சாமியைத் தேடுகின்றது. சுவாமி இவரைத் தேடி வந்திருக்கின்றார்! (தொடரும்)

## ஆலவாயில் அகிலாண்டநாயகி ஆலயப் பணி

திருச்சி திருவானைக்காவில் கோயில் கொண்டுள்ள தேவியை அகிலாண்டேசுவரி என்று போற்றி வழிபடுகிறோம். அகில அண்டங்களுக்கும் அவள் ஈசுவரியானதால் திருவானைக் காவில் எழுந்தருளி யிருப்பினும் எல்லா நாடு நகரங்களும் அவளுடையவை என்றாகும். இந்த உண்மைக்கு உருவமாகவே ஸ்ரீ அகிலாண்டேசுவரி — ஜம்புகேசுவரர் ஆலயத் திருப்பணிக்காக மற்றொரு மகா க்ஷேத்திரமாகிய மதுரையில் ஸ்ரீ பி. டி. ராஜன் அவர்கள் தலைமையில் ஒரு கிளைக் கமிட்டி பணியாற்றி வருகிறது. இக்கமிட்டியினரின் ஏற்பாட்டில் இம்மாதம் 11ந் தேதி முதல் 27ந் தேதி முடிய திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் மதுரை வடக்காடி வீதி திருப்புகழ் மண்டபத்தில் ஸ்ரீ மகாபாரத விரிவுரை நிகழ்த்துகிறார்கள். வாரியார் அவர்களின் பெருமை பற்றி நாம் எதுவும் கூறவேண்டியதில்லை. எனினும், இந்த விரிவுரையில் விசேஷம் வாரியார் அவர்கள்தான் மதுரைக் கிளைக் கமிட்டியின் செயலாளர் என்பதாகும். ஸ்ரீ மீனாக்ஷியை மந்திரிணியாகவும், ஸ்ரீ அகிலாண்டேசுவரியைச் சேனைகளின் நாயகியாகவும் சேர்த்து வழிபடுவதுண்டு. மீனாக்ஷியின் ராஜதானியில் நடக்கும் அகிலாண்டேசுவரியின் திருப்பணியில் மக்கள் அனைவரும் கலந்துகொண்டு பொருள் அளித்து, மகாபாரதத்தின் பொருளையும், ஜகன்மாதாவின் அருளையும் பெறுவார்களாக!



# உயிரைக் காப்பாற்ற உயிர்ப்பலி

வைத்திய மருத்துவத் துறையில் ஆராய்ச்சி பரிட்சைச் சோதனை என்ற பெயர்களில் பல்லாயிரக் கணக்கில் எளிய பிராணிகளை வதை செய்வதை எதிர்த்து பிரிட்டனில் ஜீவ வதை எதிர்ப்புச் சங்கம் (எஸ். பி. வி. ஏ.) ஒரு கிளர்ச்சியே நடத்தியது. பிரிட்டிஷ் துரைத்தனம் அதற்கு மதிப்புக் கொடுத்து, 'ஒரு கமிட்டியை (விட்டில்வுட் கமிட்டி) நியமித்தது. ஒரு வருஷத்தில் எத்தனை பிராணிகள் வைத்தியத் துறையில் பலியிடப்படுகின்றன?' என்ற புள்ளி விவரத்தைச் சேகரிக்க அதைப் பணித்தது. 1963 ஆம் வருஷம் வைத்திய சிகிச்சை ஆராய்ச்சிக்குப் பயன் படுத்தியிருக்கும் பிராணிகளின் இந்தப் பட்டியலை அந்தக் கமிட்டி தந்திருக்கிறது:

| | |
|---|---|
| கினி பெக் (சீமைப் பெருச்சாளி) ... | 32,400 |
| சுண்டெலி ... | 29,16,000 |
| முயல் ... | 65,000 |
| பெரிய எலி ... | 5,58,000 |
| பூனை ... | 13,000 |
| நாய் ... | 11,000 |
| பன்றி ... | 10,000 |
| குரங்கு ... | 3,000 |
| கோழி ... | 1,65,000 |

— எஸ். ஆர். சி. மணி





''ஆறு பாட்டில் மருந்து சாப்பிட்டேன், நோய் தீரவில்லை என்ற நோயாளியைப் போல்'' — ''ஆறு நிமிடத்தில் ஒரு ஆப்பரேஷன் செய்வேன், ஆனால் ஆள்தான் பிழைக்க மாட்டான்'' என்று கூறும் மருத்துவரைப்போல், உற்பத்தி அமோகம்; விநியோகம் சரியில்லை என்கிறார் அமைச்சர். — அண்ணுதுரை

தகவல்: இரா. சம்புலிங்கம்.

## கண்டுபிடியுங்கள்!

## பத்துக்கால், மூன்று தலை!



ஒரு நாள் நானும் என் நண்பனும் கோவைக்கு அருகிலுள்ள கோயில் ஒன்றிற்குச் சென்றிருந்தோம். மாலை நேரம் ஆனதும் என் நண்பன், தான் அருகிலுள்ள ஓரிடத்துக்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்றான். சிறிது நேரம் கழித்து வந்த அவனிடம் 'ஏனப்பா இவ்வளவு நேரம்! எங்கே சென்றிருந்தாய்?' எனக் கேட்டேன். அதற்கு அவன், தான் ஓர் அதிசயமான காட்சி ஒன்றைக் கண்டதாகக் கூறினான். உடனே நான் அதைப் பற்றிக் கேட்கலானேன். அதற்கு அவன்:

> "பத்துக்கால், மூன்று தலை, பார்க்கும கண் ஆறு, முகம்
> இத்தரையில் ஆறு, வால் சரீரண்டாம் — இத்தனையும்
> ஓரிடத்தில் கண்டேன்; உகந்தேன்; களி கூர்ந்தேன்;
> பாரிடத்தில் கண்டே பகர்!"

என்ற இப்பாடலைப் பாடி, அதற்கான விடையையும் என்னிடமே கேட்கலானான். எனக்கு அவன் கூறியது என்ன என்பது விளங்கவில்லை. அவனையே அக்காட்சியைப் பற்றி விளக்குமாறு கூறினேன். அதற்கு அவன் தந்த விளக்கம்... 42-ம் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

- பு. மயில்வாகனன்


## நல்ல காலம்!



அவனுக்கும் அவளுக்கும் கல்யாணமான மறு நாள். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அவன் கலங்கிய கண்களுடன் சொன்னான்: "நான் உங்களிடம் உண்மையைக் கூறி விடுகிறேன். எனக்கு ஆஸ்த்மா வியாதி..."

"நல்ல காலம் போ! நீ என்னைப் பார்த்துச் சிரிக் கொண்டிருப்பதாக நினைத்து அல்லவா இவ்வளவு நேரம் நடுங்கிக் கொண்டிருக்கிறேன்?" என்று நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள் கணவன்.

—எம். கே. கே.



## லண்டன் டாக்ஸி

ஒரு பிரயாணி லண்டன் டாக்ஸி ஒன்றில் ஏறிக் கொண்டு, டிரைவரை ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு விடச் சொன்னாராம். டிரைவர் டாக்ஸியை விட்டுக் கொண்டே ஒவ்வொரு தெருவையும், கட்டடத்தையும் கடக்கும்போதே அதைப் பற்றிய விவரங்களைக் கூறினாராம். இதனால் பிரயாணி மகிழ்ந்தவராகக் குறிப்பிட்ட இடத்தை டாக்ஸி அடைந்த பின்பும் டிரைவரை நோக்கி, 'நான் இங்கே இறங்கவில்லை. உன் டாக்ஸியை விடு. லண்டன் முழுவதும் எனக்குச் சுற்றிக் காண்பித்து விடு' என்றாராம்.

இங்கே எத்தனை முறை நாம் ஏறிக் கொண்ட டாக்ஸியின் டிரைவர் நம்மைச் சுற்றி வளைத்து இட்டுச் சென்று நான்கு பேரிடம் விசாரித்த பின்பு, நாம் விரும்பிய இடத்துக்கு அழைத்துச் செல்வதில்லை?

இந்தக் குழப்பம் லண்டனில் மட்டும் நேரவே நேராது! ஏன்? லண்டனில் டாக்ஸி டிரைவராக விரும்பும் ஒவ்வொருவரும் 'லண்டனைப் பற்றிய அறிவு' சோதனையில் தேறியாக வேண்டுமே! இந்தத் தேர்வை ஸ்காட்லாண்டு யார்டைச் சேர்ந்த போலீஸார் நடத்துகிறார்கள். லண்டனிலேயே பிறந்து வளர்ந்த ஒருவர் இந்தத் தேர்வுக்குச் சென்றபின், தனக்கு லண்டனைப் பற்றிப் பாதி கூடத் தெரியாது என்று அறிந்து கொண்டார். லண்டனில் ஏறத்தாழ நாற்பதாயிரம் தெருக்கள் இருக்கின்றன என்றால், அந்தத் தேர்வில் தேர்ச்சி பெறுவது எவ்வளவு கடினம் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

லண்டனுக்கு விஜயம் செய்த ஓர் அமெரிக்க செல்வந்தர், தான் பிரயாணம் செய்த டாக்ஸி டிரைவரால் மிகவும் கவரப்பட்டு, தன் லண்டன் விஜயத்தின் நினைவாக, அந்த டாக்ஸியையே கணிசமான தொகைக்கு விலைக்கு வாங்கி விட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

• ஆதாரம்: காமன்வெல்த் டுடே,- அ. சங்கரன்

## காந்தியை மடக்கியவர்!



ஹரிஜன நிதிக்கு ஐந்து ரூபாய் கொடுத்தால்தான் தமது கையெழுத்தைப் போட்டுத் தருவது என்ற வழக்கத்தைக் காந்திஜி வைத்துக் கொண்டிருந்தார். ஹைகோர்ட் நீதிபதியாக இருந்த ஏ. எஸ். பி. அய்யர் ஒரு சமயம் காந்திஜியிடம் ஐந்து ரூபாய் கொடுத்துக் கையெழுத்துக் கேட்டார். காந்திஜி ஹிந்தியில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.

தமிழில் கையெழுத்துப் போட்டுத் தரும்படி அய்யர் கேட்டார்.

"அதற்கு நூறு ரூபாய் கொடுக்க வேண்டும்" என்றார் காந்திஜி. "இந்திக்கும் தமிழுக்கும் ஏன் இந்த வித்தியாசம்?" என்று ஐயர் கேட்டதற்குக் காந்திஜி என்ன பதில் சொல்ல முடியும்?

புன்சிரிப்புடன் ஐந்து ரூபாய்க்கே தமிழில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.


அய்யர் மீண்டும் ஓர் ஐந்துரூபாய் கொடுத்து ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டுத் தருமாறு கேட்டார்.

காந்திஜி மறுத்தார். "ஒரு இந்தியனுக்கு ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டுத் தரமுடியாது" என்றார்.

ஆனால் அய்யரா விடுகிறவர்? "தாங்கள் மொழி, இன வேற்றுமை பாராட்டுபவர் அல்ல என்பதை நிரூபிக்கவே ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டுத் தருமாறு கேட்டேன்" என்றார்.

காந்திஜியைச் சரியானபடி மடக்கிவிட்டார். இனி என்ன சமாதானம் சொல்ல முடியும்? பேசாமல் ஆங்கிலத்திலும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.

— காழி ஜெயா






இரண்டு பெண்கள் வீட்டை விட்டு ஓடுகிறார்கள். எதற்காக? படம் ஓடுவதற்குத்தான்!

பணத்தாசை காரணமாகத் திருமணம் முறிந்து, மனம் முறிந்து உயிரைவிடத் தண்டவாளத்தில் ஓடுகிறாள் கமலா.

ஜமீன்தார் மகள் தேவி, கல்யாணம் என்றதுமே பயந்து செல்வ மாளிகையை விட்டு ஓடுகிறாள்.

இவர்கள் இருவர் வாழ்க்கையிலும் திருப்பம் ஏற்படுத்தி விடுகிறார் செய்தி நிருபர் சந்திரன். அதனால் ஏழை வீட்டு மங்கை ஜமீன்தாரிணியின் மகனை மணக்கிறாள். ஜமீன்தார் மகள் தேவி ஏழைச் செய்தி நிருபர் சந்திரனை மணக்கிறாள்.

இவர்கள் வாழ்க்கையில் பல இடைஞ்சல்களை உற்பத்தி செய்ய மஞ்சள் பத்திரிகை 'இனக் கவர்ச்சி'யின் ஆசிரியர் துரியோதனன் இருக்கவே செய்கிறார். இந்தப் பத்திரிகையின் செய்தி நிருபரே சந்திரன்! மஞ்சள் பத்திரிகை, கவர்ச்சிப் படம் இவற்றுக்கெல்லாம் இந்தப் படத்தில் சரியான சவுக்கடி கொடுக்கப்பட்டிருக்கிறது.

செய்தி நிருபர் சந்திரனாக எம். ஜி. ஆர். வந்து சகோதரி கமலாவுக்கு வாழ வகை செய்கிறார்; காதல், கல்யாணம் என்றால் என்னவென்று தெரியாத தேவிக்கு (ஜெயலலிதாவுக்குத்தான்!) காதல் பாடம் கற்றுத் தருகிறார். ஊருக்கு உபதேசம் செய்த கதையாக அல்லவா இருக்கிறது என்று நீங்கள் முணுமுணுப்பது காதில் விழுகிறது!

'இனக் கவர்ச்சி' ஆசிரியர் துரியோதனன் சபையில்--அல்ல அறையில் -- எம். ஆர். ராதாவின் புண்மொழிகள், போட்டோகிராபர் நாகேஷ்படும் அவதிகள், நாகேஷ் எடுத்த கவர்ச்சிப் படம் அளித்த சிக்கல்கள் --- சினிமாவில் நடிக்க விரும்பும் தாயும் மகளும் போட்டோகிராபர் வீட்டு விஜயம் --- ஹாஸ்ய வெடிகளுக்கும், மனோரமாவின் இடிகளுக்கும் காரணமாக அமைகின்றன. நாகேஷ் - மனோரமா இடியோசைக்குப் பிறகு மாடியைவிட்டு இறங்கும் நாகேஷுக்குச் செய்தி நிருபர் சந்திரன் எலுமிச்சம் பழ சர்பத் தருகிறார்! ஆனால் நமக்கு.....?


அசோகன் ஜமீன்தாராக வந்து அதிகம் பேசாமல் உணர்ச்சிகளை முகத்தில் தேக்கித் தம் கௌரவத்தைக் காக்கிறார்!

புதுமுகம் பாரதி அழுது சிரித்து ஏழைக் கமலாவாக வந்து நடிக்கிறார். பண்டரி பாய்க்கும் சோகத்துக்கும் நிறைய இணைப்பு உண்டு. கமலாவின் தாயார் அவள்தான்!

டைரக்டர் சங்கரின் முத்திரைகளுக்குச்சான்றுகள்: உடைந்த தாய்சேய் பொம்மை, தாய்க்கு மகளை நினைப்பூட்டுவது. ஜெயலலிதாவின் ஊசலாடும் உள்ளத்தை ஆடும் நாற்காலியோடு புனைந்து காட்டியிருப்பது ஆகியவையாகும். ஐம்புவின் நேர்த்தியான படப் பிடிப்பு ஒளி -- இருட்டுச் சண்டைக் காட்சிகளில் விளக்கமாகிறது.

'கெட்டி மேளம் கொட்டுற கல்யாணம்' என்ற பாடலும் 'காசிக்குப் போகும் சந்யாசி' என்ற பாடலும் நன்றாயிருக்கின்றன.

மஞ்சள் பத்திரிகை, இனக் கவர்ச்சி இவற்றுக்கெல்லாம் ஒரு போடு போட்டிருக்கும் 'சந்திரோதயம்' ஒரு துணிச்சலான படம்! இனி படங்களிலும் ஆபாசத்தை நீக்கத் துணிச்சலோடு முன்வந்தால் நன்றாயிருக்குமே?





## சூரஜ்

ஒவ்வொரு கைச் சமையலுக்கு ஒவ்வொரு ருசி. சிலர் சமைத்தால் ஓர் உப்பு தூக்கலாயிருக்கும். அது சமையலின் ருசியையும் தூக்கிக் காட்டும்.

சூரஜ் என்னும் ஹிந்திப் படம், இந்த முறையில் தன்னைத் தமிழ் நாட்டுப் படம் என்று குறிப்பிடாமல் குறிப்பிட்டுக் கொள்கிறது. ஒலிப்பதிவோடு ஒளிப்பதிவும் சிறந்து விளங்குகிறது. பாடல்களும் செவிக்கு இதம் தரும் வகையில் அமைந்துள்ளன.

கதை..................?

கதைதான் ராஜா -- ராணிக் கதை. சமஸ்தானங்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் பூண்டு முளைத்தபின் உருவான கதை.

இருந்தாலும் எடுத்துக் கொண்ட கதையை அப்பழுக்குக் கூற இயலாமல் சரியானபடி நடத்திச் சென்றிருக்கிறார்கள்.

ஆள் மாறாட்டம், வேஷத் தடுமாற்றம், அடி-தடி உதை சண்டை எல்லாம் ஏராளமாக இருக்கின்றன. வைஜயந்திமாலா, ராஜேந்திரகுமார், மும்தாஜ் ஆகியவர்களை நன்றாக வேலை வாங்கி நடிக்க வைத்திருக்கிறார்கள். ஜானிவாக்கருக்கெதிரே ஆகா இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டார். அதற்காக ஜானிவாக்கர் நன்றாக நடித்துப் புகழைத் தட்டிக் கொண்டு போய் விட்டார் என்று விருது வழங்க முடியுமா?

எல்லோரையும் விட யானையும் குதிரையும் நினைவில் நிற்கும்படி நடித்திருக்கின்றன. பொழுதைப் பிடித்துத் தள்ள முடியாமல் தள்ளுபவர்களுக்குப் பொழுது போக இது சிறந்த படம். கதைக்காகப் போகிறவர்களுக்கு வெறும் கதை; ஆனால் கண்ணுக்குக் குளிர்ச்சியான கலர்க் கதை.


## பாஞ்சாலியின் சபதம்

எல்லாருக்கும் தெரிந்த கதை; எல்லா மொழிகளிலும் படமாக வந்த கதை; எத்தனையோ முறை வந்த கதை! பத்மினி பாஞ்சாலியாக நடித்திருப்பதுதான் புதுமை. பத்மினிக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் பாகம் கொஞ்சம்தானென்றாலும் மிகவும் கச்சிதமாக நடித்திருக்கிறார். தாராசிங்குக்கு நல்ல வேஷப் பொருத்தம். நிஜமாகவே பீமனைப் பார்ப்பது போல் தோன்றுகிறது. காட்சிகள் நன்றாய் ஜோடனை செய்யப்பட்டிருக்கின்றன. ஈஸ்ட்மென் கலரில் படம் நன்றாயிருக்கிறது. ஹிந்திக்கு ஏற்ப, தமிழ் டப்பிங் பாதகமில்லை. பாடல்கள் ஒன்றும் நன்றாக இல்லை. பிரசித்தி பெற்ற பாபுபாய் மிஸ்திரியின் தந்திர ஜாலங்கள் நன்றாக இருக்கின்றன. அவரது டைரக்ஷன் நன்றாக இருக்கிறது.

தமிழ்ப் படங்களில் எத்தனையோ தடவை வந்த கதைகளே மீண்டும் வேறு பெயரில் வந்து தொலைக்கின்றன. அதைத் தடுக்க முடியவில்லை. அப்படியிருக்க, பாரதத்தின் மாபெரும் இதிகாசமான மகாபாரதம் பலமுறை படமாக வருவதை யார் தடுக்க முடியும்? இதிகாசத்தின் பெருமை குறையாமல், சுவை குன்றாமல், படம் தயாரிக்கப்பட்டிருந்தால் வந்து விட்டுப் போகட்டும் என்று விட்டுவிட வேண்டியதுதானே! வரவர புதிதாக வரும் படங்களில் சுவாரசியமாக எதுவும் இருப்பதில்லையாதலால், பாஞ்சாலி சபதம் போன்ற புராணப் படங்களுக்கு 'மவுஸ்' அதிகமாகி வருகிறது. மேலும், புராண இதிகாசப் படங்களில் மூலக் கதை தற்கால சமூகக் கதை மாதிரி அசடு வழியவில்லையே!

'பாஞ்சாலி சபதம்' பல்சுவை நிகழ்ச்சிகள் நிறையக் கொண்டதாதலால் மக்கள் அதை விரும்புவார்கள்.




டயல் ஒன் நாட் நாட்
இரு கடிதங்கள்
ஒருநாள்...
நான்காம் நாள் இரவு......
அடுத்த பத்தாவது நிமிஷத் தில்...
கதை
தௌசிகன்
சித்திரம்
ரமணி...


'ரவுடிகளின் அரசன்' என்றழைக்கப்படும் ஆசைராஜாவைக் காளி சந்திக்கிறான்.
எனக்குந் தெரியாது. சுந்தரம் உங்கிட்ட சொல்லச் சொன்னான். நீ மதுரைக்குப் போன மாசம் குபேரா இருட்டுக்கடையிலே நடத்தின கொள்ளையைப் போலீஸ் கிட்டச் சொல்ல வேண்டி வரும்.
கிழிபட்ட போதும் ஆசை. தாமஸின் விலாசத்துக்கு ஒரு கவர் வருகிறது ஒருவாரம் கழித்து. உபகாரியான தாமஸ் ஒரு தனிக் கட்டை.
என் விலாசமிட்ட கவரில் இந்து நூறு ரூபாய் நோட்டுக்கள். இது எதற்காக? கடிதத்தைப் படித்தால் காரணம் விளங்குமோ?
உபகாரியும், ஊருக்கு உழைப்பவருமான தாமஸுக்குத் தர்மம் செய்கிறார். அயலாரையே தன் சுற்றமாக நினைப்பவருக்கு அந்த நிதி உதவி மகிழ்ச்சியளிக்கிறது.
திருவாளர் தாமஸுக்கு,
நீங்கள் மேற்கொண்டுள்ள ஏழைச் சிறுவர்களின் கல்வி உதவிக்கு என்னாலான சிறு உதவி இது.
ஒரு தர்மவான்—
அன்று பகல் யாரோ எங்கோ 'ஒன்றாம் நம்பர்' டயல் செய்கிறார்கள்.
இன்ஸ்பெக்டர் சார்! உங்கள் ஜவான்களில் ஒருவரை நேரில் அனுப்பிக் கொடுங்கள். இன்று காலை தாமஸ் என்று தான் சொன்ன இந்நூறு ரூபாய்க்காக தன் நேர்மையை விற்று விட்டார்... என்னை நம்பாவிடில் அவர் வீட்டைச் சோதனையிட்டுப் பாருங்கள்...
உண்மை தான் சார். இன்று காலை தபாலில் பேர் இல்லாத ஒருவரிடமிருந்து என் விலாசமிட்ட கவரில் இந்நூறு ரூபாய் நோட்டுக்கள் வந்தன. அது நான் மேற்கொண்டுள்ள தர்ம காரியத்துக்காக என்று தெரிந்தது. அது என் வீட்டு பீரோவில் தான் இருக்கிறது.
ம்... தாமஸ்! நானும் ஏட்டையாவும் உன் வீட்டுக்கு வந்து சோதனை போடப் போகிறோம்.
நோட்டுக்காரனிடம் சொல்ல வேண்டும். இனிமேல் இம்மாதிரி கிழித்து வைத்துவிட்டுப் போகாதே என்று. இத்தனை நாளாக இப்படி அவன் நோட்டுக்களை ஓட்டலில் வைத்து விளையாடியிருக்கலாம்.


இதோ அந்தப் பணம். ஆனால் இந்த நடனக்காரனைக் காணோம் சார். ஆச்சரியமாக இருக்கிறது.
கிழிந்த காகிதத் துண்டுகளை ஒன்று சேர்த்துப் பார்த்த போது...
அன்புள்ள தாமஸ்,
மிக்க நன்றி,
போதும் எனக்கான தாமஸ் தருவோம்.
பார்த்த போது...
நொட்டிக்காரனின் செய்கை சிங்காரத்துக்கு நினைவுக்கு வர சமையலறை ஜன்னல் அருகே சென்று பார்த்த போது...
இது திட்டமிட்டுச் செயல்பட்ட சூழ்ச்சிதான். மற்ற தடயங்கள் உள்ளே இருக்கும்.
எதைக் கண்டு சிங்காரம் அது சூழ்ச்சி என்ற முடிவுக்கு வந்தான்?
இந்தளவு உறுதியாக சிங்காரம் தாமஸை நிரபராதி என்று முடிவு கட்டுவதற்கான தடயங்கள் என்ன? விடை நாளை? 72ம் பக்கம்.


இப்பொழுது மிகச் சிறந்த,
தனிப்பட்ட கலவைகொண்ட, முச்செயல்-திறனுடைய
ஹேர் ஆயில் டானிக்
பிராஹ்மி
ஆம்லா
மாகா
ஆகியவை அடங்கியது
BAM
HAIR OIL TONIC
பேம்


இக்கட்டான நிலைமையில் இருந்து தப்பினர்
"நாயேக்கு மந்திரி வரும்போது ஒரு தகராறும் இருக்கக்கூடாது. உன்னைத்தான் நம்பியிருக்கிறேன், ஸ்வாமி."
"எனக்குத் தலைவலி வருகிறது —ஆனால் இன்னும் இவ்வளவு வேலை பாக்கியிருக்கிறது!"
"கடுமையான உழைப்பு உன்னைப் பாதித்திருக்கிறது. 'ஆஸ்ப்ரோ' சாப்பிட்டால் எல்லாம் சரியாகிவிடும்."
"சபாஷ், ஸ்வாமி அற்புதமாகச் சமாளித்தீர்கள் எங்கள் பாராட்டுக்கள். மந்திரியின் விஜயம் இனிது முடிந்தது!"
வலிதான் எங்கள் பிரச்சினை... உங்களுக்கு நாங்கள் உதவக்கூடிய விதம் இதுதான்!
வலி என்பது என்ன?
'ஆஸ்ப்ரோ' இயங்குவது எப்படி?
இவைகளுக்கு ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்:
அளவு:
பெரியவர்கள்: இரண்டு மாத்திரைகள்.
குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டரின் சொல்படி.
ASPRO
'ஆஸ்ப்ரோ'
வலியை வெளியே இழுத்துவிடுகிறது!

A.G.26.66 TAM



# அனுபவ பாக்கியம்

எஸ்.ரங்கநாயகி

"நிசமாத்தான் சொல்றேனுங்க. நிலத்தை வித்துட ஏற்பாடாயிடுச்சு." வேலப்பன் அழுத்தமாகக் கூறினான்.

"என்ன விலைக்கு ஏற்பாடு ஆயிருக்குதுன்னு தெரியுமா?" என்று ரத்தினசாமி கேட்டார்.

"அதான் சொன்னேனே, ஒரு கிரவுண்ட் பத்தாயிரத்துக்கு ஏற்பாடு ஆயிடுச்சு. மூனு கிரவுண்ட் நிலமாச்சே, மொத்தம் எவ்வளவு ஆகும்னு பாருங்க. வாங்கப் போறவரு உடனே வீடு கட்டப் போறாராம். அதனாலே என்னை உடனே நிலத்தை விட்டுக் காலி பண்ணச் சொல்றாங்க. நான் குழந்தை குட்டிக்காரன். உடனே எப்படிக் காலி செய்ய முடியும்? உங்க வீட்டிலே பத்தடி கொடுங்க போதும். ஒண்டிக்க ஒரு குடிசை போட்டுக்கறேன்..."

"என்னது? கிரவுண்ட் பத்தாயிரமா? மூனு கிரவுண்டுக்கு முப்பதாயிரம்!" எனக் கூவிய ரத்தினசாமி அருகிலிருந்த தம் மனைவியை நோக்கிக் கூறினார். "கேட்டுக்க பாக்கியம்! 'இந்த நிலத்துக்கு மொத்தமா இருபதினாயிரம் கொடுக்கிறேன். எனக்கு வித்துடுங்க'ன்னு நான் கேட்டுக்கிட்டிருந்தேன். 'அது விக்கிறதுக்கு இல்லே'ன்னு சொன்ன அந்தச் சம்பந்தம் இப்ப முப்பதாயிரத்துக்குப் பேரம் செய்துட்டார், பார்த்தியா?"

"அவங்க எப்படியாவது போய்க்கட்டும். நமக்கு ரெண்டு வீடு இருக்குது. இந்தக் காலி மனையை வாங்கி என்ன செய்யப் போறீங்க?" என்று பாக்கியம் கூறினாள்.

"ரெண்டு வீடுன்னு நீதான் பெருமையா சொல்லிக்கணும்."

"அடடா, நீங்க விட மாட்டீங்களா?"

"ஏன் விடணும்னு கேட்கிறேன். எனக்கு இல்லேன்னு சொல்லிட்டு இப்ப எப்படி விற்க முடியும்? அவரை ஒருகை பார்க்காமல் விடப் போறதில்லே."

"கடவுளே!..... நீங்க ஏன் இப்படிப் பேசறீங்க? உங்களுக்கு விருப்பம் இருந்தா வேலப்பனுக்கு நம்ம வீட்டுத் தோட்டத்துலே ஓரமா குடிசை போட்டுக்க இடம் கொடுங்க. இல்லாட்டி சும்மா இருங்க..."

"நீ சும்மா இரு, பாக்கியம்... இப்ப வேலப்பன் எப்படித் தவிக்கிறான், பார்!"

"ஆமாம் எசமான், இருபது வருசங்களா இந்த மனையிலேயே குடிசை போட்டுக்கிட்டு இருக்கேன். அப்பாரோடு வரச்சே குடும்பம் இல்லே. இப்ப கலியாணம் முடிஞ்சு குழந்தை குட்டிங்களாச்சு. இருபது வருஷமா வாழ்ந்த இடத்தை விட்டுட்டுப் போவணும்னு..."

வேலப்பன் கூறிக் கொண்டிருந்தபோதே ரத்தினசாமியின் மனத்தில் பளிச்சென்று ஓர் எண்ணம் தோன்றியது.

"ஏலே வேலப்பா, நீ எத்தினி வருசமா இங்கிருக்கிறதாச் சொன்னே?"

"இருபது வருஷம்னு சொல்றேனே. என் அப்பாரோடு பதினைஞ்சு வயசுக்கு வந்தேன். அப்புறம் அப்பாரு இறந்த பிறகும் இங்கே தானே இருக்கேன்..."

"வாடகை எதனுச்சும் கொடுத்தியா?"

"அதெல்லாம் சும்மாசொல்லப்படாதுங்க. ஒரு செல்லாக் காசு எங்கிட்டேந்து வாங்கின இல்லே. அவங்க வீட்டுக்கு எப்பனுச்சும் போனாக்கூட வீட்டு வேலைகூடச் செய்யச் சொல்ல மாட்டாங்க!" வேலப்பன் நன்றிப் பெருக்குடன் கூறினான்.

"ஏ வேலப்பா, நீ கவலைப்படாதே. உன்னை அந்த இடத்தை விட்டுக் கிளப்பாம நான் பார்த்துக்கறேன்." தமக்கில்லாது வேறொருவருக்கு மனை போவதை விரும்பாத ரத்தினசாமி, அபயக் குரல் கொடுத்தார்.

"அது எப்படிங்க முடியும்? வாங்கப் போறவர் கண்டிஷன் போட்டுட்டாரே, நானு மாசத்துக்குள்ளே விலகிடணும்னு. கொத்து வேலை செய்து பிழைக்கிறவன் நான். எங்கே போய் இடம் தேடுவேனுங்க? இம்மாம் நாள் எங்கிட்டப் பழகினவங்க நீங்க, என் குணம் தெரியும். உங்க வீட்டிலேயே சின்னக் குடிசை போட்டுக்க இடம் தந்திங்கன்னு.."

"ஏலே, அப்புறமா என் வீட்டிலே இடம் தேடிக்கலாம் நீ! இப்ப நீ இருக்கிற இடத்துக்கு உனக்கு அனுபவ பாத்தியம் இருக்குடா!" அருகிலிருந்த மேசையின் மீது கையினால் குத்திவிட்டு ரத்தினசாமி கூறினார்.

"அனுபவ பாத்தியமா? நீங்க என்ன சொல்றீங்க?"

இரத்தினசாமி அவனுக்கு அனுபவ பாத்தியம் பற்றி விளக்கமாகக் கூறினார். "இப்ப நீ குடியிருக்கிற இடத்துக்கு ரூபா மூவாயிரமாவது உனக்கு அவர் கொடுக்கணும். இல்





## புறாக்களுக்குக் கருத்தடை

பிரான்ஸில் உள்ள நீஸ் நகரத்தில் புறாக்களின் தொல்லை மிகுதியாக இருக்கிறதாம்! பொது இடங்களில் உள்ள சிலைகளையும் நினைவுச் சின்னங்களையும் எச்சமிட்டு இவை பாழ்படுத்துகின்றனவாம்.

இவைகளை ஒழித்துக் கட்ட இந்நகரசபை கையாண்ட முயற்சிகள் பல. இப்புறாக்களுக்கு விஷம் போட்டார்கள். எண்ணிக்கை குறையவில்லை. குமட்டும் விதைகளைக் கொடுத்துப் பார்த்தார்கள். புறாக்களோ இதை மிகவும் விரும்பிச் சாப்பிட்டதோடல்லாமல், கொழு கொழுவென நன்றாக வளரவும் செய்தனவாம்!

எனவே, நகரசபை அதையெல்லாம் நிறுத்தி விட்டது. புறாக்களுக்குக் கொடுக்கப்படும் நல்ல உணவு விதைகளையே கொடுக்கப் போகிறதாம், இப்பொழுது. ஆனால் அதோடு கருத்தடை மருந்தும் கலந்திருக்குமாம்!

—ஏ. கே. கந்தசாமி

ஆதாரம்: டைம் அண்டு டைட்

---

லாட்டி இடத்தை விட்டுக் கிளப்ப முடியாது. அப்படீன்னு நோட்டீஸ் விடுடா... நீ அங்கே குடியேறி இருபது வருசமாயிடுச்சு. சல்லிக்காசு வாடகையும் கொடுக்கலே. சட்டப்படி உனக்கு எப்பவோ அனுபவ பாத்தியம் வந்துடுச்சே! சும்மா உன்னைக் கிளப்ப முடியாதுன்னு தெரிஞ்சுக்கட்டும்... பணம் வாங்காம நகராதே!''

''ஐயோ, எப்படிங்க பணம் கேட்க முடியும்? ஒவ்வொருத்தனும் எட்டு, ஒன்பது ரூபாய் வாடகை வாங்கிக்கிட்டுக் குடிசை போட்டுக்க நிலம்விடறாங்க. இத்தினி நாளா சல்லிக் காசு வாங்காத தருமவான்கிட்டே என்னை ரூபா கேட்கச் சொல்றீங்களே!''

''உனக்குப் படிப்பு இருந்தா இப்படிப் பேச மாட்டேடா! இந்த மனையை நீ துப்புறவாக வெச்சிருக்கியே, அவருக்கு அது தெரிய வேண்டாம்? சும்மா கருணை தயவுன்னு பார்க்காதேடா மடையா! சட்டம் உன் கையிலே இருக்குடா. நோட்டீஸ் விடுடா....அவன் உன்னை விரட்டினாலும், நீ சும்மா இருக்கிறதா ?....கோர்ட்டுலே இழுடா!''

''நோட்டீஸ், வழக்கு, கோர்ட் இதுக்கெல்லாம் நான் எங்கேங்க, பணத்துக்குப் போவேன் ?''

''நான் தரேன்டா, பணம். உனக்கு நான் உதவறேன்டா!''

ரத்தினசாமி கூறியதும் வேலப்பனோடு பாக்கியமும் திடுக்கிட்டாள். ''என்னங்க இது? அவங்க எப்படியாச்சும் போறாங்க. நீங்க ஏதுக்கு நுழையறீங்க.... வக்கீலுக்கும் கோர்ட்டுக்கும் நாம எதுக்குச் செலவு செய்யணும் ?''

''அதுக்காவ ஏழைங்களைக் காப்பாத்தாம விட்டுடறதா? ஏ வேலப்பா, நீ பயப்படாம சம்பந்தம்கிட்டே போய் நான் சொன்னாப்ல பாத்தியம் வந்துட்டதினாலே இடத்தை விட்டு நகரமாட்டேன்னு சொல்லு. இல்லேன்னா ரூபாய் மூவாயிரம் தரச் சொல்லு. அவர் சம்மதிக்கலேன்னா உன் பக்கம் வக்கீல் வெச்சு நான் வழக்கை நடத்தறேன்.''

திகைத்து நின்ற வேலப்பனிடம் மேலும் பக்குவமாகக் கூறித் தம் வழிக்குத் திருப்பி விட்டார் ரத்தினசாமி.

அன்று இரவு முழுவதும் பாக்கியம் கணவருக்குச் செய்த உபதேசமும் சுவருக்கு உபதேசித்த கதையாக நின்று விட்டது.

வேலப்பன் போட்ட நிபந்தனையைக் கேட்டதும் சம்பந்தம் திடுக்கிட்டு விட்டார். அனுபவ பாத்தியம் பற்றி அவருக்குத் தெரியும். ஆனால் அதை இவன் நன்றி மறந்த செய்கையாகப் பிரயோகிப்பதாவது! பேச்சின் நடுவே - ரத்தினசாமிதான் வேலப்பனுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார் என்பதும் புரிந்தது.

சம்பந்தம் உடனே சென்று ரத்தினசாமியைச் சந்தித்தார். ரத்தினசாமியோ தமக்கு இதுபற்றி ஒன்றுமே தெரியாது எனக் கூறினாலும் ஜாடையாக ஒரு பேச்சு கூறினார். ''ஏதுக்குங்க இவ்வளவு கஷ்டம்? என் கையிலே இருபதினாயிரத்துக்கு மனையைத் தள்ளிடுங்க. வேலப்பனை விலக்கறதை என் பொறுப்பில் ஏத்துக்கறேன்.''

சம்பந்தம் அவர் பேச்சிலிருந்து எல்லாம் புரிந்து கொண்டு விட்டார். ரோஷத்துடன் வெளியே வந்த சம்பந்தம் வேலப்பனுக்கு எதிராக வழக்காட நிச்சயித்து விட்டார். சட்ட பாயிண்டுகள் பல வேலப்பனுக்குச் சாதகமாக இருந்தாலும் சம்பந்தத்தின் வக்கீல் துரைசாமி வழக்கைத் தம் கையில் எடுத்துக் கொண்டு விட்டார். சட்டமும் நியாயமும் புத்தகத்தில் இல்லை. வக்கீலின் குறுக்குக் கேள்விகளில் இருக்கின்றன என்பது அவர் கண்ட அநுபவம்.

ரத்தினசாமி பேச்சு தவறாமல் தம் பணத்தைச் செலவு செய்து வேலப்பனுக்கு வக்கீல் வைத்தார். அதோடு அவர் மனத்தில் இன்னோர் எண்ணமும் ஓடியது. சம்பந்தம் ஒருவேளை இறங்கி வந்து தமக்குச் சாஸனம் செய்யச் சம்மதித்தால் பணம் வேண்டுமே என்று எண்ணியவர், மற்றொரு வீட்டை விற்று விடுவது என்று முடிவுக்கு வந்தார்.

மறு நாளே அந்த வீட்டை விற்பதாகத் தினசரியில் விளம்பரம் கொடுத்து விட்டார்.

நான்கு நாட்கள் சென்றன. அன்று தபால்காரன் உள்ளே வந்ததுமே, வீட்டை வாங்க யாரிடமிருந்தாவது கடிதம் வந்திருக்கும் என நினைத்த ரத்தினசாமிக்கு ரிஜிஸ்தரில் வக்கீல் நோட்டீஸ் ஒன்று வந்திருந்தது.

அதைப் படித்ததும் தடாலெனச் சாய்ந்து விட்டார் ரத்தினசாமி. பாபு விட்ட நோட்டீஸ் அது. பாபு அவருடைய அக்காள் மகன்.

''நான் இருக்கும் வீட்டை நீங்கள் விற்க ஏற்பாடு செய்வதை அறிந்தேன். இந்த வீட்டில் நான் பதினைந்து வருடங்களாக முழு உரிமையுடன் இருக்கிறேன். பல முன்னேற்றங்களும் செய்திருக்கிறேன். வாடகையாகப் பணமும் தரவில்லை. ஏகபோக உரிமையில் என்னிடம் இருக்கும் இந்த வீட்டுக்கு எனக்கு எப்போதோ அநுபவ பாத்தியம் வந்துவிட்டது. அதனால் இதன் மூலம் தெரியப்படுத்துவது யாதெனில் என்னை மீறி இந்த வீட்டை விற்க உங்களுக்கு ஓர் உரிமையும் இல்லை!''


விரும்பியதைக்
குறிப்பிடுக
ஸாத்தே
பிஸ்கோத்துகள்
ஸாத்தே பிஸ்கட் & சாக்லேட் கம்பெனி லிட்., பூனா-2




# 18

**வீ**டு மிகவும் சிறியதுதான். கீழே ஆறடிக்கு ஆறடி சதுர அறை. அதே அளவுக்கு மாடியில் மற்றோர் அறை. கீழ் அறை சமையலறையாகவும், சாமான் கிடங்காகவும், சாப்பாட்டுக் கூடமாகவும் விளங்கிற்று. மாடி அறையோ வரவேற்பறையாகவும், அலங்கார மண்டபமாகவும், சயனக்கிருகமாகவும் திகழ்ந்தது. வீட்டிலிருந்த சாமான்களெல்லாம் மிகவும் குறைவுதான். அவற்றைத் துப்புரவாக வைத்திருந்தாள் பாருக்குட்டி.

நாணு போன சமயம் அந்த வீடு சிரிப்பு வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது.

''குஞ்சுராமனின் வீடு இதுதானே?'' என்று விசாரித்தான் வெளியிலிருந்த ஒரு நடுத்தர வயதான அம்மாளிடம்.

''ஆமாம்...நீங்க யாரு?''

''தெரிந்த நண்பன்.''

''அந்த ஆளு இல்லே...கோபாலு தான் இருக்கு. இருங்க, போய்ச் சொல்றேன்.''

அவனை நிற்கவைத்து விட்டு அவள் போனாள். மொத்தம் இருபது குடிகள் இருந்தன அங்கே. எல்லா வீடுகளுக்கும் மாடியறை கிடையாது. பாருக்குட்டி மட்டும் அந்த வகையில் அதிர்ஷ்டம் செய்தவள்.

''வரச் சொல்றாங்க'' என்றாள் அவள் திரும்பி வந்து.

அவள் வேலைக்காரியா அல்லது உறவினளா என்று தெரியவில்லை. பாத்திரம் துலக்கிக் கொண்டிருந்தாள் குழாயடியில்.

''அடடே, நீங்களா?... வாங்க நாராயண்.....என்னை மறந்து விட்டீர்களோ என்று நினைத்தேன்'' என்று வரவேற்றாள் பாருக்குட்டி. தூங்கிக் கொண்டிருந்திருப்பாள் போலிருக்கிறது. தலை கலைந்திருந்தது. நெற்றியில் பொட்டுக்கூட இல்லை.

''இரண்டு நாட்களாக வந்து தேடினதாக அம்மா சொன்னார்கள்.''

''ஆமாம். நீங்கதான் எங்கேயோ போய் விட்டீர்களே. இருங்கள், டீ போடுகிறேன்.''

''வேண்டாம், பாருக்குட்டி... நீங்களெல்லாம் இங்கே எப்போது வந்தீர்கள்?''

''வந்து ஒரு வாரம்தான் ஆகிறது, நாராயண். கோபால் இல்லாவிட்டால் வந்திருக்க முடியாது.''

''குஞ்சுராமன் எங்கே?''

''ஆபீஸ் போயிருக்கிறது. கோபாலை உங்களுக்குத் தெரியுமா? கோபால்.... கோபால்... வாங்க, இங்கே.''

மாடியறையிலிருந்து குப்பலாக வந்து கொண்டிருந்த புகை மூட்டம் கலைந்து

கோபால் எட்டிப் பார்த்தான். முதல் பார்வையி லேயே அவனைப் பற்றி நாணுவுக்கு நல்ல அபிப்பிராயம் எழவில்லை. முரடு தட்டிய முகம். பூனைக் கண் பார்வை. கையும் காலும் பூவரசம் போத்துப் போலிருந்தன. கூடைமாதிரி கேசம் குத்துக் குத்தாய் நின்றது. அதற்கு எண்ணெய் போடுவானோ மாட்டானோ!

''கோபால்!....'' பாருக் குட்டியின் அழைப்பு குழைந்தது.

அவன் இறங்கி வந்தான். நாணுவைக் கீழிருந்து மேலாக நோட்டம் விட்டான்.

''இவர்தான் நாராயண்......நான்கூடச் சொன்னேனே...'' என்று அறிமுகம் செய்து வைத்தாள் பாருக்குட்டி.

''அப்படீங்களா?...எங்கே இருக்கீங்க?'' என்றான் கோபால்.

''இதே ஊரில்தான்.''

''நான் கல்லுப்பட்டி.''

''ஓகோ!''

''அங்கே காளியண்ணக் கவுண்டர் தெரியுமில்லீங்களா? சேர்மனுகக்கூட இருந்தாரே!''

''தெரியாது.''

''அவுங்க அப்பன், பாட்டன் காலத்திலேயிருந்து பரம்பரையா



## என்ன செய்கிறார்?



நாட்டாண்மைக்காரங்க......அம்பது காணி நிலம், தோட்டமெல்லாம் இருக்குது.... ரோட்டு மேலே பம்பு செட்டு வச்சு மில் ஓடுதுங்களே, அது அவுகளதுதான்.''

''இருக்கலாம்.''

''அவரு எங்க மாமன்தானுங்க.''

அவனுடைய வம்சாவளியைத் தெரிந்து கொண்டதால் நாணுவுக்குப் புதிய அபிப்பிராயம் எதுவும் வந்து விடவில்லை.

''அவசர ஜோலி இருக்குதுங்க... நான் வாரேனுங்க'' என்று சொல்லிப் புறப்பட்டான் அவன்.

''கோபால், டீ குடித்துவிட்டுப் போகலாமே!'' என்றாள் பாருக்குட்டி.

''வேண்டாம், நீயே குடி'' என்றவாறு அவன் போய்விட்டான்.

''பாருக்குட்டி, இவன் யாரு?'' என்று கேட்டான், நாணு.

''கோபால் — நல்ல மனிதர்.''

''குஞ்சராமனுக்கும் இவனுக்கும் என்ன தொடர்பு?''

''நண்பர்கள். கோபால் வேறு, குஞ்சராமன் வேறே இல்லே... இரண்டு பேரும் அத்தனை நெருக்கம்'' என்றாள் பாருக்குட்டி.

இதற்குள் தேநீர் தயாரித்து எடுத்து வந்தாள் அந்த அம்மாள். அவள் பெயர் ரோகிணி என்றும், சமையலைக் கவனித்துக் கொண்டு உதவியாக இருப்பதற்காகச் சாப்பாடு போட்டு அவளுக்கு மாதம் இருபது ரூபாய் சம்பளம் என்றும் தெரிந்தபோது குஞ்சராமனுக்கு இத்தனை அந்தஸ்து எப்படி வந்ததோ என்று வியந்தான் நாணு.

''குஞ்சவுக்கு நல்ல சம்பளம் வருது, நாராயண். வீடு நன்றாக இருக்கிறதில்லையா? கோபாலினால் எனக்கு நல்ல காலம் பிறந்து விட்டது'' என்றாள் பாருக்குட்டி மிகுந்த பெருமையோடு.

நாணுவுக்கு அப்படித் தோன்றவில்லை. அவளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''உக்கும்... நீங்களும் தாத்தா மாதிரி தான்'' என்றாள் அவள்.

''எனக்குள் ஒரு கிழவன் இருப்பதாக நீதானே சொன்னாய்?'' என்று சொல்லிச் சிரித்தான் அவன்.

''கிழவர்களே ரொம்ப மோசம்.'' அவள் சிரித்தாள்.

எளிமையில் தோய்ந்தவளாய், ஒற்றை வடமும், ஒற்றை வளையலுமாக ரயிலில் அவன் கண்ட பாருக்குட்டியின் கழுத்தில் இப்போது இரட்டை வடச் சங்கிலி மின்னிற்று. கையிலும் அவ்வாறே. நாணுவுக்கு அவளைக் காண என்னவோ போலிருந்தது. ரிஷி குமாரி போலிருந்தவள் ராஜகுமாரியாக எப்போது மாறினாள்! தாத்தாவைக் கண்வ ரிஷியாகவும், தன்னைச் சகுந்தலையாகவும் மாற்றிப் பேசிய குழந்தை வளர்ந்து விட்டாளா? துஷ்யந்தன் பழைய நிகழ்ச்சியை மறந்ததாகத்தான் சாகுந்தலம் பேசுகிறது. இங்கோ சகுந்தலையாகிய பாருக்குட்டி பழையனவற்றையெல்லாம் மறந்துவிட்டாள் போலிருந்தது!

''குஞ்சராமன் இன்னும் வரவில்லையா?'' என்று கேட்டான் நாணு.

''வரும்... அதுக்கு வேலை ஜாஸ்தி.''

''எங்கே வேலை பார்க்கிறார்?''

''அது தெரியாது, நாராயண்... நான் கேட்கவில்லை. எதற்காகக் கேட்க வேண்டும்? பெரிய மனிதர்களெல்லாம் பழக்கம் கோபாலுக்கு. அதனாலே சந்தோஷமாக...'' அவள் முடிப்பதற்குள் நாணு குறுக்கிட்டான். ''பாருக்குட்டி, எனக்கென்னவோ இங்குள்ள நிலைமையைப் பார்த்தால் பயமாக இருக்கிறது'' என்றான்.

''உக்கும்... ஏன் பயப்படணும், நாராயண்...?''

''இந்தக் கோபாலைப் பார்த்தால்...''

''அவருக்கு என்னவாம்?''

''அவன் பார்வை நல்லதாக இல்லை, பாருக்குட்டி.''


''உங்க பார்வைதான் நன்றாக இல்லை, நாராயண்... இதென்ன, நீங்க இப்படி மாறி விட்டீர்கள்?''

''பாருக்குட்டி!''

''நீங்க மாறித்தான் விட்டீர்கள், நாராயண்... கோயம்புத்தூர் வந்தால் நன்றாக இருக்கும்னு நான் நினைத்தது தப்பாகப் போச்சு.''

''நாணு மாறிவிட்டேன்?'' துயரத்தோடு கேட்டான் நாணு வியப்பை அடக்கிக் கொண்டு.

''ஆமாம்...'' என்று தலையை ஆட்டிய பாருக்குட்டியின் கண்ணில் நீர் துளித்தது.



எங்கே போகிறார்? (36ம் பக்கம் பார்க்க)

முன்பொரு முறைகூட அவள் அழுதிருக்கிறாள், அவள் கணவன் கற்றுத் தந்த நாடகமாக இருந்த அழுகை அது. இப்போதோ உண்மையிலேயே பாருக்குட்டி அழப் பழகிக் கொண்டு விட்டாள். மாற்றம் யாரிடத்தில் என்று வெளிப்படையாகத் தெரிந்தும் குற்றச் சாட்டு நாணுவின் மேல் விழுகிறது.

"நான் மாறவில்லை, பாருக்குட்டி. மாறவும் மாட்டேன். நீ இங்கே வந்துவிட்டாய் என்றதும் எவ்வளவு சந்தோஷப்பட்டேன், தெரியுமா?"

"அதனால்தான் இரண்டு நாட்களாக என் கண்ணிலே படாமல் தப்பித்துக் கொண்டு ஓடினீர்களாக்கும்!"

"பாருக் குட்டி!"

"எனக்குத் தெரியும். பழைய நாராயண் இல்லை நீங்கள்."

"நீதான் பேசுகிறாயா, அல்லது என் காது தவறு செய்கிறதா?"

"நான்தான் பேசுகிறேன்...குஞ்சராமனைத் தோல்வியுறச் செய்து வேலையையும் போக்கி விட்டு வந்தீர்கள். ஊருக்குப் புறப்படுவதற்கு முன்னாலே என்னை வந்து பார்க்க முகம் இல்லை உங்களுக்கு!" பாருக் குட்டி விம்மி அழுதபடியே சொன்னாள்.

நாணு இந்தத் தாக்குதலைக் கண்டு மிரளவில்லை. சிரித்தான். அவனுக்குத் தெரியும், பாருக்குட்டி தன் நிலையிலிருந்து பேசவில்லை யென்று. கற்றுத் தந்த பாடத்தைத்தான் ஒப்பிக்கிறாள்.

"நல்லது... ஓரளவு உலக ஞானமாவது உனக்கு வந்திருக்கிறதே! அதுவே சந்தோஷம்" என்றான்.

இச்சமயம் குஞ்சராமனே வந்தான். நாணுவைக் கண்டதும் காணாதது போல் வேகமாக மாடி ஏறி விட்டான்.

"இங்கே யார் வந்திருக்கிறது என்று பார்க்கவில்லையா?" என்று குரலை மாடிக்கு ஏற்றினாள் பாருக்குட்டி.

குஞ்சராமன் அதன் பின் இறங்கி வந்தான். "இந்த ஏழையின் குடிசைக்கு நீங்கள் வந்தது என் பாக்கியம்" என்றான் கேலியாக. பிறகு, பாருக் குட்டியைப் பார்த்து, "கோபால் எங்கே?" என்று கேட்டான்.

"அவசர காரியம் என்று அவர் புறப்பட்டுப் போனார்."

"அடேடே! கோபாலை உடனே பார்த்தாக வேண்டுமே!"

"டீ சாப்பிடவில்லையா?"

"வேண்டாம்."

குஞ்சராமன் பையிலிருந்து ஒரு கவரை எடுத்தான். நாணுவிடம் அதைக் கொடுத்தவாறே, "மிஸ்டர், நாராயண், நீங்கள் கொடுத்த ஐந்நூறு ரூபாய் இதிலே இருக்கிறது. எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான். குரலில் வெறுப்பும் சினமும் மிதந்தன. அவை மட்டுமா, நாணுவுக்குப் புரியாத வேறு ஏதோ ஒன்றும் மிதந்தது. நெஞ்சில் மீண்டும் எச்சரிக்கை உணர்வு எழுகிறதோ! நாணு திகைத்தே விட்டான்.

குஞ்சராமன் அடுத்த கணமே அங்கிருந்து வெளியேறி விட்டான்.

நாணு மறுக்கவும் முடியாமல் ஏற்கவும் முடியாமல் கையிலிருந்த கவரையும் அதிலிருந்த பணத்தையும் மாறி மாறிப் பார்த்தவனாய், பாருக்குட்டியை நோக்கி, "இதற்கு என்ன அர்த்தம் பாருக்குட்டி?" என்று கேட்டான்.

"தேர்தலில் ஜெயிக்கவில்லை என்று குஞ்சுவுக்குக் கோபம்" என்றாள் அவள்.

"பணத்தை நீயல்லவா என் பையிலிருந்து எடுத்துக் கொண்டாய்? உனக்குத்தான் சொந்தம்" என்றவாறே அவளிடம் கொடுத்தான் நாணு.

அவள் வாங்கிக் கொள்ளாமல் நின்றாள்.

"பிடி, பாருக்குட்டி!"

அவள் அதை வாங்கி மீண்டும் அவன் பையிலேயே வைத்தாள். "எடுத்த இடத்திலேயே நான் அதை வைத்து விடுகிறேன்" என்றவாறே.

"ஏன் அதை நீ எடுத்துக் கொள்ளக் கூடாதா? திருப்பித் தந்து என்னை அவமதிக்கத்தான் வேண்டுமா?"


"இல்லை, நாராயண்... இந்தப் பணத்தைக் கொடுத்துவிட வேண்டும் என்று கோபாலும் சொன்னார்..."

"ஓஹோ... முன்னமேயே பேசி முடித்து விட்டீர்களோ!"

"என் மேலே கோபமா?"

"இல்லையம்மா... எனக்கு யார் மீதும் கோபமில்லை. உன்னைச் சந்திக்க வைத்த கட

# ஜேய் கொண்டு ஸ்நானம் செய்யும் ஒவ்வொரு முறையும்



## உங்கள் சருமத்துக்கு மென்மை, ஒளி, கவர்ச்சி ஆகியவை கிட்டுகின்றன

ஜேய் அழகு சாதன சோப் சரும துவாரங்கள் அனைத்தையும் சுத்தப்படுத்தி, சருமத்தை மிருதுவாக்குகிறது. ஜேய் கொண்டு ஸ்நானம் செய்யும் ஒவ்வொரு முறையும் உங்கள் சருமத்துக்கு மென்மை, ஒளி, கவர்ச்சி ஆகியவை கிட்டுகின்றன. பளபளக்கும் ரேக்கு 'ராப்ப'ரின் காரணமாக அதில் அடங்கியுள்ள மனோகர மல்லிகை நறுமணம் நிலைத்து வீசுகிறது.




டாடா தயாரிப்பு

உங்கள் எழில் பெருக

**ஜேய்**

அழகு சாதன சோப்

Benson: ITJS-107- Tam

வின் மீதுதான் இப்போது கோபம் வரு கிறது. நல்லது... நான் புறப்படுகிறேன்.''

பாருக்குட்டி ஒன்றும் சொல்லாமல் சிரித்தாள். ''அடேயப்பா, இவ்வளவு கோபம் வருமா உங்களுக்கு? ஒரு பேச்சு விளையாட்டாகக் கூடச் சொல்லக் கூடாதா? அந்த உரிமை பாருக்குட்டிக்குக் கிடையாதா?'' என்றாள்.

தீப்பட்ட பனிக்கட்டியாக உருகிற்று அவன் நெஞ்சம். அவளுக்கு உரிமை இல்லை என்று எப்படிச் சொல்வான்? உண்மையில் அங்கு சூழ்நிலை மட்டும் நன்றாக இருந்தால் அவளுக்காக அவன் எதையும் செய்யத் தயங்க மாட்டானே!

''நாராயண்!'' அவன் அருகே வந்தாள் அவள்.

என்ன தோன்றிற்றோ, நாணு விலகிக் கொண்டான். ''வேண்டாம், பாருக்குட்டி. உன்னையே நீ நன்றாகப் புரிந்து கொள்ளாத வரை நான் இங்கு வருவதும் தவறு. அதோ பூஜை மாடத்தில் கவர் இருக்கிறது, எடுத்துக்கொள். அதை நான் மறுபடியும் தொட மாட்டேன்'' என்றவாறே வெளியே வந்தான்.

''நாராயண்!''

அவன் நின்று அவளை உற்றுப் பார்த்தான். கண்ணில் மாலை மாலையாக நீர் உகுத்துக் கொண்டு அவள் நின்றாள். கள்ளிக்கோட்டை விஜயத்துக்குப் பிறகு இந்த நாற்பது அல்லது ஐம்பது நாட்களுக்குள் அவளுடைய மனத்தில் பல புதுமைகளைக் குஞ்சராமனும் கோபாலும் நுழைக்க முயன்று ஓரளவு வெற்றியும் கண்டதாகச் சற்று முன் தோன்றியதெல்லாம் கண்ணீரில் கரைந்து போய் இப்போது பழைய பாருக்குட்டியே எதிரே நிற்பது போலிருந்தது.

''என்னை விட்டு விட்டுப் போகத்தான் வேண்டுமா, நாராயண்? நான் தப்பாக ஏதாவது சொல்லி யிருந்தால் மன்னித்துவிடுங்கள். குஞ்சராமனுக்கு உங்கள் மீது கோபம். அது என் புருஷன் இல்லையா? ஆனால் கோபால் நல்லவர். அவரைப் பற்றித் தப்பாக நினைக்காதீர்கள், நாராயண். என்னிடம் அவருக்கு எவ்வளவு அன்பு தெரியுமா? நீங்கள்தான் என்னை மறந்து விட்டுப் புறப்படுவதாகச் சொல்கிறீர்கள். கோபால் அப்படிச் சொல்ல மாட்டார், தெரியுமா?'' என்றாள் பாருக்குட்டி.

நாணு என்ன சொல்வான்?

''பாருக்குட்டியிடம் கோபம் இல்லை என்று சொன்னால்தான் போக விடுவேன் உங்களை.''

''கோபம் இல்லை.''

''பாருக்குட்டியிடம் கோபம் இல்லை என்று சொல்லுங்கள்.''

''பாருக்குட்டியிடம் கோபம் இல்லை... சரிதானே?''

''கோபாலிடமும் கோபம் இல்லை!''

''பாருக்குட்டி!''

''சொல்லுங்கள்!''

''கோபாலிடமும் கோபம் இல்லை.''

''குஞ்சுவிடமும்...''

''குஞ்சுவிடமும் கோபம் இல்லை.''

நாணு புறப்பட்டான். அவளும் வாசல் வரை வந்தாள் வழியனுப்ப. அதே சமயம் இருவர் நுழைந்து, ''குஞ்சராமனின் வீடு எது?'' என்று கேட்டார்கள்.

''வாங்க... வாங்க... இதோ இந்த வீடுதான். என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்று கேட்டாள் பாருக்குட்டி.

''அவரைப் பார்க்க வேண்டும்'' என்றார்கள் அவர்கள். நாணுவுக்கு அவர்கள் யார் என்று புரிந்து விட்டது. மாற்றுடையில், வந்திருக்கும் போலீஸ்காரர்கள் என்பதை முக ஜாடையிலிருந்து தெரிந்து கொண்டான்.

''வெளியே போயிருக்கிறார் அவர்'' என்றாள் பாருக்குட்டி.

''கோபால் இல்லையா?''

''அவரும் அவசரமாக எங்கேயோ போனார்.''

வந்தவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு அவளைப் பார்த்து, ''நீங்கள் கோபாலின் சம்சாரமா?'' என்று கேட்டார்கள்.

''இல்லை. குஞ்சராமனின் சம்சாரம்.''

''நாங்க வர்றோம். கோபால் வந்தால் சொல்லுங்க, சூப்ரெண்டு ஐயா அனுப்பினார்னு.'' அவர்கள் திரும்பிப் போனார்கள்.

பாருக்குட்டி நாணு பக்கம் திரும்பி, ''பார்த்தீர்களா! பெரிய மனிதர்களெல்லாம் பழக்கம் கோபாலுக்கு'' என்றாள் பெருமையோடு.

நாணு சிரித்தவாறே, ''உண்மைதான்'' என்றான்.

''கோபாலுக்கு கலெக்டர், மந்திரி எல்லோரையும் தெரியும்.''

''பாருக்குட்டி, இங்கே நடப்பதெல்லாம் நன்றாக இல்லை என்று உனக்குத் தோன்றவே இல்லையா?''

''மறுபடியும் ஆரம்பித்து விட்டீர்களா?''

''ஆரம்பிக்கவில்லை. முடிவுதான்'' என்றான் நாணு. பிறகு வேகமாக நடந்தவாறே, ''நான் போகிறேன்'' என்றான்.

''போய் வருகிறேன் என்று சொல்லுங்கள், நாராயண்.''


அது அவன் காதில் விழவில்லை.

பாருக்குட்டி சற்று நேரம் அவன் போவதையே பார்த்து விட்டுச் சிரித்தபடியே உள்ளே ஓடினாள். பூஜை மாடத்திலிருந்த உறை கண்ணில் படவே அதை மாடி அறையில் பெட்டியில் கொண்டு வைத்தாள். ''ரோஹிணி, தண்ணீர் பிடித்து வைத்தாயா? நான் குளிக்க வேண்டும்.... சாயந்திரம் சினிமாவுக்குப் போகலாம் என்று கோபால் சொல்லி யிருக்கிறார்'' என்றாள். உற்சாகம் பிறந்து விட்டது அவளுக்கு. பாடல் ஒன்று தவழ்ந்தது உதட்டில்.

வெளியே போயிருந்த கோபால் திரும்பி வந்தான்.

''குஞ்சு உங்களைத் தேடிக் கொண்டு போயிருக்கிறது. சூப்ரெண்டு அனுப்பினார் என்று இரண்டு ஆட்கள் வந்திருந்தார்கள்'' என்றாள் பாருக்குட்டி.

கோபால் ஒன்றும் பதில் சொல்லாமல் மாடி ஏறினான்.




நித்திரையில் புத்தகம் படிப்பதாகக் கனவு காண்கிறார்!

''சினிமாவுக்குப் போகலாமா, கோபால்?'' என்று கேட்டாள் பாருக்குட்டி.

''உம்....உம்.....'' என்றான் அவன்.

''ஏன், என்னவோபோல் இருக்கிறீர்கள்?''

''ஒன்றுமில்லை.... நீ போய்க் குளித்து விட்டுத் தயாராக இரு, பாருக்குட்டி.''

பாருக்குட்டி கீழறைக்குள் நுழைந்தாள். 'போனவன் போனாண்டி — அவன் வந்தாலும் வருவாண்டி' என்ற பாடலைக் கீறல் விழுந்த இசைத் தட்டுப் போலத் திரும்பத் திரும்பப் பாடியபடியே அவள் குளியலுக்குத் தயாராகும் போது குஞ்சுராமன் வந்தான்.

''சினிமாவுக்குப் போகலாம் என்று கோபால் சொல்கிறார். போகலாமா, குஞ்சு!'' என்று கேட்டாள் உள்ளிருந்தபடியே.

''அது ஒன்றுதான் குறையாக இருந்தது. சரி....சரி..... கதவைத் திற....'' என்று சீறி விழுந்தவன், ''எங்கே, உன் நண்பன் நாராயண் ?'' என்று கேட்டான்.

''புறப்பட்டுப் போய் விட்டார்.''

''போய் விட்டானா? எப்போது?''

''இப்பத்தான். சூப்பிரெண்டு ஆள் அனுப்பினாரே, அப்பொழுது.''

'' சூப்ரண்டு ஆள் அனுப்பி விட்டாரா, அதற்குள்? வேலை துரிதமாக நடக்கிறாற் போலிருக்கிறதே!''

பாருக்குட்டி கதவைத் திறந்து அவனைப் பார்த்தாள். அவனுக்குக்கூட ஏதோ ஓர் அர்த்தமற்ற பயம் ஏற்பட்டு விட்டது போலக் கண்ணில் மிரட்சி தெரிந்தது.

''தொலைந்தான் நாராயண்! என்னை ஒழித்துக் கட்டினவனை நான் விடுவேனா !'' என்று குஞ்சுராமன் உரக்கக் கத்தினான்.

கோபால் மாடியறையிலிருந்து எட்டிப் பார்த்து அவனுக்குச் சமிக்ஞை செய்யவே, குஞ்சுராமனின் உற்சாகம் அடங்கிற்று.

''குஞ்சு, வா இங்கே.''

''என்ன கோபால்?''

''உனக்கு ஏதாவது மூளைகீளை இருக்குதா?''

குஞ்சுராமன் சிரித்தான்.

''பாருக்குட்டி, நீ குளித்து டிரஸ் செய்துவிட்டுத் தயாரா இருந்தால்தானே சினிமாவுக்குப் போகலாம்?'' என்றான் கோபால்.

அவள் கதவைத் தாளிட்டுக் கொண்டாள். 'போனவன் போனாண்டி, அவன் வந்தாலும் வருவாண்டி....'

மாடியில் அதன் பிறகு நண்பர்கள் என்ன பேசினார்களோ, பாருக்குட்டி திரும்ப வந்த போது சிலைபோல வீற்றிருந்தார்கள்.

''போகலாமா?'' என்று அவள் கேட்டாள்.

''போகமுடியாது'' என்றான் குஞ்சுராமன். கோபால் சமாதானமாக, ''நாளைக்குக் கட்டாயம் போவோம், பாருக்குட்டி.... இன்றைக்கு அவசர வேலை இருக்கிறது'' என்றான்.

அவள் தன்னை ஏமாற்றி விட்டதற்காகக் கோபாலைச் சபித்தாள். குஞ்சுராமன்தான் தடுத்து நிறுத்தி விட்டானென்று சீறினாள். வாசற்புறம்போய் உட்கார்ந்து கொண்டாள்.

மீண்டும் அவ்விரு போலீஸ்காரர்களும் வந்து நின்றார்கள். இப்போது போலீஸ் உடை தரித்திருந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் அவளே சொன்னாள். ''குஞ்சுவும் கோபாலும் மாடியிலிருக்கிறார்கள்.''

''நாராயண் இருக்கிறாரா?''

''இல்லையே !''

அவர்கள் மாடி நோக்கி நடந்தார்கள் முரட்டு பூட்சுகளின் ஒலி மொர மொரக்க.

''ரோகிணி, டீ போட்டுக் கொடு....' பெரிய மனிதர்கள் வந்தால் இப்படியா நிற்பது?'' என்றாள் பாருக்குட்டி.

இருபது குடித்தனக்காரர்களில் பத்துப் பேர்கள் எட்டிப் பார்த்தார்கள். சிவப்புத் தொப்பிகள் அந்த வட்டத்துக்குள் நுழைந்தது அதுவே முதல் தடவை.

''ஏம்மா, திருட்டு கிருட்டு நடந்து போச்சா?'' என்று விசாரித்தாள் ஒருத்தி.

''ஊஹூம்.... சூப்ரெண்டு அனுப்பியிருக்காரு.... கோபாலுக்கு எல்லாரையும் தெரியும்'' என்றாள் பாருக்குட்டி.

''ஓஹோ!''

''மந்திரி, கலெக்டர், தாசில்தாரு எல்லாரும் கோபாலிடம் அன்பா பழகுவாங்க.''

'' நாங்க என்னத்தைக் கண்டோம்?''

மாடி அதிரப் போலீஸ்காரர்களும் கோபாலும் குஞ்சுராமனும் இறங்கி வந்தார்கள். பாருக்குட்டிக்கு ஒன்றும் தெரியவில்லை. ''டீ சாப்பிடுங்க....'' என்றாள்.

''வேண்டாம் அம்மா.... உன் புருஷனையும் கோபாலையும் அழைத்துக் கொண்டு போகிறோம்.''

'' எங்கே ?''

''சும்மாத்தான். காற்று வாங்க.''

''கோபால், என்ன இது?'' என்று இலேசாகப் பயமும் சந்தேகமும் எழவே அவள் கேட்டாள்.

அவன் பதில் சொல்லவில்லை.

''குஞ்சு !'' என்று அலறினாள்.

அவன் பல்லைக் கடித்து, ''எல்லாம் உன்னால் வந்த வினை!'' என்றான் முகத்தைத் திருப்பிக் கொண்டு.

''என்னாலா?.... என்னால் என்ன வந்ததாம்?.... கோபால், சொல்லுங்க....''

கோபால் பரிதாபமாகத் தலையை ஆட்டினான்.

''உம்....உம்.... நடங்க.....'' போலீஸ் கட்டளையிட்டது.

அந்தப் பெரிய மனிதர்கள் போலீஸ் பந்தோபஸ்துடன் நடப்பதைப் பார்த்த பாருக்குட்டி ஆபத்து வந்துவிட்டதை அப்போதுதான் உணர்ந்தவளாய்,—''நாராயண், நீங்க சொன்னது சரியாகப் போயிற்றே!'' என்று வீறிட்டு அழலானாள். (தொடரும்

# உங்கள் கேசம் உதிருகிறதா?

## இம் மாதிரி அபாயக் குறிகளை அசட்டை செய்யாதீர்கள்:



★ கேசம் குறைதல்
★ மெழுக்கென்ற, துவண்ட ரோமம்



**இளமையில் வழுக்கை**
இந் நிலை ஏற்படுவதைப் பெரும்பாலும் தடுத்திருக்க முடியும்.

கேசம் குறைதல், ரோம உதிர்வு ஆகியவை உங்களைப் பாதித்தால் இன்றே ப்யூர் சில்விக்ரின் உபயோகிக்கத் தொடங்குங்கள். உங்கள் ரோமத்திற்கு ஆக்கம் தரும் பதினெட்டு அமினோ-அமிலங்கள் யாவும் அடர்வான நிலையிலே செறிந்துள்ளது ப்யூர் சில்விக்ரின். உச்சந் தலையிலே அழுத்தித் தேய்த்தால் ப்யூர் சில்விக்ரின் மயிர்க்கால்களை ஊடுருவி, நீடித்த நலனைக் கேசத்திற்கு மீட்டுக் கொடுக்கத் தேவைப்படும் இயற்கையான ஊட்டத்தை வழங்குகிறது.

ஆல் அபௌட் ஹேர் (ALL ABOUT HAIR) என்ற, படங்கள் கொண்ட இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினீர்களானால் இவ் விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-1, சில்விக்ரின் அட்வைசரி சர்விஸ், தபால் பை 727, பம்பாய் 1.




**ப்யூர் சில்விக்ரின்**
கேசக் கோளாறுகளின் சிகிச்சைக்கான நேர்த்தியான குணம் செறிந்த தயாரிப்பு. ஒரு மாத சிகிச்சைக்குப் போதுமானது.

**சில்விக்ரின் ஹேர் டிரஸ்ஸிங்**
நாள் முழுதும் உங்கள் கேசத்தைப் பாங்காகப் படியவைத்திருக்கும். கேசக்கோளாறுகள் ஏற்படாமல் தடுக்கப் போதுமான ப்யூர் சில்விக்ரின அடங்கியது




# Silvikrin

**சில்விக்ரின் — கேச ஆரோக்கியத்திற்கான வழி**

SP/1/P/2/66



# மலேசியா மாநாடு

**சா. கணேசன் எம்.எல்.ஏ**

மகாநாடு நடைபெற்ற 'மூன்றாவது தங்கிவோழ் கல்லூரி.'

சிம்மாசனம் என்ற இச்சொல் சம்ஸ்கிருதச் சொல்தான் என்றாலும், மலாய் அச்சொல்லே நேரே சம்ஸ்கிருதத்திலிருந்து தழுவிக் கொள்ளவில்லை என்பதையும், தமிழிலிருந்துதான் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும், 'சிம்ஹாசனு' என்று மொழியாது 'சிங்காசனு' என்றே மொழிவதிலிருந்து நாமும்கூடத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது இல்லையா ?

இன்னும் எத்தனை எத்தனையோ தமிழ்ச் சொற்கள் மலாய் மொழியில் இன்றும் நின்று நிலைத்து விட்டதைக் காணலாம். கப்பல், கடை, படகு, மச்சம் (மாதிரி) போன்ற பல சொற்களை நாம் நினைப்படி கேட்க முடிகிறது. இந்த நிலைமையின் மூலம் ஓர் உண்மையைப் புரிந்து கொண்டு விட்டால் மலாய் நாட்டு வரலாற்றின் அடிப்படையை ஒருவாறு நாம் தெரிந்து கொண்டுவிடலாம்.


பன்னூறு ஆண்டுகட்கு முன்பிருந்தே தமிழகத்துக்கும் மலேயா தீபகற்பத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது. அது அரசியல் நெறியில் மட்டுமின்றி மொழி, கலை, நாகரிகம் முதலான நெறிகளிலும் ஏற்பட்ட ஒரு வளமான, மகிழ்ச்சியூட்டத்தக்க தொடர்பாகும்.

அந்த நாட்டின் பெயரே மலையூர் என்பதாகும். ''மலயூ'' என்றே அது அந்நாட்டவராலும் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. மலேக்கா (மலக்கா) சிங்கபுரம் (சிங்கப்பூர்) மூவாறு போன்ற பல நகரங்களின் பெயரும் தமிழ்ப் பேர்களே என்று டாக்டர் வின்ஸ்டட் போன்ற வரலாற்றுப் பேராசிரியர்கள் கருதுகிறார்கள். அந்த நாட்டு இலச்சினையும் சமீபகாலம் வரை புலியாக இருந்ததையும் அவர்கள் உணர்த்தத் தவறினார்களில்லை. நாடு விடுதலை பெற்ற பின்னரும், நாட்டு இலச்சினையில் இரட்டைப் புலி இடம் பெற்றிருப்பதைக் காணலாம். மலாய் நாட்டுப் பெருமக்களின் குடும்பப் பெயர்களிலும் தமிழ் நாட்டுத் தொல்குடிப் பெருமக்களின் பட்டப் பெயர்கள் ஒட்டிக் கொண்டிருப்பதை இன்றும் காண முடிகிறது.

இங்ஙனம் பல வகையாலும் தமிழோடும், தமிழ்ப் பண்பாட்டோடும் இணைந்து புகழ் பூத்து நிற்கும் மலேசியாவில், அதன் தலை

மகாநாட்டில் தெ. பொ. மீ., ஜான் பிலியோஸா, தனிநாயக அடிகள் ஆகியோர்.





கோலாலம்பூர் புதிய விமான தளக் கட்டடம்

நகரான கோலாலம்பூரில், தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு மாநாடு நடைபெற்றது பொருத்தந்தானே? "என்னதானிருந்தாலும் முதல் மாநாடு தமிழகத்தில் நடப்பதுதான் சிறப்பாகும்!" என்று சிலர் கூறுவது என் செவியிலும் விழத்தான் செய்கிறது. அதற்கு நமது முதலமைச்சர் திரு பக்தவத்சலம் அன்றே பதில் கூறிவிட்டார். அன்றியும்,

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமை எனில், வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல்வேண்டும்"

என்பது, தமிழனைத் தலை நிமிர வைத்த கவி மன்னன் பாரதியின் மணி வாக்கன்றோ?

14–4–66 வரை மாநாட்டுக்குப் பல்வேறு நாடுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமக்களுள் மிகப் பெரும்பாலோர் வந்து சேர்ந்து விட்டனர். தமிழ் ஆண்டுப் பிறப்பு நாளில் சென்னையில் தமிழ் வெளியீட்டுக் கழகம் தமிழ் நூல் வெளியீட்டு விழாவை நடத்தியதால் முதல் அமைச்சர் உள்படப் பலர் 15–4–66 விமானத்திலேயே வரலானார்கள்.

தமிழகத்திலிருந்து மொத்தம் 46 பெருமக்களே மாநாட்டில் கலந்து கொண்டனர். அவர்களில் சுமார் 15 பேர் முன்னதாகவே வந்து விட்டனர். முதலமைச்சர், மதுரை பல்கலைக் கழகத் துணைவேந்தர், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், வ. உ. சி. கல்லூரி முதல்வர் அ. சீநிவாசராகவன், பேராசிரியர் மு. வரதராசன், புதுவை உயர் நீதிபதி எஸ். மகராஜன், நாவலர் நெடுஞ்செழியன், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், சென்னை அரசுச் செயலாளர் கார்த்திகேயன், தமிழ் நூல் வெளியீட்டுக் கழகச் செயலாளர் அ. ச. ஞானசம்பந்தன், உட்பட சுமார் 30 பெருமக்கள் 15–4–66 இரவே கோலாலம்பூர் வந்து சேர்ந்தனர். விமானத் திடலில் இவர்கட்குச் சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. மாநாட்டு அமைப்புக் குழுவினரும், பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் போட்டி போட்டுக் கொண்டு மாலை அணிவித்து வரவேற்றனர். விமானத் திடலிலும், மண்டபங்களிலும், தமிழ் மக்களாகவே நிறைந்து விட்டனர்.

எல்லோரையும் வரவேற்று அவரவர்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடங்களுக்கு இட்டுச் சென்று தங்க வைத்தனர். இவர்கள் முன்னதாகவே வர முடியாமல் போனதால், 15–4–66 மாலை 7 மணிக்கு நடைபெற வேண்டிய 'அறிமுக உண்டி' நடைபெற முடியாமற் போயிற்று.

தொடக்க விழாவில் கலந்துகொண்ட அயல் உலகப் பிரமுகர்கள்.




# எப்பொழுதும் புத்துணர்ச்சியுடன் இருங்கள் நாள்முழுவதும் சுறுசுறுப்பாக இயங்குவதற்கான புத்துணர்ச்சிக்கு

# புதிய கால்கேட் லோர்னே டால்க்

புதிய கால்கேட் லோர்னே டால்க்கின் புதுப்பிக்கும் நறுமணம் உங்களைக் குளுமையுடனும், புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்கிறது....நாள் முழுவதும் அந்தத் துடிப்பான சுறுசுறுப்பைத் தருகிறது. இளமைத் துடிப்பும், சுறுசுறுப்பும், விளையாட்டுகளில் பிரியமுள்ளவர்கள் குறிப்பாக கால்கேட் லோர்னே டால்க் வியர்வையைத் துரிதமாக கிரகித்துக்கொண்டு தாங்கள், நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க உதவுவதை நன்கு அறிவார்கள்!

இது சிக்கனமானதும்கூட! உங்கள் குடும்பத்தினருக்கு கால்கேட் லோர்னே டால்க்கை வாங்குங்கள்.—அது சுறுசுறுப்பான நாகரீக மக்களுக்கேற்ற புதியதொரு பரவசமூட்டும் நறுமணம் கொண்டது!









CLT.SJ.TAM

அதற்காக ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொள்ள எவருமே தவறவில்லை.

16—4—66 சனிக்கிழமை காலை சுமார் ஒன்பது மணிக்கே எல்லோரும் குளித்து முழுகி விட்டு, எப்பொழுது பஸ் வரும், கார் வரும் என்று அவரவர் தங்கும் அறைகளைப் பூட்டி விட்டு, மூன்றாவது தங்குமிடமாகிய கல்லூரியின் முன்றிலுக்கு வந்து சேர்ந்து விட்டனர். 9—30 மணிக்கு எல்லோரும் பஸ்களிலும், கார்களிலுமாகப் புறப்பட்டு, துங்கு அப்துர் ரஹ்மான் மண்டபத்துக்கு வந்து சேர்ந்து விட்டோம். குளிர்பதனம் செய்யப்பட்ட அகலமான மண்டபம். மேடை அழகாக அமைந்திருந்தது. பெரு மக்கள் யாவரும் மண்டபத்தின் கவர் ஓர வரிசைகளில் அமர, நாட்டின் பிரமுகர்கள் யாவரும் மண்டபத்தின் நடு வரிசையில் அமர்ந்திருந்தனர்.

10—30 மணிக்கு மலேசியப் பிரதமர் சென்னை முதல்வர், மலேசியா பல்கலைக் கழகத் துணை வேந்தர், டாக்டர் பிலியோஸா தெ. பொ. மீ., முதலியவர்களை அழைத்துக் கொண்டு மாநாட்டு அமைப்புக் குழுத் தலைவர் டான் ஸ்ரீ சம்பந்தம் (தொழிலமைச்சர்) மேடைக்கு வந்து சேர்ந்தார்.

எல்லாரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த நாட்டுப் பிரதமரும், தமிழக முதல்வரும், மலேயா பல்கலைக் கழகத் துணை வேந்தரும், பின் ஸ்ரீ சம்பந்தம், டாக்டர் பிலியோஸா, தெ. பொ. மீ., மு. வ., தனிநாயக அடிகள் முதலியோரும் மேடைக்குச் சென்று அமர்ந்தார்கள்.

முதலில், அமைப்புக் குழுவின் சார்பாக, அதன் தலைவர், அமைச்சர், டான்ஸ்ரீ வீ.தி. சம்பந்தம், பெருமக்கள் யாவருக்கும் வரவேற்புரை நவின்றார். அதில் தமிழின் பெருமை, மலேயாவில் தமிழுக்கும், தமிழர்க்கும் தந்துள்ள உரிமை, இம் மாநாட்டை முதலில் கூட்டும் மலேசியாவின் நற்பேறு ஆகியவற்றை எடுத்துரைத்து எல்லாருக்கும் நல்வரவு கூறினார்.

அடுத்து மலேயா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றும் பேராசிரியர் ஆர். எல். ஹியுஆங் பல்கலைக் கழகத்தின் சார்பில் வரவேற்புரை நிகழ்த்தினார். அதில் மலேயா பல்கலைக் கழகம் இந்த மாநாட்டுக்குக் காட்டும் அன்பாதரவை விளக்கினார்.

அதற்கடுத்து அனைத்து நாட்டுத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில், அதன் தலைவர் பேராசிரியர் ஜான் பிலியோஸா வரவேற்புரையாற்றினார். அதில் அனைத்து நாட்டுத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் நோக்கத்தையும் அதன் பணியையும் விவரித்தார்.

மூன்று வரவேற்புக்களுக்கும் பின்னர் மலேசியாவின் பிரதம மந்திரியான யாங் தெராமாத் மூல்ய, துங்கு அப்துல்ரஹ்மான், புத்ரா அல்—ஹாஜ் நாட்டுப் பிரதமர் என்ற முறையிலும், பல்கலைக் கழகத்து வேந்தர் என்ற முறையிலும், வந்திருக்கும் பெருமக்களுக்கெல்லாம் நல்வரவு கூறி, தொடக்கவுரையாற்றினார். அதில், ''மலேசியா மொழி பல உடைய நாடு; மதம் பல உடைய நாடு; பழக்கவழக்கங்கள் பல உடைய நாடு;



# மாற்றுவோம்!

— புதுமைக்கவி


உணவுப் பண்ட விலையின் ஏற்றம்
உண்மை யாகச் சகிக்கல்லே!
உயர்விலுலே விவசா யிக்கு
ஒன்றும் லாபம் கிடைக்கல்லே!

நாட்டில் விளைச்சல் குறைச்சல் இல்லே
ஆட்சிக் கணக்கே சொல்லுது!
நாளும் விலைகள் உயர்ந்து மக்கள்
நல்ல வாழ்வைக் கெடுக்குது!

நியாய விலையில் விற்பதாக
நீட்டும் கணக்குப் பேசுது!
நள்ளிரவில் அரிசி மூட்டை
லாரி ஏறிப் போகுது!

சம்பளந்தான் உயர வில்லே
சங்க டந்தான் உயருது
சாமான் வாங்கக் கியூவில் நின்று
காலும் கையும் நோகுது!

அரிசிக் கடைகள் திறந்ததாலே
ஆதாயந்தான் யாருக்கு?
அறிந்து மக்கள் ஆட்சி மாற்றினல்
அகலுந் தொல்லை ஏழைக்கு!



இனமும் பல உடைய நாடு; என்றாலும் ஒருவரை ஒருவர் பகைக்காமல், வெறுக்காமல் ஒன்றுபட்டு, உறவாடி, மகிழ்ந்து வாழுகிற மாண்புள்ள நாடு; எங்கே நல்லதைக் கண்டாலும் அதைப் பாராட்டும்செவ்வியுடைய நாடு; தமிழை, அதன் பழமையை, பண்பாட்டை நாங்கள் மதிக்கிறோம், மரியாதையும் செய்கிறோம்'' என்றெல்லாம் கூறிய அப்பெருமகன், ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்!'' என்ற சொற்களைத் தமிழ் மொழியிலேயே ஓதி, ''எவ்வளவு அருமையான கருத்து இது!'' என்று நெஞ்சாரப் பாராட்டிய போது அவையோர் அனைவரும் மகிழ்ச்சிப் பெருக்கடைந்து எழுப்பிய கைவொலி மாநாட்டின் மாண்பினைக் கண்டு மகிழ்தற் பொருட்டு வானவரையும் வருக என்று அழைப்பது போன்றிருந்தது.

பிரதமரின் தொடக்கவுரை நிறைவேறிய பின்னர் தமிழக முதலமைச்சர் திரு பக்தவத்சலம் பாராட்டுரை வழங்கினார். இம்மாநாட்டைத் தொடங்கிவைத்த மலேசியப் பிரதமருக்கு நன்றியுரைத்து, அவருடைய நேர்மையையும் பண்பாட்டையும் புகழ்ந்தும் மாநாட்டைக் கூட்டியவர்களின் முயற்சியைப் பாராட்டினார். இப்பாராட்டுரையின்இடையில், ''இம் மாநாடு தமிழகத்தில் கூடியிருக்க வேண்டும்; ஆனால், நாட்டில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலை காரணமாக அங்கு கூட்ட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. என்றாலும் அடுத்த மாநாட்டைத் தமிழகத்தில் நடத்த ஏற்பாடு செய்கிறோம்; அதற்கான அழைப்பையும் இப்பொழுதே விடுக்கிறேன்'' என்று கூறியதும் மீண்டும் கைவொலி விண்ணதிர முழங்கியது.

இறுதியில் மாநாட்டு அமைப்புக் குழுவின் பொதுச் செயலாளர் திரு செல்வநாயகம் எல்லார்க்கும் நன்றியுரை பகரத் தொடக்க விழா அழகாக நிறைவேறிற்று.

எல்லாமே சுமார் ஒரு மணி நேர அளவில் கனகச்சிதமாக அமைந்த இவ்விழா மாநாட்டுக்கு ஒரு பொலிவையே தந்து விட்டது. விழாவில் மாநாட்டுப் பெருமக்களே யன்றி ஆயிரம் ஆயிரமாகப் பொருளை வாரி வழங்கிய அன்பர்களும், பிறநாட்டுத் தூதுவர்கள், பல் துறை அதிகாரிகள் முதலிய பல்வேறு பெரிய மனிதர்களும் நிரம்பியிருந்த காட்சி ஏதோ ஒரு முடிசூட்டு விழாவையே நினைப்பூட்டியது. இச் சந்தர்ப்பத்தில் ஒன்றைக் கூற வேண்டியது என் தவிர்க் கொணாக் கடமையாகும்.


இம்மாநாட்டின் சிறப்புக்குக் காரணங்களும் காரணவான்களும் பலர் என்றாலும், பள்ளி ஆசிரியர்களின் ஆர்வமே ஒப்புரைக்க வொண்ணாததாகும். காலும் அரையும், ஒன்று மிரண்டும், ஐந்தும் பத்துமாகச் சேர்த்து ஆயிரக்கணக்கில் வெள்ளியைக் கொண்டு சேர்த்தார்கள். எவ்விதப் பதவியும் இன்றித் தமிழன்பு ஒன்றாலேயே உந்தப்பட்டவர்கள் இவர்கள். மெய்யாகச் சொன்னால், மலேயாவில் தமிழைச் சாகாமல் காத்து வரும் தனிப் பெருந் தொண்டர்கள் இவர்கள் தாம். பட்டப் படிப் பொன்றும் படியாவிட்டாலும் தமிழின்பால் கொண்ட எல்லையற்ற அன்பில் சிற்றூர்களிலும், கம்பங்களிலும் (தோட்டங்கள்) தங்கி, அங்கங்கேயுள்ள தமிழ்க் குழந்தைகளுக் கெல்லாம் தமிழைக் கற்றுத் தரும் இவர்களின் திருப்பணியிலேதான் தமிழ் மலேயாவில் வாழ்கிறது, வளரவும் செய்கிறது. உண்மை; இது, வெறும் புகழ்ச்சியில்லை; இச்சகமுமில்லை. (தொடரும்)

**கண்டுபிடியுங்கள்—விடை:**

''நான் கண்டதாகக் கூறியது உழவன் ஒருவன் ஏர் ஓட்டும் காட்சியைத்தான். அதாவது, இரு காளைகளை ஏரில் (கலப்பையில்) பூட்டி ஓட்டும்போது, இரண்டு காளைகளின் கால் எட்டும், ஓட்டும் மனிதன் கால் இரண்டும் ஆகப் பத்து கால்களும்; காளைகளின் தலை இரண்டும், மனிதன் தலை ஒன்றும் ஆக மூன்று தலைகளும்; இரண்டு காளைகளின் முகத்தில் உள்ள கண்கள் நான்குடன் ஓட்டுபவன் முகத்தில் உள்ள கண்கள் இரண்டும் சேர்த்து ஆறு கண்களும்; காளைகள், மனிதன் முகங்களோடு, கொழுமுகம் மூன்றும் சேர்த்து ஆறு முகங்களும்; காளைகள், மனிதன் ஆகியோரின் மூன்று வாய்களோடு நாழிவாய் ஒன்றும் சேர்த்து நான்கு வாய்களும்; ஆகிய இவற்றைத்தான் நான் கூறினேன்'' என்று நண்பன் கூறி முடித்தான்.

ஆதாரம்: தனிப்பாடல் திரட்டு

## பார்த்தது உண்டா?



சாட்சியைப் பார்த்து நீதிபதி கேட்டார்: ''துப்பாக்கி வெடித்ததை நீர் பார்த்தீரா?''

''இல்லை, ஆனால் சத்தத்தைக் கேட்டேன்'' என்றார்.

''அது போதுமானதல்ல. நீர் கண்ணால் பார்த்திருக்க வேண்டும்...!''

கூண்டைவிட்டுக் கீழே இறங்கி, நீதிபதிக்கு முதுகைக் காட்டி நடந்தபடி பெருஞ் சிரிப்புச் சிரித்தார் சாட்சி. நீதிபதி அவரைக் கூப்பிட்டு, ''ஏன் அப்படிச் சிரித்தீர்? உம்மீது நடவடிக்கை எடுக்கட்டுமா?'' என்று கண்டித்தார்.

''நான் சிரித்ததை நீர் பார்த்தீரா?'' என்றார் சாட்சி.

''இல்லை. ஆனால் சத்தத்தைக் கேட்டேனே?''


''அது போதுமானதல்ல, நீர் பார்த்திருக்க வேண்டும்...!''

—எம். எம். கே.

**1966 ஜூன் 10 முதல்**

சென்னை : வெலிங்டன், ஸ்ரீ கிருஷ்ணா, ராக்ஸி & ராம்

மற்றும் தென்னாடெங்கும்



# காரணம் என்ன



காளத்தி நாதன்

அலுவலகத்துக்கு வந்த 'பைல்' குவியல்களில் முகத்தைப் புதைத்துக் கொண்ட பிறகுகூட மூர்த்தியின் உள்ளம் புகைந்து கொண்டுதான் இருந்தது. பிரேமா இவ்வளவு மூர்க்கமாக இருப்பாள் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை. எவ்வளவு இதமாக எடுத்துச் சொன்னாலும் அவளது மர மண்டையில் ஏறித் தொலைத்தால்தானே ?

''என்ன மூர்த்தி, வந்ததிலிருந்து பார்க்கிறேன். நீ அந்த ஒரு கடிதத்தை வைத்துக் கொண்டே கவலையோடு உட்கார்ந்திருக்கிறாயே.....?'' என்று பக்கத்து 'சீட்' சங்கரன் அவனைப் பார்த்துக் கேட்டான்.

''இதிலே ஒன்றும் இல்லை, சங்கரன். காலையில் வீட்டில் கொஞ்சம் மனஸ்தாபம். அதையே நினைத்துக் கொண்டிருப்பதால் எதிலுமே மனம் பதிய மாட்டேன் என்கிறது. இந்தத் தொல்லையெல்லாம் உனக்கு ஏது? கட்டைப் பிரம்மச்சாரியாக நீ குஷியாகக் காலம் தள்ளுகிறாய். உன் பாடு தேவலை'' என்று பெருமூச்சுவிட்டான்.

கடந்த ஒரு வாரமாகவே பிரேமாவை வற்புறுத்திக் கொண்டிருந்தான் மூர்த்தி. ''செலவு அதிகமாகி விட்டது. இனிமேல் நான் ஒருத்தன் மட்டும் சம்பாதித்துக் குடும்பத்துக்குக் காணாது. நீயும் வேலைக்குப் போ'' என்று, பல அலுவலகங்களின் விலாசங்களைக் கொடுத்து விண்ணப்பம் போடும்படி தூண்டி வந்தான்.

''எனக்கு வேலைக்குப் போக இஷ்டமில்லை'' என்று எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிட்டாள் பிரேமா. ஆனால் மூர்த்தி அவளை அவ்வளவு சீக்கிரத்தில் விட்டுவிடத் தயாராயில்லை.

''குழந்தைகள் பிறந்து விட்டார்கள். குடும்பத்துக்கு எவ்வளவு செலவாகிறது தெரியுமா? கொஞ்சம்கூடப் பொறுப்பில்லாமல் பிதற்றாதே!''

''நானும் பொறுப்போடுதான் பேசுகிறேன். சம்பாத்தியம் போதவில்லையென்றால், செலவைக் குறைத்துக் கொள்வோம். அதற்காக வேலைக்குப் போக எனக்குப் பிடிக்கவில்லை.''

''எந்தச் செலவைக்குறைத்து ஈடுகட்டுவது? உன் மண்டையில் எதுவும் இருந்தால்தானே?''

''ஏன், நீங்கள் சிகரெட் விட்டாலே மாதம் இருபது ரூபாய் மிச்சப்படுத்தலாமே! இன்னும் சீட்டாட்டம், ரேஸ், சினிமா....''

''சீ! சீ! வாயை மூடு! உனக்கு வரவர மட்டு மரியாதை இல்லாமலே போய் விட்டது. கணவனிடம் எப்படிப் பேசுவது என்று எங்கேயாவது போய்க் கற்றுக் கொண்டுவா.''

அன்று முழுக்க முழுக்க அலுவலகத்தில் ஒரு வேலையும் ஓடவில்லை. பிற்பகல்வரை எப்படியோ பொழுதைக் கழித்துவிட்டு, ஒரு சினிமாவுக்காவது போய்த் தொலைவோம் என்று 'பெர்மிஷன்' எழுதிப் போட்டுவிட்டு வெளியே வந்தான் மூர்த்தி. மவுண்ட்ரோட்டுக்குள் நுழையும்போது மாட்னி காட்சி முடிந்து வரும் கூட்டத்தில் வசந்தாவைக் கண்டான் மூர்த்தி. அப்போதிருந்த மன நிலையில் அவளுடன் பேச்சுக் கொடுக்க வேண்டும் போல் அவனுக்குத் தோன்றியது. வசந்தா பிரேமாவுக்கு உற்ற தோழி.

வசந்தா, தன்னுடைய பஸ்ஸுக்காகத் திரும்பிய போது, பக்கத்தில் எதிர்பாராத விதமாய் மூர்த்தி நின்று கொண்டிருப்பதைப் பார்த்துச் சற்றுத் திடுக்கிட்டாள்.

மூர்த்தி, குழந்தைகளையும் அவள் கணவன் ரகுவையும் பற்றி நலம் விசாரித்தான். பிறகு, ''இன்றைக்கு உங்களுக்கு ஆபீஸ் இல்லையா?'' என்று கேட்டான்.

''அவருடைய கடைசித் தங்கைக்குத் திருமணம் நிச்சயமாகியிருக்கிறது. அதனால் ஒரு மாசம் லீவு போட்டிருக்கிறேன்'' என்றாள் வசந்தா.

''நான் கேட்கிறேன் என்று தப்பாக நினைக்காதீர்கள்.... இப்பொழுது உங்கள் வீட்டில் நீங்கள் இரண்டு பேரும் சம்பாதிக்கா விட்டால் வாழ்க்கையை இலகுவாகத் தள்ள முடியுமா?''

''அது முடியவே முடியாது. ஏன் நீங்களும் பிரேமாவை வேலைக்கு அனுப்ப நினைக்கிறீர்களா?''

''நான் சொல்வதற்குள் கவனித்து விட்டீர்களே. பிரச்னையே இவ்வளவுதான். நான்

சம்பாதிக்கிறது போதவில்லை என்று அவளை யும் வேலைக்குப் போகச் சொல்கிறேன். இது அவளுக்குச் சம்மதமில்லை. இதனால்தான் எனக்கும் அவளுக்கும் மனஸ்தாபம்....''

''இதில்மனஸ்தாபத்துக்கு இடமேது?''

''இதை அவள் மர மண்டையில் தைக் கும்படி சொல்லுங்கள். வருகிற ஞாயிற்றுக் கிழமை நீங்கள் கண்டிப்பாக என் வீட்டுக்கு வர வேண்டும். அவளுக்கு எடுத்துச்சொல்லி எப்படியாவது சம்மதிக்க வைத்து விடுங்கள். எங்கள் குடும்பத்துக்குப் பெரிய உதவி செய்ததாக இருக்கும். அவள் கோபித்துக் கொள்வாளோ என்று தயங்க வேண்டாம். எங்கள் குழந்தை குட்டிகளுக்காக இதைச் செய்யுங்கள்......''

''சரி'' என்று ஒப்புக் கொண்டு புறப்பட் டாள் வசந்தா.

ஃ ஃ ஃ

ஞாயிற்றுக்கிழமை. மத்தியான விருந் துக்குப் பிறகு குழந்தைகள் கூடத்தில் விளை யாடிக் கொண்டிருந்தார்கள். வேறு ஏதோ வேலை இருப்பதாகச் சொல்லி ரகு விடை பெற்றுக் கொண்டு போய் விட்டான். மூர்த்தி ஓர் அறையில் உட்கார்ந்து, அடுத்த அறையில் வசந்தாவும் பிரேமாவும் பேசு வதையே காது கொடுத்துக் கூர்மையாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''இதோ பார் பிரேமா! உன் குடும்ப விவகாரத்தில் நான் அநாவசியமாகத் தலை யிடுவதாக நினைத்து விடாதே. உன் கணவர் கேட்டுக் கொண்டதன் பேரில்தான் நான் பேசுகிறேன். தயவுசெய்து கொஞ்சம் பொறுமையாகச் சிந்தித்துப் பார்....'' என்ற பீடிகையோடு ஆரம்பித்தாள் வசந்தா. ''இந்தக் காலத்தில் ஒருவர் சம்பாதித்து ஒரு குடும்பத்தை நடத்துவது எவ்வளவு கஷ்டம்! யாராவது சொல்லித்தான் இது தெரிய வேண்டுமா? அவர் மனசு கஷ்டப் படும்படி ஏன் வைக்கிறாய்? பேசாமல் நீ வேலைக்குப் போனால் என்ன?''

சட்டென்று எதுவும் கூறாமல் அவளையே ஊடுருவிப் பார்த்தாள் பிரேமா. பிறகு நிதானமாகப் பேசினாள்: ''இவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்ட பிறகு உன்னிடம் விஷயத்தை உடைத்துச் சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன். எனக்குக் கல்யாணம் நடந்த பொழுது நான் வேலையில்தான் இருந் தேன் என்பது உனக்கு நினைவிருக்கிறதா?''

''ஏன் இல்லாமல்? கல்யாணத்துக்குப் பிறகுகூடக் கொஞ்ச நாட்கள் வேலை பார்த் தாயே!''

''ஆமாம். அதை ஏன் விட்டுவிட்டேன், தெரியுமா? அவருடைய வற்புறுத்தல் தாளா மல்தான்!''

''என்ன? அவர்தான் வேலையை விட்டு விடச் சொன்னாரா?''

''இதைக் கேள் வசந்தா. அப்பொழுது நான் இருந்த கவர்ச்சிக்கும் அழகுக்கும் ஆசைப்பட்டுத்தான் இவர் என்னை மணந்து கொண்டார். ஆனால் அதுவே இவர் மனத்தில் பலவீனத்தையும் ஊன்றி விட்டது. ஆபீசில் எல்லாருக்குமே என் மேல் ஒருவித மயக்கம் இருந்தது என்று எனக்குத் தெரியும். ஆண் குமாஸ்தாக்கள் முப்பத்திரண்டு பற்களையும் காட்டிக் குழைந்து குழைந்து பேசிக் கொண் டிருப்பார்கள். நான் எதையும் விகற்பமாக எடுத்துக் கொள்வதில்லை. சில பெண்கள் இதனால் என் மேல் பொறாமைப்பட்டதுகூட உண்டு. ஆனால் இவருக்கு என் மேல் நம் பிக்கை தளர்ந்த போது நான் துடித்தே போய் விட்டேன். அதை என்னிடம் நேர்முக மாகச் சொல்லும் துணிவின்றி வேலையை விட்டு விடும்படி வற்புறுத்தி வந்தார். அவரது மறைமுகமான இந்த அவநம்பிக்கை என்னை வாள் கொண்டு அறுத்துவிட்டது. வேலையை ராஜிநாமா செய்து விட்டுத்தான் நிம்மதியாக மூச்சு விட்டேன்.

''அவர் இப்பொழுது மட்டும் என்னை ஏன் வேலைக்குப் போகச் சொல்கிறார் தெரி யுமா? மூன்று குழந்தைகளுக்குத் தாயாகி நான் கிழடு தட்டிப் போய் விட்டேன். அதனால், அப்பொழுது என் மேல் ஏற் படாத நம்பிக்கை இப்பொழுது ஏற்பட் டிருக்கிறது. அவருடைய இந்த மனப் பான்மை எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. இதனால்தான் வேலைக்குப் போக நான் மறுக் கிறேன்.....

இதைக் கேட்ட வசந்தா மட்டுமல்ல, மூர்த்தியும் அதிர்ந்து போனான்.

---


## அவர் யார்?



தாமஸ் ஹார்டி பிரபல நாவலாசிரியர். அவர் ஒரு சமயம் வீடு தேடும் படலத்தில் இறங்கினார். துணைக்கு ருட்யார்ட் கிப்ளிங் என்ற மற்றொரு பிரபல நோபல் பரிசுபெற்ற ஆசிரியரை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

ஒரு வீட்டுக்குள் நுழைந்து விசாரித்தார். வீட்டுக்கார அம்மாள் வெளியே வந்தார். உடனே அவருக்கு ''இதோ என் னோடு வந்திருக்கும் இந்த நண்பர்தான் பிரபல கவிஞர் ருட்யார்ட் கிப்ளிங் தெரியுமா?.......'' என்று பிரமாதமாகப் புகழ்ந்து அறிமுகப்படுத்தினார். ஆனால் அந்த அம்மாள் முன்பின் அப்படி யொரு பெயரைக் கேள்விப்பட்டதாகவே தெரியவில்லை! அறி விருந்து ஹார்டியளவு தாம் அப்படியொன்றும் புகழ் எய்திவிட வில்லை என்று நினைத்துக் கொண்டார் கிப்ளிங்! எனினும், அம்மை யார் கிப்ளிங்குடன் சுவாரசியமாகப் பேசத் தொடங்கி விட்டார். இந்தச் சமயத்தில் ஹார்டி வீடு முழுவதையும் நன்கு பார்த்து விட்டு, வந்து கொண்டிருந்த போது அம்மையார் ''அது சரி, உங்களை எனக்கு அறிமுகப்படுத்தினீரே, அவர் யார்?'' என்று கிப்ளிங்கைக் கேட்டுக் கொண்டிருந்தது அவர் காதில் விழுந்தது.

# விவசாயி



மூலம்
தகழி சிவசங்கரப்பிள்ளை
தமிழாக்கம்
கே.நாராயணன்

அந்த இரண்டு காணி நிலமும் வெகு தூரத்தில் உள்ள வைக்கத்தில் இருக்கிற ஒருவருக்குச் சொந்தமானது. கேசவன் நாயர்தான் இருபது ஆண்டுகளாக அதைச் சாகுபடி செய்து வருகிறார். அதற்கு முன்னால் கேசவன் நாயரின் மாமா அதைச் சாகுபடி செய்து வந்தார்.

முன்பெல்லாம் குத்தகை கொஞ்சம்தான். இப்போது சற்று அதிகமாயுள்ளது. ஒவ்வொரு பங்குனி மாதமும் குத்தகை நெல்லைக் காய வைத்து மூட்டைகளில் கட்டி வைக்கத்தில் கொண்டு போய்க் கொடுத்து வரவேண்டும். கடந்த பல ஆண்டுகளாக இப்படியே நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இதற்கிடையில் அந்த இரு காணி நிலத்தைச் சுற்றியுள்ள எல்லா நிலங்களும் பல கைகளுக்கு மாறி விட்டன. ஆனால் அந்த இரு காணியின் மிராசுதாரரும் குத்தகைக்காரரும் அதே பழைய ஆட்கள்தான். மிராசுதாருக்கு இதைத் தவிர வேறு குத்தகை நெல் கிடைப்பதற்கில்லை. பரம்பரை விவசாயியான அந்தக் குத்தகைக்காரருக்கும் இதை விட்டால் வேறு நிலம் கிடையாது.

பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் மூட்டை நெல் ஐந்தோ ஏழோ ரூபாய் விலை விற்றபோது சங்கனாச்சேரியிலிருந்தும் திருவல்லாயிலிருந்தும், கையில் கொஞ்சம் காசு இருக்கிற பேர்வழிகள் அங்கே விவசாயம் செய்ய வந்தார்கள். அவர்கள் நிறைய முன் பணம் கொடுத்துக் கிடைக்கும் மட்டும் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டார்கள். டிராக்டர்களைப் பயன்படுத்தியும், புது மாதிரியான உரங்களை உபயோகித்தும் நல்ல விளைச்சல் உண்டாக்கிறார்கள். இன்னமும் அவர்கள் அவ்வாறே விவசாயம் செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு விவசாயியின் வயலுக்கு நடுவில்தான் கேசவன் நாயருடைய நிலம் இருக்கிறது.

ஔதக்குட்டி அத்தகைய ஒரு பெரும் விவசாயி. ஒரு நாள் அவன் கேசவன் நாயரை வயல் வரப்பில் சந்தித்தான். சுற்றிலுமுள்ள நிலங்களின் பயிரை விட அந்த இரு காணி நிலத்தின் பயிர் மோசமாயிருந்தது.

"என்னுங்க, பயிரு நோஞ்சு போயிருக்கே எருப் போடலீங்களா?" என்று ஔதக்குட்டி விசாரித்தான். அவனது கேள்வி கேசவன் நாயர் உள்ளத்தைக் குத்திற்று. அவர் செய்யும் சாகுபடி மோசமாக உள்ளதாகப் பக்கத்து நிலத்து விவசாயி சொல்கிறான்!

"நீங்கள் எல்லாம் பெரிய விவசாயிகள். நீங்கள் வந்த பிறகு வேளா வேளைக்கு எங்களால் நீர் பாய்ச்சவும், இறைக்கவும் முடியுமா என்ன? ம்ம், நீங்க எங்கே எங்களை விடுவீங்க? உங்க வசதிகளைப் பார்த்துத்தானே நாங்கள் சாகுபடி செய்ய வேண்டி இருக்குது" என்றார் கேசவன் நாயர்.

"அதென்ன அண்ணே, அப்படிச் சொல்லறீங்க? உங்க வசதியையும் பார்க்கணும்னு நான் வேலைக்காரங்ககிட்டே சொல்லியிருந்தேனே!" என்று தந்திரக்காரனான ஔதக்குட்டி கேட்டான்.

"நல்லாச் சொல்லி ஏற்பாடு செஞ்சீங்க. விதைப்பாடு காய்ந்த பிறகுதான் கொஞ்சம் தண்ணீர் பாய்ச்ச முடிந்தது. உங்க வேலைக்காரன் பின்னால் நடையாக நடந்து நான் கெஞ்சினேன். முடியாது, தண்ணீர் விடக் கூடாது என்று நீங்கள் சொன்னதாக அவன் சொன்னான். உம், ஞாபகமிருக்கட்டும், என் நிலம் புஞ்சை நிலம் ஐயா, துரோகம் செய்யாது." கேசவன் நாயர் குறைப்பட்டுக் கொண்டார்.

ஔதக்குட்டி இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லித்தான் ஆக வேண்டி



யிருந்தது. "பக்கத்து நிலத்திலே பயிரு செய்யும்போது நீங்களும் கூடவே செஞ்சிருந்தால் இந்தத் தொந்தரவு இருந்திருக்குமா?"

கேசவன் நாயருக்குச் சிறிது கோபம் வரத்தான் செய்தது. "அதொண்ணும் எனக்குச் சொல்லித் தர வேண்டாம். இன்று நேற்று அல்ல நான் விவசாயம் செய்ய ஆரம்பிச்சது. எங்கிருந்தோ கொஞ்சம் பணத்தைக் கொண்டுவந்து சிறிது அதிகமாக எருவும் தழையும் போட்டு நிறைய விளைச்சல் உண்டாக்கினதாலே மட்டும் எவனும் விவசாயி ஆகிவிட மாட்டான்." சொல்லச் சொல்லக் கேசவன் நாயருக்குக் கோபம் அதிகமாகிக் கொண்டே வந்தது.

தன்னைப் பற்றித்தான் கேசவன் நாயர் சொல்கிறார் என்பதை ஔதக்குட்டி புரிந்து கொண்டான். "ஆனாலும் அண்ணனுக்கு இவ்வளவு கர்வம் கூடாது."

"எனக்கொன்றும் கர்வம் இல்லை" என்று சொல்லும்போது கேசவன் நாயரது கோபம் சற்றுத் தணிந்திருந்தது.

வெகு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் அந்த வரப்பில் கேசவன் நாயரும் ஔதக்குட்டியின் வேலைக்காரனுக்குமிடையே சண்டை மூண்டது. சுற்றிலும் உள்ள வயல்களில் நீர் நிரம்பி வழிய அந்த இரு காணி நிலம் மட்டும் வறண்டு, அதன் பயிர்கள் காய்ந்து கருகி நின்றன. அந்தக் காட்சியைப் பார்த்து, மனம் உடைந்த கேசவன் நாயர் வாய்க்காலை வெட்ட, ஔதக்குட்டியின் வேலைக்காரன் அதைக் கட்ட, ஒருவருக்கொருவர் பிடித்துத் தள்ளக் கைகலப்பு வரை வந்து விட்டது.

பார்க்கப் போனால் அந்த நிகழ்ச்சி ஒரு கொலை நிகழ்வதற்குப் போதுமானதாயிருந்தது. இருந்தும் நல்லவேளையாக அப்படி ஒன்றும் நடைபெறவில்லை. நாலைந்து நாட்களுக்குப் பிறகு அந்த இரு காணி நிலத்தின் பயிர்கள் நீரில் மூழ்கிக் கிடந்தன. பயிர்களின் நுனிகூடத் தெரியவில்லை. அது அந்த வேலைக்காரனின் வேலைதான். அவன், ஔதக்குட்டியின் வயலின் நீர் காய வேண்

டிய நேரம் வந்தபோது நீரைக் கேசவன் நாயருடைய நிலத்துக்குப் பாய்ச்சினான். அந்த நீரை எப்படி வற்ற வைப்பது? எங்கே பாய்ச்சுவது? குடித்து வற்ற வைக்க முடியுமா என்ன? கேசவன் நாயரின் பயிர் அழுகத் தொடங்கிவிட்டது.

எல்லாரும் அதை அநியாயம், அக்கிரமம் என்றுகூடச் சொன்னார்கள். சொல்லி என்ன பயன்? இரண்டு மூன்று நாட்கள் கேசவன் நாயர் ஔதக்குட்டியைத் தேடி அலைந்தார். ஆனால் ஆள் கிடைக்கவில்லை. என்ன செய்வது? கேசவன் நாயருக்கு ஒன்றும் புரியவில்லை. இன்னும் இரண்டு நாட்கள் இப்படியே நீர் கட்டி இருந்தால் அவர் பயிர்கள் போனது போனதுதான்.

கேசவன் நாயருக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது.

''இரவிலே யாருக்கும் தெரியாமல் வாய்க்காலைத் திருப்பி விட்டால் என்ன?'' என்று ஒரு நாள் கேசவன் நாயரின் நண்பனை குட்டிச்சோவன் இரக்கப்பட்டுக் கேட்டான்.

கேசவன் நாயருக்கு அந்த யோசனை சற்றும் பிடிக்கவில்லை. ''அப்படிச் செய்யக் கூடாது, தம்பி. புஞ்சை நிலத்திலே இரவு நேரத்தில் வாய்க்கால் வெட்டக் கூடாது. உண்மை விவசாயி அப்படிச் செய்யவே மாட்டான். எனக்கு என்ன தீங்கு நேரிட்டாலும் செய்யத் தகாத காரியத்தை ஒருபோதும் செய்ய மாட்டேன்'' என்று கேசவன் நாயர் உறுதியாகச் சொல்லிவிட்டார்.

அந்தக் கிராமத்திலுள்ள இருநூறு காணி நிலத்தில் கேசவன் நாயரின் இரு காணி நிலத்தைத் தவிர மீதி எல்லாவற்றையும் ஔதக்குட்டி தன் வசப்படுத்திக் கொண்டுவிட்டான். எனவே, விவசாயி என்கிற முறையில் கேசவன் நாயருக்கு உதவி செய்வார் யாருமே அந்தக் கிராமத்தில் இல்லை. எல்லாரும் அவரைப் பார்த்துப் பரிதாபப்படுகிறார்கள். தம் நண்பர்களின் அனுபவங்களைக் கேட்டுக் கேசவன் நாயர் சொன்னார்: ''நானும் என் நிலத்தை ஔதக்குட்டிக்கு விட்டிருப்பேன். ஆனால் அப்புறம் நான் எப்படிப் பிழைப்பது? என்ன தொழில் செய்வது? குட்டி மாப்பிள்ளைக்கு மாதா மாதம் தோட்டத்திலிருந்து ஐந்நூறு தேங்காயாவது கிடைக்கிறது. குட்டிச்சோவன் மகனுங்க சம்பாதிக்கறாங்க. எனக்கு இதை விட்டால் வேறே பிழைப்புக்கு வழியில்லையே? இதிலே வேலை செஞ்சாத்தானே வயத்துக்குக் கஞ்சி!''

கேசவன் நாயர் சொன்னது என்னமோ சரிதான். அவருக்கு அந்த நிலத்தை விட்டால் பிழைக்க வழியில்லைதான். ''எங்க மூதாதையர் காலத்திலிருந்து இந்த நிலத்திலே வேலை செய்துதான் பிழைப்பு நடத்தறோம்.'' கேசவன் நாயர் இன்னும் என்னவெல்லாமோ சொல்லிக் கொண்டே போனார்.

அன்று இரவு எப்படியோ அந்த இரு காணி நிலத்தின் நீரும் வடிந்தது. எவன் செய்த வேலையோ? ஒன்று மட்டும் நிச்சயம், கேசவன் நாயர் இந்த அடாத காரியத்தைச் செய்யவில்லை. அந்த நீர் சுற்றிலுமுள்ள வயல்களுக்குப் போனதாலே அந்த நிலங்களின் பயிர்களுக்கு எந்த விதமான தீங்கும் ஏற்படவில்லை.

மறுநாள் கேசவன் நாயர் வயலைப் போய்ப் பார்த்தபோது அப்படியே பிரமித்து நின்றார். நீர் வடிந்து, பயிர்கள் பிழைத்தது கண்டு ஏற்பட்ட ஆறுதல் அல்ல அது! யார் இந்த அடாத காரியத்தைச் செய்தது? இந்தக் குற்றத்தை நம்மீதல்லவா சுமத்துவார்கள் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது.

பக்கத்துப் பயிர்களுக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டதோ என்று அந்தச் சாது மனிதர் பார்க்கக் கூட இல்லை. ஒரு பக்கம் கெட்ட பெயர் ஏற்படுமே என்கிற பயமும், மறு பக்கம் தன் பயிர்கள் பிழைத்ததே என்கிற ஆறுதலுமாக வீட்டுக்குத் திரும்பினார். நாள் முழுவதும் இதைப் பற்றி யாராவது ஏதாவது கேட்பார்களோ என்கிற பயம்! வீட்டில் உள்ளவர்களிடம் யாராவது வந்து தேடினால் இல்லை என்று சொல்லச் சொல்லி விட்டு ஓர் அறைக்குள் தாளிட்டுப் பதுங்கிக் கொண்டார். குட்டி மாப்பிள்ளையும், குட்டிச்சோவனும் வீட்டுக்கு வந்திருந்தார்கள். ஆனால் கேசவன் நாயருக்கு அவர்களைப் பார்க்கக் கூச்சமாக இருந்தது.

இரண்டு நாட்கள் அப்படிச் சென்றன. மூன்றாவது நாள், எல்லாரும் எழுந்திருப்பதற்கு முன்னதாகவே கேசவன் நாயர் வயலைப் போய்ப் பார்த்தார். பலவீனமடைந்திருந்த பயிர்கள் வெயில் பட்டு எழுந்து நின்றிருந்தன. இனிமேல் பயிர்கள் பாழாகாது. இப்படியே ஒரு நாள் காய்ந்த பிறகு கொஞ்சம் தண்ணீர் பாய்ச்சிச் சிறிது உரமும் போட்டால் விளைச்சல் பிரமாதமாக இருக்கும். இப்படி எண்ணியவர் உரத்துக்கு எப்படிப் பணம் சேர்க்கலாம் என்று யோசிக்கலானார். விதைக்காகவும் கூலிக்காகவும் எட்டு மூட்டை நெல்லும் நூற்றி இருபது ரூபாய் பணமும் கொடுக்க வேண்டியிருந்தது. நூறு ரூபாய் கிடைத்தால் போதும். உரம் போடலாம். உரம் போடாவிட்டால் பயிர்கள் மோசமாகும். ஆனால் நூறு ரூபாய் எங்கிருந்து கிடைக்கும்? யார் தருவார்கள்?

கேசவன் நாயர் தம்மை மறந்து யோசனையில் ஆழ்ந்தார். உரத்தைப் பற்றித் தான் யோசனை எல்லாம்.

''என்ன அண்ணே, பயிருக்கு ஏற்ற வெயில் அடிக்கிறாற்போல் இருக்கே!''

குரல் கேட்டுக் கேசவன் நாயர் திரும்பிப் பார்த்தார். ஔதக்குட்டி நின்றுகொண்டிருந்தான். சட்டென்று அந்தத் தகாத காரியம் - இரவில் புஞ்சை நிலத்தில் வாய்க்கால் வெட்டின அந்தத் தகாத காரியம் அவர் நினைவுக்கு வந்தது. அந்தக் குற்றம் அவரைப் பின்தொடர்ந்து வருகிறதா, என்ன? தவற்றைக் கண்டுபிடித்தவன் போல் ஔதக்குட்டி நிற்கிறான். பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். தம்மைக் குற்றமற்றவன் என்று நிரூபிக்க வேண்டும். அசடு வழியச் சிரித்தபடி கேசவன் நாயர் சொன்னார்: ''சாமி

வீடுகளுக்கும் மற்றும்
உணவு விடுதிகளுக்கும்
ஓர் அரிய சாதனம்

# லீக்கோ நவீன வீட்டு எரி பொருள்

சிக்கனமானது • மற்ற எரிபொருள்களைவிட அதிக அனலை ஈந்து நீண்ட நேர வெப்பத்தை கொடுக்கிறது • புகையாதது • எந்தரக கரி அடுப்பினிலும் உபயோகப்படுத்தவல்லது.



சிறிய 'லீக்கோ' துண்டுகளை எடுத்துக் கொள்ளவும்.


பிறகு மெல்லிய அடுக்காக அடுப்பினில் பரப்பி வைக்கவும்.

வழக்கமான முறையில் எரிய வைக்கவும்.

சில நிமிடங்கள் கழித்து நன்றாக சுடர் விட்டவுடன் மேலும் வேண்டிய அளவு 'லீக்கோ' சேர்த்துக் கொள்ளவும்.

நெய்வேலி லிக்னைட்
கார்ப்பொரேஷன் லிமிடெட்,
நெய்வேலி-1.

LECO



FDS NLC 640 TM

பேனே சத்தியமா, இந்தப் புஞ்சை வயல்மீது சத்தியமா சொல்றேன்... ஔதக்குட்டி, நான் வாய்க்காலே வெட்டலே! நான் ஒரு விவசாயி. விவசாயி செய்யக் கூடாததைச் சத்தியமா நான் செய்ய மாட்டேன்.''

கேசவன் நாயர் சங்கடப்படுவதைக் கண்ணுற்ற ஔதக்குட்டி, ''அண்ணே, நீங்க ஏன் சத்தியம் செய்யறீங்க? வாய்க்காலே வெட்டினது நான்தான். மூன்று நாளைக்கு முன்னால் இந்தப் பக்கம் வந்தபோது வயல் மூழ்கிக் கிடப்பதைப் பார்த்தேன். அதனாலே வாய்க்காலே வெட்டி நீரை வடிச்சேன்'' என்றான்.

கேசவன் நாயருக்கு இதைக் கேட்க ஆறுதலாக இருந்தது. அவருடைய கண்கள் பிரகாசமடைந்தன. ''அப்படியா, தம்பி? நீதான் செஞ்சியா? நெசமாச் சொல்லு? நல்லா இருப்பே, நீ. சாகிற வரைக்கும் கெட்ட பேருக்கு ஆளாக வேண்டியிருக்குமோ என்று பயந்தே போனேன்.''

கேசவன் நாயருக்குப் பயிர்கள் பாழாகிப் போகிற துக்கத்தை விடக் கெட்ட பெயர் ஏற்படுமே என்கிற பயம்தான் மேலோங்கி நின்றிருந்தது.

வயலை ஒரு பார்வை பார்த்துவிட்டு ஔதக்குட்டி சொன்னான்: ''கொஞ்சம் எருப் போட்டால் பயிர்கள் நல்லா வருமே!''

''அதைத்தான் தம்பி நானும் யோசிச்சுக் கிட்டு நிற்கிறேன்.''

''அப்படியானால் அதைச் செய்ய வேண்டியதுதானே?''

''அதற்குக் காசு வேண்டுமே தம்பி!''

''விளைச்சல் நல்லா இருக்கணும்னு காசு செலவழிச்சுத்தான் ஆகணும்.''

''காலம் மாறிப் போச்சு, என்ன செய்ய?''

''அண்ணே! நான் ஒரு விஷயம் சொல்லட்டுமா?'' என்று கேசவன் நாயரிடத்தில் மிகப் பற்றுள்ளவன் போல் ஔதக்குட்டி சொன்னான்.

கேசவன் நாயர் தலைதூக்கி ஔதக்குட்டியைப் பார்த்தார்.

''அண்ணே, நீங்க ஏன் இப்படிப் பாடுபடுறீங்க? வைக்கத்து மிராசுதாருக்குக் கொடுக்க வேண்டிய குத்தகையும், கூட எட்டு மூட்டை நெல்லும் நான் தரேன். நிலத்தை என்கிட்ட விட்டுடுங்க. இந்த வயசான காலத்திலே நீங்க ஏன் கஷ்டப் படுறீங்க?''

கேசவன் நாயர் திடீரென்று ஆள் மாறினார். அவருக்குக் கோபம் வந்தது. இருப்பினும் கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னார்: ''வேண்டாம் தம்பி. அந்த எண்ணத்தை மனசிலேயே வச்சுக்க. மூதாதைங்க காலத்திலிருந்து நாங்க இந்த இரு காணி நிலத்திலே விவசாயம் செஞ்சு வரோம். இனிமேல் இந்த நிலத்திலே இன்னொருத்தன் விவசாயம் செய்ய வேண்டாம்.''

''அதுக்கென்ன, வைக்கத்து மிராசுதாருக்குக் குத்தகைக்காரர் அண்ணன், அண்ணனுக்குக் குத்தகைக்காரன் நான்.''

''அது வேண்டாம் தம்பி. நான் விவசாயியாகப் பிறந்தேன். என் தொழில் விவசாயம் தான். அது தவிர, நாலஞ்சு மாடுங்களும் இருக்கு. அதுங்களுக்கும் கொஞ்சம் வைக்கோலோ புல்லோ கொடுக்கணும். என்ன வானாலும் உன் எண்ணம் நடக்காது.''

மேலும் அதிகமாக ஒன்றும் பேசாமல் கேசவன் நாயர் நடக்கலானார். பேச்சுக்

## கடைசிச் சந்திப்பு!



அமெரிக்க அறிஞர்களுள் ஒருவர் இங்கர்சால். ஆனால் ஏனோ அவர் பெரும் நாத்திகராய் விளங்கினார். மத குருக்களையும், மத நூல்களையும் எதிர்த்தார். அவர் தம் கொள்கையை விளக்கிப் பல புத்தகங்களை எழுதினார்.

மத குருக்களை எதிர்த்தாலும் சொந்த முறையில் அவர்கள் மீது அவருக்கு வெறுப்பு கிடையாது. ஒரு நாள் அவர் பிலிப்ஸ் புருக்ஸ் என்னும் பாதிரியார் மரணப் படுக்கையில் கிடக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரைப் பார்க்கச் சென்றிருந்தார்.

அவரைப் போலப் பலரும் பாதிரியாரைப் பார்க்க வந்திருந்தார்கள். ஆனால் பாதிரியார் பலரையும் பார்க்க விரும்ப வில்லை. இங்கர்சாலை மட்டும் அவர் அனுமதித்தார். எல்லாருக்கும் ஒரே வியப்பு, இங்கர்சால் உள்படத்தான்.

இங்கர்சால் உள்ளே நுழைந்தார். ''தாங்கள், தங்கள் நண்பர்களை யெல்லாம் போகச் சொல்லிவிட்டு என்னை மட்டும் அழைத்தது ஏன்?'' என்று கேட்டார்.

பாதிரியார், ''ஒன்றுமில்லை. என்னுடைய நண்பர்களை நான் பரலோகத்தில் பார்த்துக் கொள்ள இயலும் என்னும் நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால் தங்களைப் பார்ப்பது இதுவே இறுதி முறையாக இருக்குமல்லவா, அதனால்தான்'' என்றார்!

ஆதாரம்: ''இங்கர்சால் வாழ்வில்'' தகவல்: திருவையூர் தேவராசன்

கொடுத்தால் ஔதக்குட்டியோடு மனத் தாங்கல் ஏற்படலாம் என்று உள்ளூற பயம். இல்லாவிட்டால் அவன் சொன்னதுக்கு ஒப்புக் கொள்ள வேண்டி வந்தால் என்ன செய்வது?

இழவன் நடந்து போவதைப் பார்த்து ஔதக்குட்டிக்குச் சிரிப்பு வந்தது.

அறுவடையின்போது கேசவன் நாயருக்கு ஆள் கூலிக்கு கிடைக்கவில்லை. சுற்றிலுமுள்ள வயல்களில் நல்ல விளைச்சல். அவர்கள் கொடுக்கும் கூலியும் அதிகம். சொல்லப் போனால் இரண்டு மரக்கால் நெல் கூலி கிடைக்கும். அந்த வயல்களில் செய்வார்களா, அல்லது நாள் முழுவதும் வேலை செய்தாலும் இங்கே அரை மரக்கால் நெல் கூலியாகக் கிடைப்பது கூடச் சந்தேகம். அதனால் அறுவடைக்கு ஆட்களைத் தேடிக் கேசவன் நாயர் மூன்று நாட்கள் அலைந்தார். பயிர் பருவம் தவறிக் கொண்டிருந்தது. கடைசியாகக் குட்டி மாப்பிள்ளையின் வீட்டார்கள், குட்டிச்சோவன் வீட்டார்கள், கேசவன் நாயர் வீட்டார்கள் மூவரும் வேலைக்காரன் புலையனையும், புலைச்சியையும் சேர்த்துக் கொண்டு அறுவடை செய்தார்கள்.

விளைச்சலோ மகா மோசம். குத்தகை நெல்லாவது முழுசாகக் கிடைக்குமா என்பதே சந்தேகம். குட்டி மாப்பிள்ளையும், குட்டிச்சோவனும், கேசவன் நாயரும் சேர்ந்து யோசிக்கலானார்கள். "இந்தத் தடவை குத்தகையைக் கொஞ்சம் குறைத்துக் கொடுத்தால் என்ன?" என்று குட்டி மாப்பிள்ளை யோசனை சொன்னான். ஆனால் கேசவன் நாயர் அதை ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. "இந்த நிலத்தின் மிராசுதாருக்கு இந்தக் குத்தகைதான். இதை விட்டால் அவருக்கு வேறு நெல் கிடையாது. நாங்க எத்தனையோ ஆண்டுகளாக இந்த நிலத்தில் பயிரிட்டு வருகிறோம். லாபமும் கெடச்சிருக்கு. நஷ்டமும் வந்திருக்கு. அதனால் குத்தகை முழுதும் கொடுத்துத்தான் ஆகவேண்டும்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

"விளைந்திருக்கும் நெல் குத்தகையை அளக்கவே பற்றாவிட்டால் என்ன செய்வது?" என்று குட்டிச்சோவன் கேட்டான்.

கேசவன் நாயரிடத்தில் அதற்கு உடனேயே பதில் இருந்தது. "பற்றாக்குறைக்கு நெல் விலைக்கு வாங்கிக் கொடுப்பேன்" என்றார்.

கேசவன் நாயர் குத்தகை நெல்லை மிராசுதாரின் வீட்டுக்குக் கொண்டு போனார். மிராசுதாரைப் பார்த்தபோதே அவர் ஒரு மாதிரியாக இருப்பதாகத் தோன்றியது. வழக்கத்துக்கு மாறாக "குத்தகை நெல் முழுதும் இருக்கா?" என்று கேட்டார். அவர் கூடவே, "இந்த வருஷம் குத்தகை நெல் முழுதும் கிடைக்காது என்று கேள்விப் பட்டேன்" என்று வேறு சொல்லி வைத்தார்.

கேசவன் நாயர் சுடச் சுடப் பதில் கொடுக்கத்தான் செய்தார். "ஐயா நிலத்திலே நூறு வருஷமா விவசாயம் செய்யறோம். இது வரையிலும் குத்தகை நெல் பாக்கி இல்லை என்றுதான் நினைக்கிறேன்."

மிராசுதார் ஒன்றும் பேசவில்லை.

ஒரு மணி நெல்கூடப் பாக்கி இல்லாமல் கேசவன் நாயர் குத்தகை நெல் அளந்து கொடுத்தார். இருந்தும் மிராசுதாரின் முகத்தில் திருப்தியைக் காணோம்!

கேசவன் நாயருக்கும் படகோட்டிகளுக்கும் வழக்கம் போல் சாப்பாடு போடப்பட்டது. சாப்பாட்டை முடித்துக் கொண்டு கேசவன் நாயர் விடைபெறப் போனபோது மிராசுதார் "ஒரு விஷயம் சொல்லலாம் என்றிருக்கிறேன்" என்றார்.

"என்ன விஷயமோ?" என்று கேசவன் நாயர் கேட்டார்.

மிராசுதார் கேசவன் நாயரின் முகத்தை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. அவர் இங்கு மங்குமாக நடை போட்டார். சிறிது நேரம் சென்றது. கேசவன் நாயர் மறுபடியும் "என்ன விஷயமோ?" என்று கேட்டார்.

மிராசுதாரிடத்திலிருந்து பதில் திடீரென்று வந்தது. "அதிகமாகக் குத்தகை தர ஒருவர் தயாராக இருக்கிறார். ஆகையினாலே நிலத்தை விட்டுவிடு."

பேரிடி விழுந்தது போல் கேசவன் நாயர் அயர்ந்து நின்றார். அவர் வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட வெளிவரவில்லை. சிறிது நேரம் சென்ற பிறகு மிராசுதார் தொடர்ந்து சொன்னார்: "நல்ல விளைச்சல் நிலம். குறைந்த குத்தகை. இனிமேல் அது நடக்காது. நிலத்தை விட்டுவிடு."

"நிலம் ஐயாவுடையதுதான். இருந்தாலும் வேறு சில சங்கதிகளையும் நெனைக்கப் பார்க்கணும்."

"நெனைக்கப் பார்க்க ஒன்றும் இல்லை."

கேசவன் நாயருக்கு ஒரு யோசனை தோன்றியது. "எவ்வளவு குத்தகை அதிகமாகத் தருவதாகச் சொல்லியிருக்காங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"இன்னும் ஐந்து மூட்டை நெல். நீ குத்தகை பாக்கி வெச்சா எப்படி வசூல் செய்ய முடியும்?"

கேசவன் நாயர் சூடாகவே பதில் சொன்னார். "இதுவரையில் குத்தகை ஒன்றும் பாக்கி இல்லீங்களே!"

சிறிது நேரம் யாரும் ஒன்றும் பேசவில்லை.

பிறகு கேசவன் நாயர் தொடர்ந்து சொன்னார். "ஐயா, அந்தக் குத்தகை நானும் தாரேன்."

"இந்தக் காலத்திலே கொடுக்க முடியாதவங்களிடத்திலே நிலத்தை விட்டு வைக்கிறது அவ்வளவு சரியாகப் படவில்லையே."

கேசவன் நாயருக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. "நான் கொடுக்க முடியாதவன்னு ஐயாவுக்கு எப்படித் தெரிஞ்சுதோ? இதுவரையிலும் பாக்கி ஏதாவது இருந்தால் சொல்லுங்க."

பதில் இல்லை.

கேசவன் நாயர் தொடர்ந்து சொன்னார். "நான் ஒரு விஷயம் சொல்லட்டுங்கள உங்களிட்டே யார் வந்திருந்தாங்க என்று எனக்குத் தெரியும். ஔதக்குட்டிதானு

களே? அவன் ஒரு விவசாயியா? அவனுக்கு மண்மேல் ஏதுங்க பிரியம்? எங்கிருந்தோ கொஞ்சம் ரசாயன உரத்தைக் கொண்டு வந்து நிலத்தின் சத்தை உறிஞ்சி விளைச்சல் அதிகமாகச் செய்து காட்டுகிறான். நாலஞ்சு வருஷங்கள் கழிச்சுப் பார்த்தீங்கன்னு ஐயா நிலத்து மண்ணு உதவாக்கரையாகித் தவிடு போயிருக்கும். புல் பூண்டுகூட முளைக்காது."

மிராகதார் அங்குமிங்குமாக உலாவிக் கொண்டிருந்தார். ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. கேசவன் நாயர் தொடர்ந்து சொல்லலானார். அவருடைய தொண்டை அடைத்துக் கொண்டது. "நான் பிறந்த வுடன் இந்த நிலத்தைத்தானுங்க பார்த்தது. என் மூதாதைங்க வியர்வைதானுங்க இதற்கு உரம். இந்த மண்ணைத் தவிர வேறு எதிலேயும் எனக்குப்பற்றுக் கிடையாதுங்க." கேசவன் நாயர் விக்கி விக்கி அழலானார்.... "ஐயா... என்னை இந்த நிலத்தை விட்டு வெளியேற்றுதீங்க."

மிராகதார் உள்ளமும் சற்று உருகினாற் போல் இருந்தது. "அதெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்கு நல்ல குத்தகை கிடைக்கணும்...."

கேசவன் நாயர் தேம்பித் தேம்பி அழுது கொண்டே சொன்னார்: "அந்தக் குத்தகை நான் தரேனுங்க."

இப்படியாக, அதிகக் குத்தகை தர ஒப்புக் கொண்டு கேசவன் நாயர் வீட்டுக்கு வந்தார்.

வைக்கத்திலிருந்து திரும்பின மறு நாளே கேசவன் நாயர் உழுவதற்கு ஆளைக் கூப்பிட்டு ஒரு தடவை உழுதார். கூலி எப்படிக் கொடுப்பது என்று யோசிக்கக்கூட இல்லை. அன்றிலிருந்து செய்த வேலைக்குக் கூலிக்காக உழுதவர்கள் அவர் பின்நடக்கிறார்கள்.

பக்கத்து நிலங்களிலே ஒவ்வொரு நாளும் உழவு நடைபெறுகிறது. இரு காணி நிலம் மட்டும் புல் பூண்டு முளைத்துப் பாழாகிக் கிடக்கிறது.

அப்பொழுதும் ஔதக்குட்டி வந்தான். மிராகதாருக்குக் கேசவன்நாயர் தருவதாக ஒத்துக் கொண்ட நெல்லைவிட எட்டு மூட்டை நெல் அதிகமாகத் தான் தருவ தாகச் சொன்னான். கேசவன்நாயருக்கு அடக்க முடியாத கோபம் வந்தது. "போடா, போ! நீ அதைக் கனவுகூடக் காணாதே. என்னவானாலும் சரி, நான் இந்த நிலத்தை உனக்கு விட்டுத் தரமாட்டேன்."

விதைப்புக்கான நேரம் வந்தது. மற்ற நிலங்களில் வரப்பை வெட்டுகிறார்கள்: நீரை வற்ற விடுகிறார்கள். ஆனால் இரு காணி நிலம் மட்டும் உழாமல், களை பிடுங்காமல், அப்படியே இருக்கிறது. பாவம், கேசவன் நாயரிடத்தில் விதையுமில்லை.

இப்பொழுது கேசவன்நாயர் தம் மனைவியிடத்தில் போர் தொடுக்கலானார். ஒரு மாட்டை விற்க வேண்டுமாம். ஆனால் மனையாள் அதற்குத் தயாராக இல்லை. "அரை வயிற்றுக்காவது கஞ்சி கிடைப்பது அந்த மாடுகளாலேதானே? நான் அதை விற்க ஒருகாலும் சம்மதிக்க மாட்டேன்" என்றாள் தீர்மானமாக.

கேசவன் நாயருக்குக் கோபம் வந்தது. "அப்ப எப்படி விதை விதைக்கிறது?"

"விதை ஒண்ணும் விதைக்க வேண்டாம்."

"நான் ஒரு விவசாயி. விதை விதைச்சுத் தான் தீருவேன்."

"ஆமாம், இவரு பெரிய விவசாயி!"

மனைவியின் சம்மதமில்லாமலேயே கேசவன் நாயர் ஒரு மாட்டை விற்றார். மாட்டை வாங்கினவர் அந்த மாட்டைக் கொண்டு போகும் போது அந்த அம்மாள் தலையில் கையை வைத்து அழுது கொண்டே சபித்தாள். "இந்த விவசாயம் உருப்படவே உருப் படாது."

எட்டு மூட்டை விதைக்கும் பத்து ரூபாய் கூலிக்குமாக அந்த மாட்டினுடைய விலை தீர்ந்து போயிற்று.

கேசவன் நாயர் விதை கட்டி நீரில் போட் டார். அடுத்த நாள் விதை எடுத்தார். மூன்றாவது நாள் விதையை அவிழ்த்துப் பார்த்தார். பாதி விதை முளை கட்டி இருக்க வில்லை. அன்று விதைக்க வேண்டிய நாள். இருப்பினும் அந்த விதைகளையே வாரி விதைக்கக் கூட்டி மாப்பிள்ளை சொன்னான். மண்ணில் இருந்தபடியே முளைக்குமாம். வேறு வழி? கேசவன்நாயர் அப்படியே செய்தார்.

பக்கத்து நிலங்களில் நெல் தழைத்து வளர்கிறது. ஆனால் இரு காணி நிலத்தில் புதரும் கோரையும்தான் நன்றாக வளர்ந் திருந்தன. ஒரு நெற்பயிர்கூட இல்லை!


அந்த ஆண்டு அறுவடை முடிந்ததும் இரு காணி நிலத்தில் அறுவடை என்ற பேச் சுக்கே இடமிருக்கவில்லை. குத்தகை கொண்டு போக வேண்டிய நாள் முடிந்தது. மிராகதார் வந்தார். கேசவன்நாயர் எங்கோ மறைந்து பதுங்கி யிருக்கிறார். மூன்று நாட்கள் வரை யிலும் மிராகதார் கேசவன் நாயரைத் தேடினார். ஆனால் ஆளைக் காணோம்.

அதற்கடுத்த நாள் மிராகதார் வரப்பில் நிற்க, இரு காணி நிலத்தில் ஔதக் குட்டி யின் வேலையாட்கள் உழுதுகொண்டிருந் தார்கள்.

ஃ ஃ ஃ

அந்த வருஷம் அறுவடையும் முடிந்தது. ஒவ்வொரு நாளும் பொழுது விடிவதற்கு முன்னால் ஒரு விவசாயியைப் போன்று கேசவன் நாயர் வீட்டிலிருந்து கிளம்புவார். அவர் போவதைப் பார்த்தால் அவருக்கு எங்கோ நிலம் இருப்பது போல் தோன்றும். நன்றாகப் பொழுது விடிந்த பிறகுதான் வீட்டுக்குத் திரும்புவார். நாற்பது ஆண்டுப் பழக்கமல்லவா அது!

இரு காணி நிலத்தின் நெற்பயிர் கேசவன் நாயருக்குச் சவால் விடுவது போல் செழித்துத் தழைத்து வளர்கிறது. கேசவன் நாயர் நாள் தவறாமல் அங்கு செல்வார். ஒரு தடவை பயிரில் பழுப்பு நிறத்தைப் பார்த்த போது அவருக்குப் பகீரென்றது. அவர் நெஞ்சம் பொறுக்கவில்லை. அவர் ஔதக்குட்டியிடத் தில் விவரம் சொன்னார். அது மட்டுமல்ல, வேண்டியதைத் தாமே முன் நின்று செய்ய வும் சித்தமானார்.


In a man's world
MONARCH
LUXURY TALC
FOR MEN
J.K.Helene Curtis

# வெற்றித் திருநகர்

**அகிலன்**



விசுவநாதனுக்கு வெகுநேரம் அந்த இருக்கமான சூழ்நிலைக்கிடையில் தங்கியிருக்கப் பிடிக்கவில்லை. வெய்யிலிலும் புழுதியிலும் அலைந்து திரும்பியதால் வேர்வை ஊற்றெனப் பெருகிக் கொண்டிருந்தது. தலைமயிர் ஒழுங்கற்றுப் பரந்து கிடந்தது. போர்க்களத்திலிருந்து திரும்பும் முரட்டுப் போர் வீரனைப் போல் அவன் காட்சியளித்தான்.

''சரி, நாழிகையாகிறது. மாளிகைக்குச் சென்று முதலில் நீராடி உடை மாற்றிக் கொள்ள வேண்டும். போய் வருகிறேன்; மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன்'' என்று உதய மார்த்தாண்டனிடம் விடைபெற்றுக் கொண்டு எழுந்தான் விசுவநாதன். சேர நாட்டரசனுக்கோ அவன் விரைவில் அந்த இடத்தை விட்டு அகன்றால் போதுமென்றிருந்தது.

சாளுவ நரசிம்மர் அவனை விடுவதாக இல்லை. ''எதிர்பாராமல் நீ வந்துவிட்டாய்; ஆகவே நீ இங்கிருந்து உணவு கொள்ளாமல் திரும்பக் கூடாது. இங்கேயே நீ நீராடிவிட்டு வரலாம். உணவும் சித்தமாகி விட்டது.''

''மாமா அவர்கள் இன்றைக்கு மட்டும் என்னை மன்னிக்க வேண்டும்'' என்று உறுதி நிறைந்த குரலில் கூறிவிட்டு, அங்கிருந்து கிளம்பினான் விசுவநாதன். சாளுவ நரசிம்மர் அவனை எவ்வளவு தடுத்துப் பார்த்தும் அவன் கேட்கவில்லை. அதற்குள் லட்சுமியும் அங்கு வந்துவிடவே, அவளிடமிருந்தும் தப்ப விரும்புகிறவன் போல் அவன் வாயிலுக்கு விரைந்தான்.

லட்சுமி அவனைப் பின்பற்றிச் சென்றதை உதய மார்த்தாண்டன் கவனிக்கத் தவறவில்லை. சாளுவ நரசிம்மர் அதைக் கவனிக்காதவர்போல் இருந்தார்.

''எங்களுக்குள் உறவொன்றுமில்லை. நெடுநாட்கள் !பழக்கத்தால் நாகமர் குடும்பமும் எங்கள் குடும்பமும் உறவு முறை கொண்டாடி வருகிறது'' என்றார் சாளுவ நரசிம்மர்.

''லட்சுமியின் திருமணத்துக்குப் போட்டி இருந்து வருவதாகக் கூறினீர்களே, அதில் விசுவநாதனும் ஒருவனா?'' என்று மெல்லக் கேட்டான் உதய மார்த்தாண்டன்.

''கண்டு பிடித்துவிட்டீர்களே! உங்கள் அநுமானம் சரியாகத்தான் இருக்கிறது!'' என்றார் அமைச்சர் சாளுவ நரசிம்மர். போட்டி உணர்ச்சியையும், பொறாமை உணர்ச்சியையும் தூண்டிவிடும் நோக்கத்துடன்.

வாயிலின் முகப்பில் லட்சுமி கண் கலங்க விசுவநாதனிடம் மன்றாடிப் பார்த்தாள். எப்படியும் அன்று அவன் அங்கு உணவு கொள்ளத்தான் வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள். அழாக் குறையாக அவனைத் தடுத்து நிறுத்தப் பார்த்தாள்.



''உன் அன்பையும், அழகையும் பருகி விட்டதால் எனக்குப் பசியே பறந்து விட்டது!'' என்று கூறிவிட்டுக் குதிரையில் பறந்தான் அவன். சாளுவ நரசிம்மரின் உதாசீனத்தை அவனால் அவ்வளவு எளிதாக மறந்துவிட முடியவில்லை.

### அத்தியாயம் இருபத்தாறு

## மகா நவமித் திருவிழா

விழாக் கோலம் பூண்டுவிட்ட விஜய நகரத்தைக் காண வேண்டுமானால் அதற்கு ஆயிரமாயிரம் கண்கள் வேண்டும். வீடுகள் தோறும், தெருக்கள் தோறும் கோவில்கள் தோறும் அதைப் பகுதி பகுதியாகக் காண வேண்டும். அரண்மனைக்குள் நுழைந்துவிட்டாலோ ஒன்பது தினங்களிலும் அங்கு தங்கிப் பார்த்தாலும் காண்போரின் ஆவல் தீராது.

விஜயநகரத்துப் பெண்டிருக்கு அந்த மாதம் முழுவதும் சுறுசுறுப்பு நிறைந்த மாதம். ஒவ்வொரு வீட்டிலுமே திருமகளை

யும், கலைமகளையும், மலைமகளையும் குடியேற்றிக் கொலு வீற்றிருக்கச் செய்வதற்காக அவர்கள் அரும் பாடு படுவார்கள். சின்னஞ் சிறு வண்ணச் சிற்பங்களால், ஓவியங்களால், மலர்களால், பசுந் தழைகளால் மணி மாலைகளால், திரைச் சீலைகளால் நாளுக்கொரு விதமாக வீட்டை அலங்கரிப்பதற்கே அவர்களுக்குப் பாதிப் பொழுது சரியாகி விடும். மாலைப் பொழுதுகளில் புத்தாடை உடுத்து, ஆடிப் பாடி, மகிழ்வதும், உற்றார் உறவினரோடு அளவளாவுவதும், கோயில்களுக்குக் குதூகலத்தோடு சென்று வருவதும் அவர்களுடைய வழக்கம்.

அழைப்புள்ள பெருங்குடி மக்கள் மட்டிலும் குடும்பத்தோடு அரண்மனைக்குச் சென்று திரும்புவார்கள். அரண்மனைக்குள் அந்த ஒன்பது நாட்களிலும் அவர்கள் காணும் காட்சிகளைப் பேசி மகிழ ஒன்பது மாதங்கள் போதா அவர்களுக்கு.

விழாவின் முதல்நாள் காலைப் பொழுது....

அரண்மனையின் வெளி மதிலை அடுத்திருந்த வெற்றி விழா மண்டபம் மிகப் பெரியதொரு தேர் போல் அழகு செய்யப் பெற்றிருந்தது. பீடம் போல் உயரமாக அமைக்கப்பட்டிருந்த அதன் உச்சியில் குடை கவிழ்ந்தாற்போல் ஒரு கூடாரம் அமைத்திருந்தார்கள். நான்குபுறங்களிலும் திறந்த வெளிக் கூடாரமாக இருந்த அதன் விளிம்புகளில் மலர் மாலைகளும் பல வண்ணத் தோரணங்களும் தொங்க விடப்பட்டிருந்தன. எத்தனை எத்தனையோ வண்ணங்களில் கண்ணைப் பறிக்கும் நிறங்களிலான படுக் கூடாரம் அது. அதில் தங்கச் சரிகையால் செய்யப் பெற்றிருந்த பூ வேலைப்பாடுகளிடையே முத்துக்களும் ரத்தினங்களும் ஒளி வீசின.

வெற்றி மண்டபத்தின் உச்சியில் ஒரு பொற்பீடத்தில் தேவி புவனேசுவரியின் பொற்சிலை மலர்களாலும் மணிகளாலும் அலங்கரிக்கப் பெற்று விளங்கியது. அதை அடுத்தாற்போல் கீழ்ப் படியில் சக்கரவர்த்தியின் சிம்மாசனம் போடப்பட்டிருந்தது. மண்டபத்தின் இருபுறத்துத் தாழ்வாரங்களிலும், அங்கங்கே எழுப்பப் பெற்றிருந்த மேடைகளிலும், அழைக்கப்பெற்ற பெருமக்கள் ஆண்களும் பெண்களுமாகத் திரளாக இருந்தார்கள். மண்டபத்துக்கெதிரில் விசாலமாக நீண்டு கிடந்த திறந்தவெளியில் பட்டத்துக் குதிரைகளும் யானைகளும் அலங்கரிக்கப் பெற்று வரிசையாக நின்று கொண்டிருந்தன.

மண்டபத்தின் விசாலமான கீழ்ப் படிகளில் சக்கரவர்த்தியை அடுத்து விருந்தினர்களான சிற்றரசர்கள் அவரவர்களுக்குரிய ஆசனங்களில் அமர்ந்திருந்தனர்.

கிருஷ்ண தேவராயர் அரண்மனையின் உட்புறத்திலிருந்து வந்து படிகளில் ஏறி மிடுக்கோடு மேடைக்குச் சென்றார். கூட்டம் முழுவதுமே எழுந்து நின்று விண்ணதிர வாழ்த்தொலி எழுப்பியது. தொலைவில் மதிலின் மேல் பேரிகைகளோடும் எக்காளங்களோடும் வரிசையாகக் காத்திருந்தவர்கள் பல்வகை ஒலிகளையும் எழுப்பிக் குதூகலித்தார்கள். கூடியிருந்தவர்களால் சக்கரவர்த்தியின் இளமைத் தோற்றத்தையும் மிடுக்கையும் நம்பவே முடியவில்லை. நோய்வாய்ப்பட்டு மீண்டும் எழுந்திருக்கவே மாட்டார் என்று நம்பிய அதே மனிதர் தாமா அவர்!

தமது மணி முடியையும் உடைவாளையும் எடுத்து மேடையின் மீது அவரருகே நின்று கொண்டிருந்த விசுவநாதனிடம் கொடுத்து விட்டு, தேவியின் முன்னால் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து தொழுதார் சக்கரவர்த்தி. மலர்களால் அர்ச்சித்து வந்தனை வழிபாடுகளை முடித்தார். பிறகு ஒரு பொற்கலத்தில் மலர்களைக் கொடுத்து, அவற்றை எதிரில் நின்று கொண்டிருந்த குதிரைகள் மீதும் யானைகள் மீதும் தூவச் செய்தார். அவர் தம்முடைய சுயநினைவில் இருந்ததாகவே தோன்றவில்லை. புவனேசுவரியிடம் தம்மை முழுமையாக அர்ப்பணித்துவிட்டு, அவளுடைய அருள் வெள்ளத்தால் தமது அகமும் புறமும் நிரப்பப்பட்டவர்போல் காட்சியளித்தார். ஏதோ ஒரு புனிதமான சக்தி அவரை ஆட்கொண்டு விட்டது.

மேடை மீது நின்றவாறே தமது விழாச் செய்தியை அவர் முழங்கலானார்:

" சகல புவனங்களையும் பெற்றெடுத்து, வளர்த்துக் காத்து, அழித்து, அருள் தரக் கூடியவள் புவனேசுவரி. அவள் நமக்குள்ளேயும் மறைந்திருக்கிறாள். தேடுவோருக்குத் தென்படுவாள். அவளுடைய அருளை வேண்டிப் பெற்று, அவள் விரும்பும் கடமைகளை நாம் செய்தோமானால் அவள் நமக்கு ஆற்றல் தருவாள்; வெற்றி தருவாள்; இன்பம் தருவாள். நான் அவளுடைய இந்த சாம்ராஜ்யத்தின் ஊழியன் என்றே என்னை நம்புகிறேன். அப்படியே நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் கடமைகளை அவளுக்குச் செய்யும் ஊழியமாக நம்பிச் செய்ய வேண்டும். இந்த விழா நம் உள்ளத்தின் பரிசுத்தமான ஆனந்தத்தை வெளியிடும் விழா! பகைவரின் அச்சத்தையும் பசியின் அச்சத்தையும் நாம் விரட்டி விட்டதால்தான் இப்படி நம்மால் விழாக் கொண்டாட முடிகிறது. ஆண்டுதோறும், நான் இருந்தாலும் இறந்தாலும் இந்த விழா சிறப்போடு நடக்கும் வண்ணம் இந்த நாட்டைக் காத்து உங்களையும் காத்துக் கொள்ளுங்கள்!"

சக்கரவர்த்தி ஒவ்வொரு வாக்கியத்தையும் கூறி நிறுத்தியவுடன், அதையே அங்கங்கே கூட்டத்தில் நின்று கொண்டிருந்த அதிகாரிகள் திருப்பிச் சொல்லி, கூட்டத்தினர் முழுவதும் கேட்பதற்கு ஏற்பாடு செய்தனர். கடைசியாக அவர் கூறிய செய்தியைக் கேட்ட பலருக்குக் கண்கள் கலங்கி விட்டன. அவர் சக்கரவர்த்தியாக வருவதற்கு முன்பு, விஜயநகரம் பகைவர்களிடம் பட்ட பாட்டினையும் அதன் பிறகு அது பெற்றிருந்த பேற்றினையும் அவர்களால்

# மூல நோயினால்

## நீங்கள் இனியும்

## அவதிப்பட வேண்டியதில்லை

**ஆயுர்வேத முறையில் தயாரிக்கப்பட்ட புதிய மருந்து இதோ வந்து விட்டது**

**மென்று தின்றே வியாதியைப் போக்கிக் கொள்ளலாம்**

**அதிசய வாய்ப்பு - பத்து நாளுக்கான மருந்து இலவசம்**

மூல ரோகத்தினால் இனி நீங்கள் கஷ்டமோ கவலையோ அடைய வேண்டாம். இன்றே **பிலிகேன்** சிகிச்சையை ஆரம்பியுங்கள். பிலிகேன் என்பது ஆயுர்வேத முறையில் தயாரிக்கப்பட்ட புதிய மாத்திரை. மென்று தின்றே வியாதியைப் போக்கிக் கொள்ளலாம். குறிப்பிட்ட இந்திய மூலிகைகளை நீண்டகாலம் பரிசோதனைகள் செய்ததற்குப் பின்னர் பம்பாயைச் சேர்ந்த பாபுலர் டிரக் கம்பெனியாரால் இப்போது தயாரிக்கப்பட்டுள்ளது. சில மாத்திரைகளை காலையில் மென்று தின்னவும். பத்து நாட்களில் ஆச்சரியகரமான பலனைக் காண்பீர்கள்.

**இந்த அதிசய திட்டத்தை இன்றே பயன்படுத்திக் கொள்ளுங்கள்**

எங்களுடைய ஏகபோக வினியோகஸ்தர்கள், பெலிராம் சிமன்லால் & கம்பெனி. 308, பிரின்ஸஸ் தெரு, தபால் பெட்டி நெ. 2190, பம்பாய் - 2 என்ற விலாசத்திலிருந்து ஒரு பாட்டில் பிலிகேன் மாத்திரைகளை தருவித்துக் கொள்ளுங்கள். முழு சிகிச்சை 30 நாட்களுக்குப் போதுமான ஒரு பெரிய பாட்டில் மாத்திரை உங்களுக்கு அனுப்பப்படும். அத்துடன் முதல் பத்து நாட்களுக்குப் போதுமான ஒரு சிறிய மாதிரி பாட்டில் ஒன்றும் அனுப்பப்படும். மாதிரிக்கான **பிலிகேன்** பாட்டிலை முதலில் உபயோகிக்கவும். மருந்து சாப்பிடுவதனால் ஏற்படும் குணத்தில் உங்களுக்கு திருப்தி இருந்தால் பெரிய பாட்டிலைத் திறந்து உபயோகிக்கவும். அடுத்து சுமார் மூன்று வாரத்தில் நீங்கள் பூரண குணம் பெறுவீர்கள். முதல் பத்து நாட்களுக்குள் நீங்கள் எதிர்பார்த்த நிவாரணத்தை, பிலிகேன் அளிக்கவில்லையானால், நீங்கள் வாங்கிய பெரிய பாட்டில் பிலிகேனை அப்படியே திறக்காமல் திருப்பி அனுப்பி விடவும். அதன் விலை ரூ. 12/-யும் அப்படியே உங்களுக்கு உடனே திருப்பி அனுப்பி விடப்படும்.

**ஆர்டர்கள் வி.பி.பி. மூலம்தான் அனுப்பப்படும்**

இந்தியாவில் உள்ள எந்த இடத்துக்கும் பிலிகேன் மாத்திரைகளுக்கென ஆர்டர்களை வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கப்படும். ஆர்டர்களுக்கு விலை ரூ.14.25. தபால் செலவு பாக்கிங் வரிகள் உள்பட.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதப்படல் வேண்டும்

பிலிகேன் மாத்திரையை உபயோகித்து, திருப்தி அடைந்தவர்களில் நீங்களும் ஒருவராக இருந்தால், உங்களுடைய தேவைகளுக்கு கீழ்க்கண்ட ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்

*STOCKISTS :*

**ALLAHABAD** : BALSONS, Balson's Corner, Near Kamala Nehru Hospital, Allahabad - 2 and Mahatma Gandhi Marg, Civil Lines, Allahabad -1 **BANGALORE** : The Popular Stores (Reg.) Malleswaram, Bangalore - 3 **CALCUTTA** : M/s. Phani Kanika Distributors, 1, Vivekananda Road, Calcutta -7 **CHANDIGARH** : Gaindamull Hemraj, Sector-17 **DELHI** : (1) Paul Bros., Gandhi Market, Sadar Bazar, (2) H. C. Sen & Co., Chemists, Fountain, (3) Radicura & Co., Fatehpuri Chandni Chowk, Delhi. (4) United Stores, Gopinath Bazar, Delhi Cantt. **NEW DELHI** : (1) Empire Stores, Connaught Place, (2) Public Medical Stores, Bank Street, Karol Bagh. **ERN · KULA** : Hassan Stores, Wine & G. Merchants, Broadway. **GWALIOR** : Govt. Servants Co-op. Stores Ltd., Kempo Road, Lashkar. **INDORE** : Cash Chemists, Maharani Road, Indore City. **KOLHAPUR** : Ranjit Stores, Shivaji Road. **MADRAS** : The Seamars Chemical Corporation (Pvt.) Ltd., 2/81, Lloyds Road, Madras - 6 **MADURAI** : R. G. Stores 34, East Chitrai Street, Sri Renga Stores, College House Bldg., 2 - B/9, Town Hall Road. **MANGALORE** : Fancy Mart, Opp. Canara Jewellers, G. H. S. Road. **MYSORE** : Sreenivasa Stores. **PATNA** : D. Lall & Sons, Fraser Road, Patna -1 **POONA CITY** : N. Mahadeo & Co. Chemist. **SHOLAPUR CITY** : T. Framji & Co.

All orders by post will be executed only by the sole Distributor Messrs BELIRAM CHIMANLAL & CO., 308, Princess Street, Post Box No.

நினைக்காமல் இருக்க முடியவில்லை. 'இவருக்கும் இறப்பு உண்டா?' என்று எண்ணி ஏங்கினர் பலர்.

பிற்பகலில் கோலாகலமாக ஆடல்களும் பாடல்களும் வீர விளையாட்டுகளும் வரிசை வரிசையாக நடைபெறத் தொடங்கின.

ரதங்கள் சில வெகு வேகமாக விரைந்து வந்து திறந்த வெளியில் எதிர்நோக்கி நின்றன. ரதங்களைச் செலுத்தியவாறே போரிட்டு வீர சாகஸங்கள் செய்தனர் பல வீரர்கள். அடுத்துக் குதிரைகளும் யானைகளும் வந்து, பற்பல அற்புதங்களைச் செய்து காட்டின. பின்னர் பெரிய பெரிய வலைகளைச் சுமந்து கொண்டு வந்து, கூட்டத்தில் இருப்போரை, வலைக்குள் சிக்க வைத்து விளையாட்டுக் காட்டினர் சிலர்.

பெண்கள் அந்தக் கேளிக்கைகளில் கலந்து கொண்ட காட்சிதான் நாட்டின் பிறபகுதிகளிலிருந்து வந்திருந்த சிற்றரசர் பலரைப் பிரமிக்க வைத்தது. பதினைந்து வயதிலிருந்து இருபத்தைந்து வயதுக்குள்ளிருந்த நாற்றுக் கணக்கான பெண்கள் வரிசை வரிசையாக வந்து, பொற்கலங்களில் ஏற்றிய தீபச் சுடர்களோடு நடனமாடினார்கள். வேறு சில பெண்கள் முரசுகள், சங்குகள், குழல்கள் இப்படிப் பல்வகை இசைக் கருவிகளை இசைத்துக் கொண்டே ஆடினார்கள். பெண்களுக்குள் வாட்போர்களும் மற்போர்களும் கூட நடைபெற்றன! அவர்கள் அணிந்து கொண்டிருந்த ஆடை அணிகளைக் கண்ட பிற நாட்டார், 'இவர்கள் ஒவ்வொருவரும் நம் நாட்டு இளவரசிகளையும் மிஞ்சிவிடுவார்கள் போலிருக்கிறதே!' என்று வியந்தார்கள்.

"கண் பெற்ற பயனை நான் இன்றுதான் அநுபவிக்கிறேன்!" என்றான் சேரநாட்டிலிருந்து வந்திருந்த உதயமார்த்தாண்டன் அருகில் அமர்ந்திருந்த அரசனிடம்.

"உங்கள் சேர நாடுதான் அழகிகள் நிறைந்த நாடென்று கூறுகிறார்களே?" என்றான் அவன்.

"அழகு மட்டிலும் போதுமா? அந்த அழகும் இளமையும் எப்படியெல்லாம் இங்கு கட்டிக் காத்துப் பயன்படுத்தப்படுகிறது, கண்டீர்களா? ரோஜாவைப் போன்ற பெண்மைக்குள்ளே இவ்வளவு வலிமையும் உண்டு என்று தெரிகிறதே!"

"இது நம் சக்கரவர்த்திகள் செய்திருக்கும் அற்புதம்!" என்று பெருமையோடு பதிலளித்தான் அவன். "இந்தப் பேரழகை முன்போல் பகைவர் கூட்டத்தால் அவ்வளவு எளிதாகச் சீரழித்துவிட முடியாது. பெண்களை இனி மந்தைகள் போல் சிறைப்பிடித்து விரட்டிச் செல்ல முடியாது. அன்புகொண்டவர்களிடத்தான் இவர்கள் தங்கள் புருவங்களை வில்லாகவும் விழிகளை அம்பாகவும் பயன்படுத்துவார்களே தவிர, மற்றவர்களை வாளும் வேலும் வீசி விரட்டத் தயங்கமாட்டார்கள். மெல்லியலார் அப்போது வல்லியராக மாறி விடுவார்கள்!"

இரவு தீப்பந்தங்களின் பேரொளித் திரளால் பகலாக மாறியது. அரண்மனைக் கோட்டை மதில்களெங்கும் ஒரே ஒளிக்கூட்டம். திடீரென்று வானத்தில் உச்சியில் வர்ண ஜாலங்கள் காட்டும் வாண வேடிக்கைகள் நடைபெறத் தொடங்கின. பிரம்மாண்டமான உருவங்களில், பல்வேறு நிறங்களில், ஆயிரமாயிரம் நெருப்பு மலர்கள் கருநீல வானமாகிய நந்தவனத்தில் பூத்துச் சொரிந்த வண்ணமாக இருந்தன. அரண்மனைக்குள் இருந்தவர்கள் மட்டிலுமல்லாமல், நகரத்து மக்கள் அனைவருமே அவரவர் வீடுகளில் இருந்தவாறு அந்த அற்புதத்தைக் கண்டு களித்தனர்.

முதல் நாள் விழா முடிவுற்றது.

"இந்த ஒரு நாளைப் போலவே ஒன்பது நாட்களும் இருப்பதில்லை; நாளுக்கு நாள் வெவ்வேறு வகையான சிறப்பு நிகழ்ச்சிகள் உண்டு; ஒவ்வொரு நாளும் அதற்கு முதல் நாள் மிஞ்சுவதாகத்தான் இருக்கும்" என்றான் உதயமார்த்தாண்டனுக்கு அருகில் இருந்தவன்.

## அத்தியாயம் இருபத்தேழு

# மற்போர்

ஒன்பதாம் நாள் பிற்பகல் நிகழ்ச்சிகள் திருவிழாவின் முக்கியமான நிகழ்ச்சிகளாகும். அரச குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்கள், அமரநாயக்கர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், சக்கரவர்த்தியின் விருந்தினர்களாக வந்துள்ளவர்கள் முதலியோர் அன்றைய வீர விளையாட்டுக்களில் கலந்துகொள்வது வழக்கம்.

விழாக் காண வருவோரும் எந்த நாளைத் தவற விட்டாலும் அந்த ஒன்பதாம் நாளைத் தவறவிட மாட்டார்கள். இளங்காளையர் பலர் தங்களது வீர சாகஸங்களைக் காதலினம் கன்னியர் முன்பு நிலைநிறுத்திக் காட்டி, அவர் தம் நெஞ்சங்களை முற்றுகையிடுவதற்காகப் போட்டியிடும் நாளும் அதுதான்.

விசுவநாதன் ஏனோ அதுவரையில் அந்த விழாக்களில் கலந்து கொண்டதில்லை. இயற்கையாக அவனிடம் குடிகொண்டிருந்த அடக்கமும் பணிவுமே அவனை இத்தனை ஆண்டுகளாக ஒதுங்கியிருக்கச் செய்தன. போர்க்களங்களில் பகைவர் மீது புலியெனப் பாய்ந்திருக்கிறானே தவிர, தன்னைச் சார்ந்தவர்களுடன் கூட அவன் விளையாட்டுக்காகப் போர் புரிந்ததில்லை. முன்பு லட்சுமி விசுவ

நாதனிடம் பராமுகமாக இருந்ததற்கு அவனுடைய இந்த அடக்கமே காரணம்.

லட்சுமியே அவனை அந்த ஆண்டு வற்புறுத்தியதால்தான் அவன் தன் பெயரைக் கொடுத்திருந்தான். மற்போர் புரிவதற்காகக் காத்திருந்த இளைஞர்களிடையே விசுவநாதனும் கலந்து நின்றதைக் கண்டு உளம் பூரித்தாள் லட்சுமி. உதய மார்த்தாண்டனின் விழிகளும் அடிக்கடி லட்சுமியையும் விசுவநாதனையும் மாறி மாறிப் பார்த்தன.

''இப்போது இங்கே நடைபெறப் போவது வெறும் வீரசாகசப் போட்டி மாத்திரமல்ல; காதற் போட்டியுந்தான்!'' என்று ரகசியமாக உதய மார்த்தாண்டனின் செவிகளில் கூறினன் அவனுக்குப் அடுத்தாற்போல் அமர்ந்திருந்த சிற்றரசன்.

''என்ன!''

''ஆமாம், பல திருமணங்கள் இந்த விழாவின்போதுதான் நிச்சயமாவது வழக்கம்.. போர்க்களத்தின் ஆர்வத்தையும் மிஞ்சக் கூடிய ஆர்வத்தை நீங்கள் இப்போது காணப் போகிறீர்கள். கூட்டத்தில் நிறைந்திருக்கும் அழகிகளில் ஒருவரை மனத்தில் வைத்துக்கொண்டு, இந்த ஆடுகளத்தில் குதித்திருக்கிறார்கள் பல இளைஞர்கள். வெற்றி பெறுபவர்கள் அதிர்ஷ்டசாலிகள். தாங்கள் விரும்பிய பெண்களையும் அவர்கள் வெற்றி கொண்டு விடுகிறார்கள்!''

பரபரப்படைந்தான் உதய மார்த்தாண்டன். சேர நாட்டிலும் மற்போர்கள் நடைபெறுவதுண்டு. மல்லன் என்ற முறையில் அவன் வல்லவன் என்ற பெயரும் பெற்றிருந்தான். உடனடியாகக் களத்தில் குதிக்க வேண்டுமென்ற துடிப்பு அவனை உந்தித் தள்ளியது.

அதற்குள் மற்போர் தொடங்கி விட்டது.

விசுவநாதனுடைய முறை வந்தபோது கூட்டத்திலிருந்து அளவுக்கதிகமான ஆரவாரம் எழுந்தது. போர்க் கலையில் புலியெனப் பெயர் பெற்ற நாகம நாயக்கரையே அவன் வெற்றி கொண்டு திரும்பியவன் என்பதால் அவனிடம் பெருமதிப்பும், பேரன்பும் கொண்டிருந்தார்கள் பலர். பெண்கள் கூட்டமும் லட்சுமியின் செவிகளில் ஒலிக்கும்படி அவனைப் பற்றிப் பெருமை பேசத் தொடங்கியது.

மற்போரென்றால் அது இந்தக் காலத்தில் நடைபெறுவதைப் போன்றதல்ல. கைகால் முறிவதுண்டு; முகமே மாறிப் போவதுண்டு; இரத்தம் சொட்டச் சொட்ட இளைஞர்கள் களத்தில் பேச்சு மூச்சற்று விழுந்து விடுவதுண்டு. உடலுக்குடன் அடிபட்டு விழும் வீரர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக அங்கே மருத்துவர்கள் சித்தமாக இருந்தார்கள்.

சென்ற ஆண்டில் விஜயநகரத்தின் தலைசிறந்த மற்போர் வீரனைத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தவன் சிவப்பு நாயக்கன் என்பவன். அச்சுத ராயரின் மைத்துனனான அவனோடு போர் புரிய வேண்டிய அவசியம் நேர்ந்து விட்டது விசுவநாதனுக்கு. சிவப்பு நாயக்கனின் தாக்குதல்கள் மூர்க்கத்தனமாக இருந்தன. பல வீரர்களை அவன் குற்றுயிரும் குலை உயிருமாகக் களத்திலிருந்து எடுத்துச் செல்ல வைத்தவன்.

ஆனால் விசுவநாதனிடம் ஏனோ அவனுடைய முரட்டுத்தனம் பலிக்கவில்லை. மிகவும் சாமர்த்தியமாக அவனுடைய அடிகளிலிருந்து தப்பிக் கொண்டு அதே சமயம் அவனையும் காயப்படுத்தாமல், சாகசங்கள் செய்து வந்தான் விசுவநாதன். இறுதி வெற்றி விசுவநாதனுக்குத்தான்; வாழ்த்தொலி அந்த அரண்மனையையே அதிரச் செய்தது.

''அடுத்து யாரும் வருகிறார்களா?'' என்று கேட்டுக் கூட்டத்தைச் சுற்றிப் பார்த்தவாறே அழைப்பு விடுத்தான் விசுவநாதன்.

''போதும், நிறுத்தி விடுங்கள்! களைத்துச் சோர்ந்து விட்டீர்கள்!'' என்று கூறிக் கொண்டே அவனைக் களத்திலிருந்து அழைத்துச் செல்வதற்காக விரைந்து வந்தார் அரியநாத முதலியார்.

விசுவநாதனின் களைப்பைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பியது போல் கூட்டத்திலிருந்து எழுந்து நின்றான் உதய மார்த்தாண்ட வர்மன். பரபரப்படைந்த கூட்டத்தினர் அனைவரும் அவனை வியப்போடு திரும்பி நோக்கினர்.


''இதோ, நான் வருகிறேன்!''

லட்சுமி திடுக்கிட்டாள். அவளுடைய தந்தை உதயமார்த்தாண்டனை உற்சாகப் படுத்தித் தூண்டி விட்டுக் கொண்டிருந்தது அவளுக்குத் தெரிந்து விட்டது. விசுவநாதனோ மலையைப் புரட்டுவது போல் சிவப்பு நாயக்கனைப் புரட்டிவிட்டு, மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கத் தரையில் உலவிக் கொண்டிருந்தான்.

'சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு களைப்பாறிவிட்டுப் போரிடக் கூடாதா?' விசுவநாதனிடம் கூறத் துடிப்பவள் போல் எழுந்து நின்றாள் லட்சுமி. விசுவநாதன் அவளைத் திரும்பிப் பார்த்துப் புன்னகை பூத்துவிட்டு, உதய மார்த்தாண்டனிடம் ''நான் சித்தமாக இருக்கிறேன்; வாருங்கள்!'' என்று கூவினான்.

மேல் உடைகளைக் களைந்து விட்டுக் களத்தில் குதித்தான் உதயமார்த்தாண்டன். சேர நாட்டுத் தலைசிறந்த மல்லன் என்ற செருக்கோடு விசுவநாதனின் மேல் பாய்ந்தான். எப்படியும் அவனை மடக்கிவிட்டு, அதற்குப் பரிசிலாக லட்சுமியிடமிருந்து ஓர் விழி வீச்சைப் பெற்று விட்டால் போதுமென்ற ஆவல் அவனுக்கு.

விசுவநாதனுக்கு அவனை அருகில் கண்டவுடனேயே புது வலிமை வந்துவிட்டது போல் தோன்றியது. அந்த வலிமை லட்சுமியைத் திரும்பி நோக்கியபோதெல்லாம்



சக்திக்கும், வலிமைக்கும்!
கோகோ
சர்க்கரை
மால்ட்
பால்
Bournvita
ஊட்டப்பொருள்கள் அனைத்தும் ஒருங்கே தேவையா? ஒரு கப் போர்ன்விடா அருந்துங்கள். தசைகள் வளர புரதங்களும், சக்திக்கும் வலிமைக்கும் புஷ்டியான மாவுச்சத்தும், எலும்புகளை வலுவாக்க தாது உப்புக்களும், பூரண ஆரோக்கியத்திற்கு மிக்க அவசியமான வைட்டமின்களும் இதிலே உள்ளன. மிகச்சலபமாக தயாரிக்கலாம். காலையில் உற்சாகத்துடன் எழுந்திருக்க வேண்டுமா? இரவில் அமைதியாக உறங்க வேண்டுமா? போர்ன்விடா அருந்துங்கள்.
காட்பரீஸ் போர்ன்-விடா

அவனுள்ளே பொங்கிக் கொண்டு வந்தது. சிறிது நேரம் அவனுடைய பிடிக்குள் அகப்பட்டுத் தவிப்பவன் போல் போக்குக் காட்டிக் கூட்டத்தினரைப் பதைக்க வைத்தான். லட்சுமியை அழ வைத்தான்; மார்த்தாண்டனின் செருக்கை அவனுடைய தலைக்கு முறுக்கேற்றி விட்டான்.

உதய மார்த்தாண்டனின் அடிகள், உதைகள், குத்துகள் இவ்வளவையும் எப்படித்தான் விசுவநாதனால் தாங்கிக்கொள்ள முடிந்ததோ தெரியவில்லை. ஆனாலும் விசுவநாதன் அவனை அதே முறையில் திருப்பித் தாக்கவில்லை. சேர நாட்டுக்காரனின் ஆற்றலையெல்லாம் வெளிப்படுத்தி வேடிக்கை காண விரும்பியவன் போல் அவன் ஏற்ற தருணத்துக்காகக் காத்திருந்தான்.

கூட்டத்திலிருந்த லட்சுமிக்கோ மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. லட்சுமிக்குமட்டுமல்ல; கூடியிருந்த அனைவருமே மூச்சு விட மறந்து போனார்கள். அந்த ஆண்டின் 'விஜயநகரத்து மற்போர் வீரன்' என்ற பெயரைச் சேர நாட்டுக்காரன் பறித்துக் கொண்டு போய்விடுவான் என்றே பலரும் நினைக்கத் தொடங்கினார்கள்.

பின்னர், மார்த்தாண்டனின் பிடியிலிருந்து விலகிச் சென்று லட்சுமியைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தான் விசுவநாதன். மார்த்தாண்டனுக்கு அந்தச் சிரிப்பைத் தாங்கவே முடியவில்லை. கூட்டமும் அவனுடைய சிரிப்பின் பொருள் அறியாது குழம்பியது.

பின்னர்...

பாயும் வேங்கையென விசுவநாதன் எகிறி மார்த்தாண்டன் மீது பாய்ந்தான். பாய்ந்தவனின் கால்களிரண்டையும் மார்த்தாண்டன் பற்றிக் கொள்ளவே அவன் முதுகில் தன் முதுகைச் சாய்த்த வண்ணம் மல்லாந்து அவன் கால்களிரண்டையும் பற்றிக் கொண்டான் விசுவநாதன். இருவருமே தரையில் முதுகு படாமல் உருண்டு புரண்டார்கள். கால்களால் ஒருவர் கழுத்தை மற்றவர் நெரிக்க முயன்று துடித்தார்கள்.

கடைசியில் தன் நிலையை அவன் கால்களின் பிடியிலிருந்து மீட்டு மெல்ல மெல்ல அவன் கழுத்தை இறுக்கி, அவனை மூச்சுத் திணறச் செய்தான் விசுவநாதன். விசுவநாதனின் கால்கள் மார்த்தாண்டனின் கழுத்தில் கருக்குக் கயிறுகளாக இறுகத் தொடங்கின. விழிகள் பிதுங்க, நாக்கு நீள, மார்த்தாண்டன் தன் பிடிகளை நழுவ விட்டான். விசுவநாதன் மார்த்தாண்டனைக் கொல்லத் துணியவில்லை. அவனுடைய பிடிகள் தளர்ந்தவுடன் அவனைத் தரையில் புரட்டி விட்டு அவனுடைய நெஞ்சின் மீது ஏறி அமர்ந்து கொண்டான்!

கூட்டத்தினர் வெறி பிடித்தவர்கள் போல் வாழ்த்தொலி எழுப்பிய வண்ணமாகவே இருந்தார்கள். லட்சுமி அப்படியே தன் அருகிலிருந்த தோழியை இறுகப் பற்றிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். சக்கரவர்த்தியே தன்னுடைய சிம்மாசனத்தை விட்டு எழுந்து ஆடுகளத்தை நோக்கி விரைந்தார். தம் இரு கரங்களாலும் விசுவநாதனை அன்போடு தழுவிக்கொண்டு வாழ்த்துக் கூறினார்.

தோல்வி அடைந்த உதய மார்த்தாண்டனையும் அவர் பாராட்டத் தவறவில்லை. "நீங்கள் மற்போர் புரிவதற்கு முன்வந்தீர்களே அதுவே எங்களுக்குப் பெருமை தருகிறது. உங்களது சாகஸங்களைக் கண்டு மகிழ்வதற்கு நீங்கள் எங்களுக்கொரு வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறுகிறேன். இது வெறும் விளையாட்டுத்தான் என்பதை மறந்து விடாதீர்கள்; உங்கள் இருவரது வீரமும் நட்பினால் உயர்ந்து சிறக்க வேண்டும்!"

உதயமார்த்தாண்டன் ஏனோ சக்கரவர்த்தியின் சொற்களால் ஆறுதல் பெறவில்லை. லட்சுமியின் முன்னிலையில் தோற்றுவிட்டதற்குப் பதிலாக உயிரையே விட்டிருக்கலாம் என்று தோன்றியது அவனுக்கு. விசுவநாதனை அவனுடைய விழிகள் வெறுப்போடு உற்று நோக்கின. அதைக் கண்டு மனம் குளிர்ந்தவர் சாளுவ நரசிம்மர் ஒருவரே!

(தொடரும்)

## என்ன மரியாதை?

ஒரு நாள் சாயங்காலம் என் அத்திம்பேர் (சகோதரி கணவர்) என் அகத்துக்கு வந்திருந்தார். இரவு சாப்பிடும் வேளை நெருங்கி விட்டதால் என் சகதர்மிணி அத்திம்பேரைச் சாப்பிடக் கூப்பிட்டு வா என்று குழந்தை வஸந்தியிடம் சொல்லி அனுப்பினாள். குழந்தை அத்திம்பேரை, 'அத்திம்பேர் சாப்பிட வா' என்று கூப்பிட்டாள். "பெரியவர்களை மரியாதையில்லாமல் சாப்பிட வா என்று கூப்பிடக் கூடாது. அத்திம்பேரை மரியாதையாக 'சாப்பிட வாருங்கள்' என்று கூப்பிட வேண்டும்" என்று நான் சொன்னேன்.

உடனே குழந்தை வஸந்தி, 'அத்திம்பேர் மரியாதையாய்ச் சாப்பிட வாருங்கள்' என்றாள்!


- கே. பாலையம்



# உங்கள் குழந்தையை ஆரோக்கியமுடன் குதூகலமாக வைத்திருக்க உறுதுணை

# உட்வர்ட்ஸ்


குடல் வலி, புளிப்பு, உப்புசம், பல்முளைப்புப் பருவக் கோளாறுகள் ஆகியவற்றிலிருந்து உடனடி நிவாரணம் தருவது உட்வார்ட்ஸ். எப்போதும் உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் உங்கள் வசம் இருக்கட்டும்.




100 ஆண்டுகளுக்கு மேலாக புத்திசாலித் தாய்மார்களால் உபயோகிக்கப் பட்டுவருகிறது.

LPE Aiyars. F. 10 TM

# சேலைக்கு ஒரு சகோதரி



மோனிகா ஃபெல்டன் - அநுத்தமா

**சா**ரதா சட்டம் அமுலுக்கு வருமுன்னமேயே மொத்தத்தில் நாட்டில் குழந்தை விதவைகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கி யிருந்தது. இப்போது சட்டம் கொண்டு வந்ததற்கும் அதைச் செயலாற்றுவதற்கு மிடையே ஆறு மாத காலம் இருந்ததன் விளைவாக, இளம் விதவைகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது. சட்டம் வந்துவிடுமே என்பதால் அவசரப்பட்டு நடத்திய குழந்தை விவாகங்கள் ஏராளம். இதன்பின் ஒரு வருடத்துக்கு அப்புறம் ஜனசங்கியையக் கணக்கு எடுக்கப் பட்டது. இந்த இடைக்காலத்துக்குள் விதவைகளாகி விட்ட குழந்தைகளின் எண்ணிக்கை மிக அதிகமாகியது. 1931ம் ஆண்டு ஜன சென்ஸஸ் அறிக்கையே இதைக் குறிப்பிட்டது. 1921ம் ஆண்டு ஜனசங்கியைக் கணக்குப்படி ஒரு வயதுக்குட்பட்ட விதவைகளின் எண்ணிக்கை 759. பத்து வருடங்கள் கழித்து அது இரட்டை மடங்காகப் பெருகி 1515 ஆகிவிட்டது. இதே காலத்தில் பதினைந்து வயதுக்குட்பட்ட மணமான குழந்தைகளின் எண்ணிக்கையும் 8,565,357லிருந்து 12,271,595 ஆகப் பெருகிவிட்டது.

ஹோபார்ட் பள்ளியில் கப்புலக்ஷ்மி உத்தியோகம் ஏற்ற உடனேயே, மிஸ் எலினர் ரேத்போன் (Miss Eleanor Rathbone) என்ற பிரிட்டிஷ் பாராளுமன்ற அங்கத்தினர் சென்னைக்கு விஜயம் செய்தாள். அவளையும் கப்புலக்ஷ்மியையும் ஒரு பொதுக்கூட்டத்தில் குழந்தை விவாகத்தைப் பற்றிப் பேச அழைத்தனர்.

''நீங்கள் என்ன பேசினீர்கள்?'' என்று மறுநாள் மயிலாப்பூர் பெண்மணி ஒருத்தி சகோதரியைக் கேட்டாள்.

''நான் என்ன பேசியிருப்பேன் என்று நீ நினைக்கிறாய்?'' சகோதரி பளிச்சென்று திருப்பிக் கேட்டாள். ''கல்யாண வயதை உயர்த்த வேண்டும் என்று கேட்பதற்காகத் தான் அக்கூட்டம் நடைபெற்றது என்பது தெரியாதா உனக்கு?''

சகோதரி இன்று என்னிடம் இதைப் பற்றிக் கூறிவிட்டுத் தொடர்ந்தார்: ''எனக்குப் பரிச்சயமான ஒருவர் அக்கூட்டத்தில் பேசினார். அவர் தம்மை ஒரு சீர்திருத்தவாதி என்று கூறிக்கொண்டார். குழந்தை விவாகங்களினால் நேரும் கெடுதல்களை நன்கு எடுத்துரைத்து மிகவும் அழுத்தமாகப் பேசினார். அவர் தம் சொந்தப் பெண்ணை எட்டு வயதிலேயே விவாகம் செய்து கொடுத்திருந்தார் என்பது எனக்குத் தெரியும். ஆகையினால் கூட்டம் முடிந்ததும் நான் அவரிடம் அதைப் பற்றிக் கேட்டேன். ''நீங்கள் உபதேசிப்பது ஒன்று, செய்வது ஒன்றாக எப்படி இருக்கலாம்?'' எனக்கு அவர் பதிலளித்தார்: ''நாம் காலத்தை அனுசரித்துச் செல்ல வேண்டும். பெண்களுக்குச் சிறு பிராயத்தில் கல்யாணம் செய்துவிடுவது முற்றிலும் தவறுதான். அவர்கள் பெரியவர்களாகித் தங்கள் செய்கைகளுக்குப் பொறுப்பேற்கும் விவரம் அறியும்வரையில் காத்திருப்பதுதான் சரி. ஆனால் என் பெண் அவ்விவாக வயதை அடையும்வரை நான் காத்திருந்தேனானால் எனக்கு வீட்டில் ஒரு நிமிஷ நேரம்கூட நிம்மதி

இருந்திருக்க முடியாது. என் பாட்டி என்னை நச்சரித்திருப்பாள். என் தாயார் என்னைச் சொற்களால் குத்திக் குத்தித் துளைத்துக் கொண்டிருந்திருப்பாள். என் மனைவி என்னை ஒரு நிமிடம் பேசாமல் விட்டு வைத்திருந்திருக்க மாட்டாள். என் பெண்ணின் கல்யாணத்தை என்னால் தவிர்க்கவே முடியவில்லை. அதற்காக மற்றவர்கள் எதைச் செய்வது முறை என்று எடுத்துக் கூறாமல் இருக்க வேண்டுமா?''

பொதுக் காரியங்களில் ஈடுபடாத சாதாரணப் பெண்களின் மனப்போக்கைத்தான் முக்கியமாக மாற்ற வேண்டும் என்பதைச் சகோதரி எப்போதுமே உணர்ந்திருந்தாள். சாரதா சட்டம் தேவையான அளவுக்குச் செயல்படவில்லை என்பதை அறிந்திருந்தாள். சட்டம் வலுப்படுத்தப்பட்டுத் தீவிரமாக அரசாங்கத்தாரால் செயல் படுத்தப்பட வேண்டும் என்று ஊக்கத்துடன் பல பிராமணர்கள் தமக்கு எழுதியிருப்பதாக ஜனசங்கியைக் கமிஷனர் அறிவித்தார். ''பொதுவாக ஏனோ தானோ என்ற இந்த முயற்சிக்கு அதிக மதிப்பில்லை என்று எல்லோரும் ஒத்துக் கொள்ளுகிறார்கள்'' என்று அவர் மேலும் எழுதியிருந்தார். இருந்தாலும் மறைமுகமாக வேனும் அச்சட்டத்தினால் சிறிது குணம் இருந்தது என்றார் அவர். கொஞ்சம் காலதாமதமாகவே தங்கள் பெண்களின் கல்யாணத்தை நடத்துவதற்குப் பலருக்கு அது ஒரு சாக்காகவும் வரதட்சிணையைக் குறைப்பதற்கு அது ஒரு காரணமாகவும் பயன் பட்டது. எல்லாவற்றையும் விட முக்கியமாகக் குழந்தை விவாகங்களின் தீமை குறித்து இதுவரை சிறிதுகூடச் சிந்திக்காத மனிதர்களிடையேயும், சமூகங்களிடையேயும் இச்சட்டம் ஓரளவுக்கு விழிப்பை உண்டாக்கி அவர்களைச் சிந்திக்க வைத்தது. கடைசியாகக் கூறப்பட்ட இந்த விஷயம்தான் எல்லாவற்றையும் விட முக்கியமான, முன்னேற்றகரமான பலன் ஆகும். ஆனால் இதைப் பலர் அன்று உணரவில்லை. மாறுதலுக்குத் தேவையான விதைகளை ஊன்றியாகி விட்டது. சரியாகக் கவனியாவிட்டால் அவை முளையிலேயே மடியக் கூடும். பொறுமையாக இருந்து நீரூற்றி நன்கு பேணி வளர்த்தால் அவை செழிக்கும்.

## 9

சுப்புலக்ஷ்மி வெகுநாட்கள் ஹோபார்ட் பள்ளியில் இருக்கவில்லை. அவள் அங்கு வந்து சரியாக ஒரு வருட காலம் ஆகியிருந்த சமயத்தில், 1933ம் வருடம் ஜனவரி மாதத்தில், அவள் கடலூரில் உள்ள அரசாங்க ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கும் அதையொட்டியிருந்த உயர்நிலைப் பள்ளிக்கும் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டாள்.

தன் குடும்பத்தை விட்டு இது வரையில் அதிக காலம் பிரிந்திராத சுப்புலக்ஷ்மிக்கு இது மிகவும் மனச் சங்கடத்தை அளித்தது. ஆயின், இது வரை தனக்கு இட்டப்பட்ட எந்தக் கடமையிலிருந்தும் அவள் விலகப் பார்த்ததில்லை. இப்போதும் அவ்வாறு செய்ய முயலவில்லை.

இதற்குள் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றுவிட்ட அவளுடைய தகப்பனார் தமது மோட்டார் காரிலேயே அவளைக் கடலூருக்கு அழைத்துச் சென்றார். கடலூர் பள்ளிக்கூடம் பல வருடங்களுக்கு முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டிருந்தபடியால், நாளாவட்டத்தில் வளர்ந்து பெரிதாக இருந்தது. அங்குள்ள பெண்களில் ஏறக்குறைய எல்லோருமே படித்த குடும்பத்துப் பெண்கள்தாம்.


சுப்புலக்ஷ்மி அங்கு தன் புது அலுவல்களில் குதிர்ந்த உடனேயே, தானும் தன் கீழ்க் கல்வி பயிலும் பெண்களும் அவ்வட்டாரத்திலுள்ள ஏழைக் குழந்தைகளின் படிப்புக்கு ஓரளவுக்கேனும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தாள். பள்ளிக்கருகே செம்படவர்கள், சாணுர்கள், குயவர்கள் முதலியோர் குடியிருந்த சேரி ஒன்று இருந்தது. அவர்கள் சுத்தமாக வாழக் கற்காதவர்கள். வறுமையில் அடிபட்டவர்கள். கொஞ்ச நஞ்சம் பணம் கிடைத்தால் அதைக் கள்ளிலும், சாராயத்திலும் செலவிட்டுத் தங்கள் கஷ்டங்களை மறக்க முயன்றார்கள். அவர்கள் வெளியுலகத்துக்கும் தங்களுக்கும் இடையே ஒரு கற்பனைச் சுவர் எழுப்பிக் கொண்டிருந்தனர். அடிக்கடி அவர்கள் தங்களுக்குள் சண்டையிடுவதும், கூப்பாடு போடுவதும் காதில் விழும்.

அந்தக் குறுக்குச் சுவரைத் தாண்டுவது கடினம். அரசாங்கப் பள்ளியில் படிக்கும் உயர்ஜாதி இந்துப் பெண்களை, ஹரிஜனங்களுக்கிடையில் அவர்கள் நலனுக்காக உழைக்க வைப்பது எளிதாக இருக்கப் போவதில்லை. இருந்தாலும் இந்த நன் முயற்சியை மேற்கொண்டேயாக வேண்டும் என்று சகோதரி தெரிவித்தாள்.

1932ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பூனா எர்வாடா சிறையில் இருந்த காந்தியடிகள் ஹரிஜனங்களுக்காகச் சாகும் வரை உண்ணா விரதம் மேற்கொண்டார். அந்த உபவாசம் முடிந்தவுடனேயே இந்தியா முழுவதும் தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடப் பட்டது. அதைத் தொடர்ந்து பல மாதங்கள் வரை காந்தியடிகள் சிறையிலிருந்தபடியே தாம் இப்போது ஹரிஜனங்கள் என்று மாற்றுப் பெயரிட்டிருந்த தீண்டாதார்களுக்காக உழைத்துக் கொண்டிருந்தார்.

ஹரிஜனங்களின் நலனுக்காகப் பாடுபடுவதில் சுப்புலக்ஷ்மி எதிர்பார்த்ததை விட நல்ல பலனைக் கண்டாள். 1934ம் வருடம் பிப்ரவரி மாதம் எட்டாம் தேதி காந்தியடிகள் கடலூருக்கு விஜயம் செய்வதற்கு முன்னதாகவே சேரிக் குழந்தைகளுக்காக அவள் ஆரம்பித்த பள்ளிக்கூடம் நன்கு வெற்றி கண்டு விட்டிருந்தது.

அதை அவள் பணமோ கட்டடமோ ஏதுமின்றி ஆரம்பித்திருந்தாள். அதற்குப் பதிலாக, அந்தப் பள்ளி தென்னந்தோப்பில்


அழகிற்கும் சௌகரியத்திற்குமென்றே
அமைக்கப்பட்டது!
ஓரியண்ட்
அம்பாஸடர் ஆஸிலேடிங்
இரண்டு ஆண்டுகளுக்கு உத்தரவாதம்
ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்.
கல்கத்தா - 54.

## இரு கூடிதங்கள்
### (சிங்காரத்தின் ஊகங்கள்)

எந்த ரொட்டிக்காரனும் தன் வாடிக்கையாளருக்கு அப்படி அலட்சியமாகப் புல் தரையில் ரொட்டியை விட்டெறிந்து விட்டுப் போக மாட்டான். கம்பிகள் இல்லாத கண்ணாடி ஜன்னல் அது. அது மீது ஏறி அதன் வழியாக உள்ளே குதிக்க முயன்ற யாரோ ஒருவன்தான் அந்த ரொட்டியைக் கீழே தள்ளி விட்டிருக்க வேண்டும். இப்படி உள்ளே நுழைந்தவன் வேறு எந்தப் பொருளையும் கடத்திக் கொண்டு போகவில்லை. அப்படியானால் உள்ளே நுழைந்ததன் நோக்கம் எதுவாக இருக்கும்?

சமையலறையில் கைதுடைத்துக் கொள்ள உதவும் டவலில் படிச்சென்ற அழுக்கு. சுத்தமான அறையை உடைய தாமஸ் அப்படி ஓர் அழுக்கை அதில் துடைத்திருக்க மாட்டார். ஆகவே, ஜன்னல் வழியே உள்ளே நுழைந்தவன், ஏறும் போது அழுக்கான தன் கைகளைத் துடைத்துக் கொள்ள அந்த டவலைப் பயன் படுத்தியிருக்கிறான்.

நல்ல சுத்தமான ஆற்றுப் பொன் மணல் பரப்பப்பட்ட இடத்தில் நடந்தது. பயிற்சிப் பள்ளியில் உள்ள மாணவிகள், குழந்தைகள் உட்காருவதற்குப் பாய்களை முடைந்து தந்தார்கள். குயவர்களையும், சாணார்களையும் பள்ளிக்குக் குழந்தைகளை அனுப்பி வைக்கும்படி கெஞ்சி கேட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கவில்லை. மணலைப் பரப்பியவுடனேயே குழந்தைகள், அங்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க வந்து நின்றார்கள். பிறந்த மேனியாகவும் கோவணம் அணிந்தும் வந்து சேர்ந்த அவர்கள் வழக்கம் போல் தாங்கள் விரட்டி அடிக்கப்படாதது கண்டு அதிசயித்தார்கள். உட்காருமாறு கூறியதும் சில குழந்தைகள் வெட்கப்பட்டுக் கொண்டு ஓடி விட்டார்கள். பின்தங்கிய சிலர் பாடங்களை மிகவும் ரசித்தார்கள். மறுநாள் அவர்களது மற்ற தோழர்களும் வந்து சேர்ந்தார்கள்.

அவர்களுக்குக் கல்வி கற்பது மிகவும் உற்சாகமாக இருந்தது. சகோதரியும் பெரிய மாணவிகளும் அவர்களுக்குக் கதைகள் சொன்னார்கள். எழுத்தும் எண்ணும் குச்சிகளால் மணலில் வரைந்து கற்றுக் கொடுக்கப்பட்டன. குழந்தைகள் தாங்களாகவே எழுத ஆரம்பித்ததும், அவர்கள் பெற்றோர்கள், புத்தகங்கள், பென்சில்கள் வாங்கச் சில காசுகள் கொடுத்தார்கள்.

தர்மவான்கள் சிலரும் உதவி செய்தனர். ஆங்கிலத் தம்பதிகளான கலெக்டரும் அவருடைய மனைவியும் தங்களால் இயன்ற உதவியெல்லாம் செய்தார்கள். சமுதாய நலக் கேந்திரம் ஒன்று ஏற்படுத்துவதற்கு உதவினார்கள். சகோதரியின் மேற்பார்வையில் உருவான இக் கேந்திரம் சேரித் தாய்மார்கள் பொழுது போக்கவும், குழந்தை வளர்ப்பு, சுகாதாரம் இவைபற்றிய அடிப்படை அறிவு பெறவும் உதவியது. தங்கைமார்களும்கூட அங்கு வந்தனர். குயவர்களுடைய வேலைப்பாட்டைச் சகோதரி மெச்சினாள். அவர்களுடன் சிநேகபாவத்துடன் பழக ஆரம்பித்து, புதிய இறுகப் பானைகள் செய்ய நல்ல யோசனைகள் கூறினாள்.

அலுவல்களில் மூழ்கியிருந்தபடியால் தன் குடும்பத்தினரைப் பற்றி நினைத்து வருந்த அவளுக்கு நேரம் இருக்க வில்லை. வித்தியாலயத்துக்கு அவளுடைய உதவி தேவைப் பட்டது. சாரதா மாதர் சங்கத்துக்கு அவளன்றி வேறு ஒரு செயலாளர் இருக்க முடியும் என்பதை யாராலும் கற்பனையில்கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை. நீண்ட விடுமுறை நாட்கள் இருந்தபடியால் இந்தப் பொறுப்புக்களை அவளால் நிர்வகிக்க முடிந்தது. கடமைகளைக் குறைவின்றி அவள் நிறைவேற்றிவிட்ட போதிலும் சென்னையில் அவள் இல்லாமல் வெறிச்சோடி விட்டது. முதல் வருட இறுதியில் கப்புலக்ஷ்மி விடுமுறைக்காக வீடு சென்ற போது சித்தி மிகவும் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தாள். அப்போதிலும் எப்போதும் போல் சிரித்த முகத்துடன் கடந்த சில மாதங்களாக கப்புலக்ஷ்மி செய்த காரியங்களைப் பற்றி யெல்லாம் அவளுடன் வினவினாள். தன் ஊரிலும் வித்யாலயத்திலும் நடந்ததைப் பற்றி யெல்லாம் கூறினாள். சுப்பிரமணிய ஐயருடைய குழந்தைகள், மற்றும் உறவினர் எல்லோரும் சேர்ந்து நடத்தும் வருடாந்திரக் கொண்டாட்டத்திலும் கப்புலக்ஷ்மி பங்கு கொண்டாள்.

கல்வி மகாநாடு அரசியல் மகாநாடு என்றெல்லாம் கூடுவது போல் வருஷத்துக்கொரு முறை குடும்ப மகாநாடு நடத்துவதை இவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். குடும்ப மகாநாடு வேடிக்கையாக ஆரம்பிக்கப்பட்டு வருஷம் தவறாமல் தானாகவாக நடத்தப்பட்டு வந்தது. ஆனால் கருத்துச் செறிவோடும் இருந்தது. குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் — பெரியவர்கள் மட்டுமல்ல, இளைஞர்கள் சிறுமியர் கூட — தற்காலப் பொது விஷயங்களைப் பற்றியும், சில சமயம் இலக்கியம், வேதாந்தம், மதம், முதலியவற்றைப் பற்றியும் பேசுவார்கள். பிற்பகலிலும், மாலை நேரங்களிலும் பலவிதமாக விளையாடுவார்கள்; நாடகங்கள் நடிப்பார்கள். கச்சேரிகள் செய்வார்கள். (தொடரும்)

# உதகையின் உச்சி

விமலா ரமணி



அடுப்பில் கடுகு தீய்வதையும் மறந்து இவர் அருகே அவசரமாக வந்தேன் நான்.

"இதோ பாருங்கள்.... இந்த வருடமாவது 'ப்ளவர் ஷோ'வுக்கு ஊட்டிக்குப் போக வேண்டும். ஆமாம்....."

'எலக்டிரிக் ஷேவரி'ல் 'ஷேவ்' பண்ணிக் கொண்டிருந்தவர் 'ஷாக்' அடித்தது போல் துடித்தாரே பார்க்க வேண்டும்!

"என்ன வந்தது?"

"ஒன்றுமில்லை.... 'ஷேவரி'ன் பேல் பழசாகி விட்டது. முகமெல்லாம் காயம்..."

"யார் பேல்....? ஷேவரின் பேலா.....? உங்க பேலா?"

"உன்னைக் கல்யாணம் செய்து கொண்ட அன்றே 'மூக்கில்' காயம் !"

"யூ மீன் நோஸ் கட்!"

அவர் குறுக்கிட்டார்.

"பேச்சை முதலில் 'கட்' பண்ணிவிட்டு அடுப்பைப் பார்! கடுகு தீயும் வாசனை! 'காஸ்' காலியாகிறது. இப்போதுதான் 'ஸிலிண்டர்' புதிது வாங்கினேன்."

உள்ளே போனேன். அடுப்பை அணைத்தேன். பேச்சைத் தொடர்ந்தேன்.

"இந்த வருடம் கண்டிப்பாய் ஊட்டி போய் ப்ளவர் ஷோ பார்க்க வேண்டும்!"

என் கண்டிப்பைப் பார்த்து அவர் சற்றுப் பயந்திருக்க வேண்டும். "இதோ பார்! ஊட்டி போகலாம்.... தாராளமாகப் போகலாம். ஆனால் இந்த 'ப்ளவர் ஷோ' சமயத்தில் வேண்டாம். ஏகப்பட்ட கூட்டம் !"

கல்யாணமான புதிதில் எத்தனை அன்பாக இருந்தார் தெரியுமா ? 'ரிஸப்ஷன்' ஆகி ஊர் திரும்பும் சமயத்தில் – "இன்னும் ஊரைக்கூடச் சரியாகப் பார்க்க வில்லையே ! சிறுவாணி பார்க்கவில்லை! ஊட்டி பார்க்க வில்லை! ஊட்டியில் 'பிளவர் ஷோ' பிரமாதமாக இருக்கும்........" என்றெல்லாம் அன்பு மொழி பேசியவர் நான் கல்லு குண்டு மாதிரி இங்கு 'பர்மெனென்டா'க வந்த பிறகு ஒரு மூச்சு! ஒரு பேச்சு! ஊஹூம்.

எனக்கு ஒரு தம்பி இருக்கிறான் ரமணன் என்ற பெயரில். அவன் ஏதோ ஒரு கம்பெனியில் சேல்ஸ்மேன். அடிக்கடி ஊர் சுற்றுபவன்.

"அக்கா காஷ்மீரில் அதைப் பார்த்தேன். ஊட்டியில் இதைப் பார்த்தேன். ஊட்டியின் உல்லாசம் பார்த்தேன்" என்றெல்லாம் கதை அளப்பான் வரும் சமயத்திலும், போகும் சமயத்திலும்!

சும்மா இருக்குமா குரங்கு மனம்!

வாழ்க்கை வாழ்வதற்கே! இப்படி அநுபவிக்காமல் அல்லல் படுவதற்கா? என்று உணர்ச்சியுடன் நினைத்துக் கொண்டேனே அவ்வளவுதான்! – துயரம் மட்டும்தான்.

"என்னமோ சொல்... நல்லது சொன்னால் ஆவதில்லை உனக்கு!"

"எது நல்லது? ஊட்டிக்குப் போக வேண்டாம், உட்கார்ந்த இடத்திலேயே அடைந்து இட என்பதா நல்லது? பாருங்கள்... பக்கத்து வீட்டுப் பரிமளா கார் வாங்கி விட்டாள். இன்னும் நீங்கள் ஸ்கூட்டரிலேயே இருங்கள்! எதிர் வீட்டு எச்சுமுப் பாட்டி கூட சீசனுக்கு ஊட்டி கிளம்பி விட்டாள்."

"சரி, சரி!" – அவர் எழுந்து விட்டார்.

"உனக்கு ப்ளவர் ஷோ பார்க்க வேண்டும். அவ்வளவுதானே?... அந்தக் கூட்டத்தில் என்றால் ஹோட்டல் எங்கிலும் தங்க முடியாது. பேசாமல் காலையில் 'ஸ்கூட்டரி'ல் கிளம்பி, இரவுக்குள் திரும்பி விடலாம்."

அப்பாடா! சாமி வரம் தந்து விட்டதே! இருந்தாலும் அரை மனசுதான்.

"குழந்தை ரூபாவை..."

நான் இழுத்தேன்.

"சரிதான். கூட்டத்தில் குழந்தையையெல்லாம் அழைத்துக் கொண்டு போக முடியாது... ஏதாவது 'இன்ஃபெக்ஷன்' வரும்!"

என்ன சுத்தமோ! அந்தக் குழந்தை படும் பாடு தெய்வம் அறியும்.

ஸ்கூலிலிருந்து வந்தவுடன் தலையிலிருந்து கால்வரை லைப்பாய் சோப்புப் போட்டு அவள் குளிக்க வேண்டும்.

'டான்ஸ் ஹௌஸ்'லிருந்து வீடு திரும்பியவுடன் இடுப்பிலிருந்து உள்ளங்கால் வரை இறுக்கத் தேய்த்துக் குளிக்க வேண்டும்! ஒரு நாளைக்கு நாலு குளியாவது அது குளிக்கும்! பாவம்! என்னைப் பற்றிக் கேட்கிறீர்களா? எனக்கும் இதே 'ரூல்'தான்! ஆனால் நான் கைகால் கழுவியாகி விட்டது என்று சொல்லிவிட்டு 'புரோக்ஷணம்' செய்து கொண்டு வந்து விடுவேன்!

இன்னும் குழந்தைக்கு அந்தச் சாமர்த்தியம் வரவில்லையே! ரொம்ப உண்மை பேசுவதாக எண்ணிக் கொண்டு சில சமயம் —

''அப்பா, இன்னிக்கு என் 'பிரண்ட்' வீட்டில் கீழே தடுக்கி விழுந்தேன் அப்பா'' என்பாள் பெருமையுடன்.

அன்று — இருவரும் வெந்நீர் அறையிலிருந்து வர ஒரு மணியாகும். அது கிடக்கட்டும். குழந்தையை விட்டு விட்டு ஊட்டி செல்வது எனக்கு உசிதமாகப் படவில்லை. இதற்கு நான் வற்புறுத்தினால் எங்கள் பயணம்கூடத் தடைப்பட்டாலும் படலாம்.

''சரி... அப்போ நானே கிளம்பலாமா?''

நான் வாயை மூடவில்லை.

''எங்கேம்மா போறே என்னே விட்டுட்டு நீயும் அப்பாவும்!''

அட கழுதை! தூங்கிக் கொண்டிருக்கிறது என்று நினைத்தேனே! எங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டா இத்தனே நேரம் இருந்திருக்கிறது!

ஐயோ! இந்த 'இரண்டும் கெட்டான்' குழந்தைகளிடம் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!

''ரூப்மா! அம்மாவும் நானும் டாக்டர் கிட்டே ஊசி போட்டுக்கப் போறோம்!''

குழந்தைக்குச் சந்தேகம்.

''அந்த டாக்டர் ஊட்டியிலா இருக்கா?''

அவர் விழித்தார்.

நான் ரொம்பச் சமர்த்தாகப் பேசினேன்.

''ஆமாண்டா கண்ணு! இந்த ஊர் டாக்டர் எல்லாம் ஊட்டிக்குப் போயிட்டா! அதனாலே அங்கே போய் ஊசி போட்டுக்கப் போறோம்!''

ஒரு கணம் யோசித்தாள் குழந்தை.

''அவாள்ளாம் திரும்பி வரவே மாட்டாளா அம்மா?''

''வருவாளே! நாளாகும். அதுக்குள்ளே அம்மாவுக்கு ஜுரம் அதிகமாகும்...''

''ஜுரத்தோட நீ எப்படிம்மா 'ஸ்கூட்டர்'லே போவே?''

''ஆமாம். எப்படிப் போவே?''

இவர் கண்களைச் சிமிட்டியபடி கேட்டார்.

எனக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

''நானும் உனக்குத் துணையா உங்ககூட வரேம்மா! நீ நம்ம சொந்தக்கார மாமா வீட்டிலே என்னே விட்டுட்டு டாக்டர்கிட்டே போய் ஊசி போட்டுக்கோ! என்ன?''

''சரி... சரி. அசடு மாதிரி பிடிவாதம் பிடிக்கக் கூடாது. நீ இப்போ 'பர்ஸ்ட் ஸ்டாண்டர்டு!' உனக்குப் பத்து புத்தகம் வாங்கியிருக்கு! யூனிபாரம்கூடத் தைத்தாச்சு! சமத்து இல்லே!''

நான் கெஞ்சினேன்.

ரூபா முகத்தைச் சுளித்தாள்.

''போம்மா நீ! இப்போ லீவுதானே? நானும் வரேன்மா!''

நான் பரிதாபமாக அவரைப் பார்த்தேன்.

''குழந்தை ஆசைப்படுகிறாள். ஆயிரம் செலவாகிறது. டாக்ஸியில் போய் விடலாம். எனக்கும் நிம்மதி.''

அவர் இரைய ஆரம்பித்தார்.

''இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கும் சமாசாரம்தான் உன்னுடையது! குழந்தையைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். அம்மாவிடம் அவள் சமர்த்தாக இருப்பாள். இந்த ஸீஸன் டயத்திலே ஒன்றுக்குப் பத்துக் கொடுத்து 'டாக்ஸி'யில் நான் வரத் தயாராக இல்லை. குழந்தையை நீதான் கெடுக்கிறாய்!''

என் கண்களில் கண்ணீர் முட்டி நின்றது. எங்கள் இருவரையும் இந்தக் கோலத்தில் பார்த்த குழந்தை பயந்திருக்க வேண்டும்.

''சரி... சரி! நீங்க ரெண்டு பேரும் சமத்தா ஊட்டி போயிட்டு வாங்கோ! நான் பாட்டியோட இருக்கேன். போறும்போது சண்டை போடக் கூடாது! என்ன?''

குழந்தையா பேசினாள்?

அட, என் கட்டித் தங்கமே!

உடனே பரபரப்புடன் ஊட்டிப் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தேன்.

ரொம்ப நாட்களாக என் மனத்தில் ஓர் ஆசை, கட்டுச் சாதம் கட்டிக் கொண்டு 'பிக்னிக்' போக வேண்டுமென்று. இந்த ஊட்டிப் பயணத்தில் அந்த ஆசையையும் நிறைவேற்ற நினைத்தேன். பாத்திரச் சீட்டில் வந்த டிபன் காரியர் இருக்கவே இருக்கிறது! இரண்டு அடுக்கில் புளியஞ்சாதம், இரண்டில் தயிர் சாதம், ஊறுகாய்!

இருவருக்கும் போதாதா என்ன? ஒரு வாட்டர் பேக், ஒரே ஒரு புடவை! அப்படியும் இப்படியுமாக ஒரு சிறிய 'ஏர் பேக்' நிறைந்து விட்டது. இவரோ 'ஸ்கூட்டரை' மெகானிக் உதவியுடன் சரிபார்த்துக் கொண்டிருந்தார். ஆபீஸுக்கும் லீவு போட்டு விட்டு!

மறு நாள் காலை ஆறு மணிக்கே கிளம்புவதாக ஏற்பாடு. என்னதான் குழந்தை சம்மதித்தாலும் அவள் தூங்கிக் கொண்டிருக்கும் போது கிளம்புவதுதான் நல்லது இல்லையா?

எதற்கும் இருக்கட்டும் என என் பணத்தில் இருநூறு ரூபாயை எடுத்து 'ஹேண்ட் பாக்'கில் திணித்துக் கொண்டேன். இவர் காய்கறிக்காகக் கொடுத்த பணத்திலிருந்து சேமித்த சேமிப்பு!

அவசரம் அவசரமாகக் குளித்துவிட்டு, அஜந்தாக் கொண்டையை அவசரத்தில் அலங்கோலமாகப் போட்டுக் கொண்டு ஸ்கூட்டரில் அமர்ந்தேன். குழந்தை எழுந்துவிடக் கூடாதே என்ற துடிப்பு.

அப்பாடா! ஸ்கூட்டர் கிளம்பிவிட்டது!

உள்ளத்தில்தான் எத்தனே உற்சாகம்!

இதோ கோவை எல்லை தாண்டிவிட்டது.

''ஐய்யோ!'' நான் அலறினேன்.

''ஏன் இப்படி அலறித் தொலைக்கிறாய்? நான்தான் யார்மீதாவது ஸ்கூட்டரை ஏற்றி விட்டேனுக்கும் என்று பயந்து விட்டேன்.''

''தயிர் சாதம், புளியஞ் சாதம் போட்டு வைத்திருக்கும் டிபன் காரியரை மறந்து வைத்துவிட்டு வந்து விட்டேன்.''

''சரி..சரி...ஒப்பாரி வைக்காதே. எடுத்து வரலாம்.'' — ஸ்கூட்டர் திரும்பியது.

எனக்கு ஏனோ பயம். நான் நினைத்தது வீண் போகவில்லை. வாசலில் எங்களை வரவேற்றதே குழந்தை ரூபாதான்!

''ஐயா!.... அம்மாவும் அப்பாவும் ஊட்டி போயிட்டு வந்துட்டா... என்னம்மா வாங்கி வந்தே?''


கால்கேட் டூத் பிரஷ்
மேலும் துப்புரவாக உங்கள்
பற்களை சுத்தம் செய்யும்படி
அமைக்கப்பட்டிருக்கிறது!
4 சைஸ்கள் • அடல்ட் • ஜூனியர் • சைல்ட் • பேபி
ஹார்ட் • மீடியம் • ஸாப்ட்
ஸ்டரிலைஸ் செய்யப்பட்ட நைலான் பிரிஸல்ஸ்கள் உறுதியாகப் பொருத்தப்பட்ட படியால் அதிக நாள் உழைக்கக்கூடியது!
COLGATE
NYLON TOOTH BRUSH
ADULT
HARD
புதியது
மிகவும்
கவர்ச்சியானது !!
கால்கேட்
சூபர் டீலக்ஸ்
டூத் பிரஷ்
கவர்ச்சியான, நவீன பெட்டியில்......விசேஷமான உருவமைப்புடன் அதிகமான பிரஸில்களைக் கொண்ட மூன்று வகையாக வேலைகளைச் செய்யும் டூத் பிரஷ்!
வாய் துர்நாற்றத்தை அகற்ற கால்கேட் காட்டும் வழி
TBG-15 TAM

''இல்லேடா, கண்ணு! இனிமேல்தான் போகப் போறேன். டிபன் காரியரை மறந்துட்டேன். அதை எடுக்க வந்தேன்...''

''ஜுரத்தோட தயிர் சாதம் சாப்பிடாதேம்மா!'' — குழந்தை எச்சரித்தாள்.

''என்ன ஒரு மணி நேரம் குழந்தையுடன் ராமாயணம்? சீக்கிரம் வா!'' அவர் வாசலில் ஸ்கூட்டரில் இருந்தபடியே இரைந்தார்.

என்னதான் சமர்த்துக் குழந்தையாக இருந்தபோதிலும் கிளம்பும்போது பார்த்தால் மனம் வருமா? அழ ஆரம்பித்தாள்.

அவளைச் சமாதானப்படுத்திப் பத்து ரூபாய் பிஸ்கட் டின் ஒன்றினை வாங்கித் தந்து விடை பெற்றோம். நல்ல வேளை. எங்கள் வீட்டுக்குப் பக்கத்துக் கடைக்காரர் தெரிந்தவரோ, பிழைத்தோமோ! இல்லாவிட்டால் இக்காலை நேரத்தில் யார் கடை திறப்பார்கள்?

ஆயிற்று. ஒரு வழியாக எங்கள் பயணம் மீண்டும் தொடங்கியது. மேட்டுப்பாளையம் போய்ச் சேர்வதற்குள் மணி எட்டுக்கும் மேலாகி விட்டது. நாங்கள் போட்ட திட்டம் எட்டு மணிக்கு ஊட்டியில் இருப்பது. ஆனால் நடந்ததோ?

'கல்லாறு கார்டன்ஸ்' தாண்டும்போது அருகருகே வளர்ந்த பாக்கு மரங்கள் கண்ணுமூச்சியாடியது போலத் தோற்றமளித்தது விந்தையாக இருந்தது. 'ஸ்கூட்ட'ரின் வேகத்துக்கு இணையாக அவைகள் நெளிந்து வளைந்தது என் சிந்தையைத் தொட்டன.

திடீரென என் கனவுகள் கலைந்தன.

ஸ்கூட்டர் திடீரென நின்றுவிட்டது.

''என்ன, என்ன?'' என்றேன் பதற்றமாக.

''ஒன்றுமில்லை. ஆணி ஏறிக் காற்று இறங்கி விட்டது பின் சக்கரத்தில்! 'ஸ்டெப்னி'யைப் போட வேண்டும்'' என்று கூறி பேண்டை மடித்து விட்டுக்கொண்டு குஸ்தி வீரன் மாதிரி 'பீல்டில்' இறங்கி விட்டார்! அவரைச் சுற்றி ஸ்பேனர் முதலிய ஸ்கூட்டரின் இயந்திர சாதனங்கள்.

''இந்தா... வண்டியைக் கொஞ்சம் பிடி.''

இது வேறு?

''ஏன் முகத்தைச் சுளிக்கிறாய்? முன் சக்கரமாக இருந்திருந்தால் உன் துணையே தேவையில்லை. நானே போட்டுவிடுவேன். கஷ்ட காலம் பின் சக்கரத்தில் ஆணி ஏறியிருக்கிறது.''

வேறு வழியின்றிச் சுற்று முற்றும் பார்த்தபடி வண்டியைப் பிடித்துக் கொண்டேன். பாழ்! சென்னையில் நான் அரும்பாடு பட்டு பிரிண்ட் போட்டு அலையாய்அலைந்து வாங்கிய அருமைப் புடவை பாழ்!

''ஸ்கூட்டருக்கு வலிக்காது. இறுகப் பிடித்துக் கொள்.''


நான் சலிப்புடன் பிடித்துக் கொண்டேன்.

எப்படியோ ஒரு மணி நேரத்தில் வண்டி தயாரானது.

''கோவை திரும்பலாமா? ஊட்டி போகலாமா?'' — இவர்தான் கேட்டார்.

வந்தது வந்தாயிற்று. தோல்வியுடன் திரும்ப மனமில்லை. ''ஊட்டிக்கே போகலாம்'' என்றேன்.

''முகத்தை ஏன் அப்படித் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறாய்? நானா ஆணியை 'டயரில்' ஏற்றினேன்? வெளி இடத்துக்கு



''அப்பா, அந்தப் பொம்மைத் துப்பாக்கியைக் காட்டி அவங்களைப் பயமுறுத்தினப்புறம், மறக்காம, பத்திரமா என் பொம்மைப் பெட்டியிலே வச்சுடு ....... ஆமா சொல்லிப்புட்டேன்.......!''

வந்தால் அப்படித்தான். நினைத்த மாதிரி நடக்குமா?''

நான் பேசவில்லை.

ஏன் நடக்காது? இவருக்கு அரை மனசு. அதுதான் இப்படி. அவரிடம் இதைச் சொல்ல முடியுமோ?

மணி கிட்டத் தட்டப் பத்தாகி விட்டது. எங்கள் பயணம் தொடர்ந்தது. மறுபடியும் திடீரென 'ஸ்கூட்டர்' நின்றுவிட்டது.

எனக்குச் சலித்து விட்டது. இவர் உதை உதையென்று உதைத்ததுதான் மிச்சம். ஊஹூம். அது நிச்சிந்தையாய்க் கிடந்தது.

இவருக்கு மூச்சு வாங்கியது. எனக்கே பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ''ப்ளாட்டினம் பாய்ண்ட் சரியில்லை'' என்று ஏதோ சொன்னார்.

எதுவானாலும் என்ன? என் தலைவிதி! நான் கிளம்பிய நேரம் சரியில்லை. அவ்வளவுதான்.

இவர் மீண்டும் ஸ்கூட்டரைக் குடைய ஆரம்பித்தார். பசி வயிற்றைக் கிள்ளியது.

நான் நிதானமாக டிபன் காரியரைத் திறந்தேன். எப்படியோ இதுவும் ஒரு 'பிக்னிக்' தானே?

''இந்தா... நீயே சாப்பிட்டு விடாதே... எனக்கும் ஒரு வாய் போடு. கையெல்லாம் ஆயில்!'' என்றார்.

நல்ல மனிதர்!

எப்படியோ சாப்பாடு ஆகிவிட்டது.

மணி அப்படியும் இப்படியுமாக பன்னிரண்டுக்கு மேலாகி விட்டது. நின்று நின்று நாங்கள் குன்னூர் அடைவதற்குள் மாலை மணி மூன்றுக்கு மேலாகிவிட்டது.

இனி 'ப்ளவர் ஷோ' ஷோதான்! அத்தனை பூக்களும் வாடி வதங்கிப் போயிருக்கும்!

உடம்பெல்லாம் ஒரே அசதி! குன்னூரில் நண்பர் ஒருவர் வீட்டில் தங்கிவிட்டு மறுநாள் ரயிலில் கிளம்பி ஊட்டி போவதென்று தீர்மானித்தோம்.

நண்பரின் வீட்டுக்கு இவர் ஸ்கூட்டரைத் தள்ளிக் கொண்டு வந்து சேர்த்தார். — ஆம், அது செத்த நிலை அடைந்து விட்டது. அந்த மேடு பள்ளமாகிய மலைப் பிராந்தியத்தில் ஸ்கூட்டரை எப்படித்தான் தள்ளிக் கொண்டு வந்து சேர்ந்தாரோ?

அங்கே....?

நண்பர் வீட்டில் இல்லே. பின்னே.... ஊட்டியில் 'பிளவர் ஷோ' நடக்கும்போது வீட்டில் இருக்கப் பைத்தியமா என்ன? நல்ல வேளை... தோட்டக்காரனாவது இருந்தான்.

வாசல் வராந்தாவின் சாவி அவனிடம் இருந்ததோ நாங்கள் பிழைத்தோமோ!

நண்பர் வீட்டுக்குக் காவலாக நாங்கள் இருவரும் அந்த வாசல் வராந்தாவில் குளிரில் முடங்கிக் கிடந்தோம்.

எனக்குக் குழந்தையின் நினைவுதான் வந்தது. அந்தப் பச்சைக் குழந்தையை ஏமாற்றி விட்டு வந்ததன் பலன்தான் இது என்று எண்ணிக் கொண்டேன்.

மறுநாள்—

முதலில் எழுந்ததும் குன்னூர் ஹோட்டல் ஏதோ ஒன்றில் காப்பி டிபன் சாப்பிட்டுவிட்டு ஊட்டிக்கு ரயில் ஏறினோம். ரயிலில் சென்ற போது இரு மருங்கிலும் தென்பட்ட இயற்கை வளங்கள் என் வெப்பத்தைச் சற்றுத் தணித்தன.

கண்கள் சென்ற பக்கமெல்லாம் கண்ணுக் கினிய காட்சிகள்! அடேயப்பா! ஊட்டியில் தான் எத்தனை கூட்டம்! முந்தின நாள் 'ப்ளவர் ஷோ'வுக்கு வந்த கூட்டங்கள் இன்னும் குறையவில்லே.

''அம்மாவுக்கு முதலில் தந்தி தர வேண்டும். நேற்று நாம் ஊர் திரும்ப வேண்டிய வர்கள். கவலைப்படப் போகிறார்கள்'' என்றார் இவர்.

இருவரும் போஸ்ட் ஆபீஸுக்குப் போனோம். திடீரென இவர் தேள் கொட்டி யது போல், ''அடாடா'' — எனக் கையை உதறினார்.

''என்ன?'' என்றேன் நான் பதற்றமாக.

''என் பர்ஸ்... அதில் பணம்..''

நான் பேசவில்லே. எங்கள் காலம் சரியில்லே. யாரைக் குற்றம் சொல்வது? நல்ல வேளை... என் 'ஹாண்ட் பாக்' நினைவு வந்தது.

கையில் ஹேண்ட் பாக் எடுத்து வந்த நினைவே இல்லையே!

ஆமாம். 'டிபன் காரியரை' மறந்துவிட் டுத் திரும்ப வீடு திரும்பியபோது ஹால் ஊஞ்சலில் வைத்துவிட்டேன்போலிருக்கிறது!

இதை இனி இவரிடம் சொல்லி என்ன பயன்? இப்போது ஊர் திரும்ப வழி?

இருவரும் குழப்பத்துடன் திரும்பி நடந் தோம். எங்கள் குழப்பத்தில் எதிரில் வந்த வருடன் இவர் மோதிக் கொண்டார்.

''ஸாரி!''

''ஸாரி!''

''அட நீயா?''

''அட நீங்களா?''

எனக்கு மூச்சு வந்தது. நேற்று இரவு குன்னூர் நண்பர் வீட்டில் வராந்தாவில் ஒண்டிக் கிடந்தோமே, அந்த வீட்டுச் சொந் தக்காரர் — இவர் நண்பர்.

பேசிக் கொண்டே நடந்தோம்.

ஊட்டியில் எங்கள் அனுபவத்தைக் கேட்டு விட்டு அவர் வருத்தப்பட்டார். எப்படியோ அவரிடம் நூறு ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு ஸ்கூட்டரையும் ஒப்பிக்கொண்டு ஊர் வந்து சேர்ந்தோம், இரண்டு நாட்கள் கழித்து.

''அம்மா!''

ரூபா என்னே அன்புடன் கட்டிக் கொண் டாள். ''ஊட்டியில் ஊசி போட்டுண்டியா?''

ஆமாம்.... நன்றாகப் போட்டுக் கொண் டேன்! என் மனம் கூறியது.

''அங்கே என்னம்மா பார்த்தே?''

''என் ஒவ்வொரு நினைவிலும் நீதானடி மகளே இருந்தாய். உன்னே விட்டு விட்டுப் போன பலனை அநுபவித்தேன்.''

''அம்மா...... ஒரே ஒரு ரகசியம்.''

''என்னடா, கண்ணு ?''

''நீ உன் 'ஹேண்ட் பேகை' இங்கேயே வச்சுட்டுப் போயிட்டியேம்மா?''

என் நெஞ்சு மகிழ்ச்சியில் நிரம்பியது.

''அட, என் தங்கமே.... நீ அதை எடுத் துப் பத்திரமா வைச்சிருக்கியா?''

''ஆமாம்மா.... பத்திரமா வைச்சிருந் தேன். ஆனா நீ அன்னிக்கு வரவே யில்லே. பணத்துக்கு வெளியூர்லே என்ன கஷ்டப் படறியோன்னு.......''

''என்ன பண்ணினே?''

''அந்த 'ஹேண்ட்பேக்கிலே' இருந்து பணத்தை எடுத்துக் கவர்லே போட்டு ''ரூபா மம்மி — ஊட்டி'' — அப்படீன்னு எழுதி நம்ம தெருக் கோடியிலே இருக்கே ''போஸ்ட் பாக்ஸ்'' அதிலே அந்தப் பணத் தைப் போட்டுட்டேன். நீகூட அப்படித் தானே கதை யெல்லாம் அனுப்புவே? பாட் டிக்குக் கூடத் தெரியாது! பணம் வந்துதா?''

குழந்தை ரொம்ப வேதனையுடன், தான் செய்தது தவறோ என்ற அச்சத்துடன் பேசினாள். என் இதயம் நிரம்பி வழிந்தது.

'அட, என் செல்வமே! நான் உன்னே விட்டு ஒரு காத தூரம் தள்ளி உன்னே மறந்து இருந்த போதும் கூட உனக்கு என் நினைவு தானா? இந்தச் சுயநலக்கார அம்மாவின் நினைவுதானா ? எனக்காக உன் மலர்ப் பாதங்கள் நோக 'போஸ்ட்' செய்ய நடந்து போனாயா என் தங்கமே! உன் சின்னஞ்சிறு விரல்கள் நோக உன் 'பாஷையில்' எனக்கு அட்ரஸ் எழுதினயா என் கண்மணியே!'

என் நெஞ்சம் நிரம்பியது. கண்கள் பனித் தன. உள்ளம் துள்ளியது. உதகையின் உச்சியில்கூட இந்த இன்பம் கிடையாதே!

உல்லாசத்தைத் தேடி உதகையின் உச் சிக்கு ஓடினேனே.... பைத்தியக்காரி!

இதோ என் கண் முன் உல்லாச உலகமே சின்னஞ்சிறு வடிவில் சிரித்து நிற்கிறதே !

''ஏம்மா, அழறே? பணம் வரல்லியா?''

இருநூறு ரூபாயின் இழப்பில் இன்பத்தின் இரகசியத்தைப் புரிந்து கொண்டவள் அல் லவா நான் ! குழந்தையின் சின்னஞ் சிறு மனம் நோகலாமா ?

''வந்துதடா ராஜா.... பணத்தோட நல்ல குணமும் வந்தது.''

''எனக்கு என்னம்மா வாங்கி வந்தே ?''

அவளை உச்சி முகர்ந்தேன் நான்.

''ரூப் கண்ணு.... உனக்கு ரொம்பரொம்ப நல்ல அம்மாவா, உன்னே ஒரு நிமிஷம்கூட விட்டுப் பிரியாத அம்மாவா ஒரு அம்மாவை வாங்கி வந்திருக்கேன்.''

என் அன்பின் இறுக்கத்தில் குழந்தை திணறினள். இதுதான் ஊட்டி! இதுதான் காஷ்மீர் !




- குழப்ப வேண்டாம்
- மாணவர்கள் கவனிக்க
- உடனே மாற்றுங்கள்

நான் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்குப் பணம் கட்டியிருந்தேன். எல்லா மாணவர்களுக்கும் போலவே எனக்கும் ஹால் டிக்கெட் அனுப்பினார்கள் கல்வி இலாகாவினர். நான் விவசாயத் தொழில் பிரிவு வகுப்பைச் சேர்ந்தவன். என்னுடன் பரீட்சை எழுத இருந்த விவசாய மாணவர்களுக்குப் பரீட்சை எண் 27,000 முதல் 29000 வரை வந்தது. ஆனால் என் ஒருவனுக்கு மட்டும் 3250ஏ என்றும் 'சென்டர்' எனக்கு மட்டும் சேலம் குகை ஹைஸ்கூல் என்றும் கண்டிருந்தது. இதனால் நானே சந்தேகப்பட்டு எனக்கு சென்டர் போட்டுள்ள சேலம் குகை உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று விசாரித்தேன். அங்கு என் பெயர், சர்டிபிகேட் நெம்பர் போன்றவை சரியாகவே இருந்தன. ஆனால் நான் எழுத வேண்டிய பரீட்சைக்குப் பதில் சம்ஸ்கிருதம், 'காம்பொஸிட் மேத்ஸ்' போன்ற பரீட்சைகள் அங்கு நடைபெறவிருந்தன. கல்வி இலாகாவுக்கு நெம்பரையும், சென்டர் போட்டுள்ள இடத்தையும் மாற்றிக் கொடுக்கும்படி கேட்டுத் தபால் எழுதினேன்.

தேர்வு நவம்பர் 2-ந் தேதி. ஆனால் நவம்பர் 1ந் தேதி வரை பதில் வரவில்லை.

என்னுடன் பரீட்சை எழுத விருந்த விவசாயப் பிரிவு மாணவர்களுக்குச் சேலம் கோகுலநாத இந்து மகாஜன உயர்நிலைப் பள்ளியில் தேர்வு நடக்கவிருந்தது. ஆகையால் மேற்கண்ட விவரங்கள் யாவையும் அப்பள்ளித் தலைமை ஆசிரியரிடம் கூறினேன். அதற்கு அவர் 'நீ போய் உனக்கு சென்டர் போட்டுள்ள பள்ளித் தலைமையாசிரியரிடம் ஓர் அத்தாட்சிக் கடிதம் வாங்கி வா. நீ இங்கு பரீட்சை எழுத அனுமதிக்கிறேன்' என்று கூறினார். அப்படியே செய்தேன். மறு நாள் பரீட்சை எழுதப் பத்து நிமிடம் இருக்க எனக்குக் கல்வி இலாகாவிலிருந்து ஒரு தபால் வந்தது. அதில் நீ 'அகடமிக் கோர்ஸை'ச் சேர்ந்தவன். 'நாமினல் ரோலில்' உள்ளபடியே நீ பரீட்சை எழுத வேண்டும் என்று கண்டிருந்தது.

இந்தத் தபாலைத் தலைமையாசிரியரிடம் காண்பிக்காமல் பரீட்சை எழுதினேன். தேர்வு எழுத ஆவன செய்த அப்பள்ளித் தலைமையாசிரியரை நான் என்றென்றும் மறவேன்.

தேர்வு முடிவுகள் வெளிவந்தன. அதில் தொழில் பிரிவு என்று போட்டு நெ. 27000 முதல் 29000 முடியவே ரிசல்ட் வந்தது. ஆனால் என்னுடையது 3250 ஏ. இதனால் என்னுடைய ரிசல்ட் சர்டிபிகேட் புத்தகம் வந்துதான் தெரிந்தது. பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும் என்பார்கள். அதைப் போல நான் ஆங்கிலத்தில் சில எண்கள் குறைவாக வாங்கி முதல் முறை தவற நேர்ந்தது. மறுமுறையும் அவ்வாறே நேர்ந்து விட்டது. காரணம்: அன்று காலை கல்வி இலாகாவினர் எனக்கு அனுப்பிய தபாலைப் பார்த்ததே. அன்றுதான் முதல் தேர்வு - ஆங்கிலம்.

தொப்பூர்
27–5–66 க. கருமாரன்

"கணக்கு சரியா?" என்ற தலைப்பில் பெருக்கல் கணக்கு சரிபார்க்கும் முறையை வெளியிட்டிருக்கிறீர்கள். மகிழ்ச்சி. இருந்தாலும் அந்த முறை முற்றிலும் சரியானது என்று சொல்ல முடியாது. சில சந்தர்ப்பங்களில் நாம் தவறாகப் போட்ட கணக்கைக் கூடச் சரியென்று எண்ண வைத்துவிடும். மாணவர்கள் ஆரம்பத்திலேயே கணக்கை நிதானமாகவும், சரியாகவும் போடுவது தான் சிறந்தது.

சென்னை–33 பி.எச். ராமமூர்த்தி
29–5–66 (பள்ளி ஆசிரியர்)

இராமநாதபுரம் மாவட்டத்துக்கான வேலை தேடித் தரும் அலுவலகம், செஷன்ஸ் கோர்ட், கலெக்டர் அலுவலகம் போன்ற முக்கிய அலுவலகங்கள் அனைத்துமே கடந்த பல ஆண்டுகளாக மதுரையிலேயே நடத்தப்படுவது யாவரும் அறிந்ததே. ஆனால் மேற்படி அலுவலகங்களை இராமநாதபுரம் மாவட்டத்தையே சேர்ந்த ஊர்களில் அமைப்பது அந்த மாவட்ட மக்களுக்கு மிகுந்த பயனாகவும், துணையாகவும் இருக்கும் என்பது யாவரும் நெடுநாட்களாகவே உணர்ந்து ஒப்புக் கொண்ட உண்மையாகும். இருப்பினும் எந்த ஊர்களில் அவற்றைப் பெயர்த்து அமைப்பது என்ற பிரச்னை பரிசீலிக்கப்படும்போதெல்லாம் வதந்தி நிறைந்த புகார் மனுக்களும், கட்சிக் கமிட்டிகளின் தீர்மானங்களும், மக்கள் பிரதிநிதிகளில் சிலரின் ஊராசைப் போரிகளும் குறுக்கே பாய்ந்து குழப்பச் சூழ்நிலையை உருவாக்கி வருவதால், ஊர்களின் தகுதிச் சிறப்பு புலப்படாமல் பல்துறை மக்களும் இன்னும் துயர்ப்படும் முறையில் மதுரையிலேயே அவை நீடித்து நடைபெறுகின்றன.

இனியும் இராமநாதபுரம் மாவட்டத்துக்கான அலுவலகங்களைப் பிற மாவட்டத்தைச் சேர்ந்ததும், தொலைவில் உள்ளதுமான மதுரையிலேயே வைத்துக் கொண்டிராமல் பல வசதிகளைக் கொண்டுள்ள மானாமதுரையிலேயே அமைப்பது பலவிதங்களிலும் அனைவருக்கும் சௌகரியமாக இருக்கும்.


மானாமதுரை
24–5–66 ஆ. தாண்டவன் பி.ஏ.

Edited printed & published by T Sadasivam on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10



# உள்ளம் கவரும் சுகந்தமுள்ள உன்னத டால்க்

பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்கம் பவுடர் உபயோகித்து நாள் முழுவதும் நீடிக்கும் குளுமையையும், மனோ உல்லாசத்தையும் பெறுங்கள்




ஸ்னானத்திற்குப் பின் அனுபவமாகும் புத்துணர்ச்சி நீடித்து நிற்க, நாள் முழுவதும் நறுமணத்துடன் திகழ, பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்கம் பவுடர் உபயோகியுங்கள். இதமான வாசனையுள்ள இந்த டால்கம் பவுடர் வியர்வையை விரைவில் உறிஞ்சி, எல்லாக் காலநிலைகளிலும், உங்களை நாள் முழுவதும் குளுமையுடனும் மனோ உல்லாசத்துடனும் வைக்கும். பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்கம் பவுடர் குடும்பத்தினர் அனைவருக்கும் ஏற்றது.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)

JWT-P-1596

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

# ENOUGH TO SCUTTLE A FLEET!






## A WISE OPERATOR CAN STILL MAKE HIS PROFITS

Transport Operators have their own fill of cares — rising costs, high taxes, bad debts etc. But many can choose the road to real economy by choosing Simpsons' genuine Perkins spare parts for replacements. Keeping costs down — that is done by sticking solely to Simpsons' genuine spare parts for Perkins Engines, guaranteed for peak performance and long life.

It is always good policy to buy the best — Perkins: that is why Simpsons' genuine spare parts for Perkins Engines are always insisted upon by wise fleet owners in order to preserve their profits. All goes well, if you go with Perkins.

Simpson & Co. Ltd.

Head Office: 202, Mount Road, Madras-2.
Branches: OOTACAMUND - BANGALORE - TIRUCHIRAPALLI - SECUNDERABAD